janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

நிறுவனர்: ப. ஜீவானந்தம்

மலர் 85 | 2023 மார்ச் 19 - மார்ச் 25 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 50






மேதகு ஆளுநரே பறித்த உயிர்கள் போதாதா? ப 02



உக்ரைன்–ரஷ்ய போர்... முடிவே இல்லையா? ப 03



பா.ஜ.க.விடம் இருந்து அ.இ.அ.தி.மு.க.வை காப்பற்றுவாரா எடப்பாடி? ப 06

## சமூகப் பாதுகாப்பும், பணிப் பாதுகாப்பும் கிடைத்திட

# 15,000க்கும் மேற்பட்ட கட்டுமானத் தொழிலாளர்கள் 1,150 வி.ஏ.ஓ. அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம்

**கட்டுமான தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பும், சமத்துவமும் கிடைத்திட, கட்டுமான தொழிலாளர் நல வாரியத்தால் அறிவிக்கப்பட்ட நோக்கங்களை செயல்படுத்திடக் கோரி தமிழ்நாடு முழுவதும் தமிழ்நாடு ஏஐடியுசி கட்டட தொழிலாளர் சங்கத்தின் சார்பில் 15,000க்கும் மேற்பட்டோர், 1,150 கிராம நிர்வாக அலுவலகங்கள் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர். கிராம நிர்வாக அலுவலர்கள் மூலம், தமிழ்நாடு முதலமைச்சருக்கு கோரிக்கை முறையீடு சர்வதேச மகளிர் தினமான 2023 மார்ச் 8 அன்று நடைபெற்றது.**




தமிழ்நாட்டில் சுமார் 60 லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கட்டிட கட்டுமான பணிகளை நம்பி வாழ்ந்து வருகிறார்கள். இவர்களின் பணி பாதுகாப்புக்காகவும் சமூக பாதுகாப்புக்காகவும் தனிச்சட்டம் இயற்றப்பட்டுள்ளதோடு, தனி நல வாரியமும் தனி நல நிதியும் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது. இருந்த போதிலும், நல வாரியத்தின் நோக்கங்களாக அறிவிக்கப்பட்டவற்றில் மிகவும் முக்கியமானவைகளான மருத்துவ வசதியும், விபத்து சிகிச்சையும், சிகிச்சைக்கான பாதுகாப்பும், வேலையில்லா காலத்திற்கு நிவாரணமும் கேள்விக்குறியாகவே இருந்து வருகிறது.

விபத்து மரணம், இயற்கை மரண குடும்ப நிதி, குழந்தைகள் கல்வி, திருமணம் உள்ளிட்டவைகளுக்கு தமிழகத்தில் உதவி நிதி வழங்கப்பட்டு வருகிறது. இது போதுமானதாக இல்லை.

1994 ஆம் ஆண்டு நல வாரியம் தொடங்கப்பட்டபோது இ.எஸ்.ஐ. மற்றும் பிராவிடண்ட் பண்ட் திட்டங்கள் அமல்படுத்துதல் வாரியத்தின் நோக்கங்களில் ஒன்றாக அறிவிக்கப்பட்டது. கடந்த காலத்தில் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களும் நோயால் பாதிக்கப்பட்டவர்களும், சரியான போதுமான சிகிச்சை இன்றி பல்லாயிரக்கணக்கானவர்கள் மாண்டு போனார்கள். உடல் உறுப்புகளை இழந்தவர்கள் பல நூற்றுக்கணக்கானோர் வாழ வழி இன்றி வாடி வருகிறார்கள். இவர்கள் வாழ்வதற்கு நலவாரியத்தால் எந்த உதவியும் அளிக்கப்படுவதில்லை. தொழிலாளர்கள் இறந்து போனால் மட்டுமே குடும்பத்திற்கு உதவி நிதி வழங்குவது என்பது பொருத்தமானதாக இல்லை. இ.எஸ்.ஐ. திட்டம் அமல்படுத்தப்படும் வரை இ.எஸ்.ஐ. திட்டத்தில் வழங்கப்படும் தொழிலாளிக்கான மருத்துவ உதவி, குடும்ப மருத்துவம் விபத்து சிகிச்சை, சிகிச்சைக்கான நிவாரணம் உள்ளிட்ட பலன்களை வாரியம் மூலமாக வழங்கிட வேண்டும்.

60 வயது நிறைவடைந்த கட்டுமான தொழிலாளிக்கு மாதம் ரூபாய் ஆயிரம் மட்டுமே ஓய்வூதியமாக வழங்கப்படுவது முதுமை காலத்தில் வாழ்க்கைச் செலவுகளுக்கும், மருத்துவச் செலவுகளுக்கும் போதுமானதாக இல்லை. ஓய்வூதியம் உயர்த்தி வழங்கப்பட வேண்டும்.

தமிழ்நாட்டில் கட்டட கட்டுமான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு குறைந்துவிட்டது. வெளிமாநில தொழிலாளர்கள் குறைந்த கூலிக்கு அதிக நேரம் வேலை செய்வதற்கு தயாராக வந்துள்ளது இதற்கு காரணமாகும் .எனவே அனைத்து வேலைகளிலும் 90% பணிகளில் உள்ளூர் தொழிலாளர்களுக்கு வேலை உத்தரவாதம் செய்து தனி சட்டம் இயற்ற வேண்டும்.

பெண் கட்டுமான தொழிலாளர்களுக்கு பணியிடத்திலும் வேலை ,வீட்டிலும் வேலை, சத்தான உணவு உண்ணாதது, போதுமான






ஓய்வு இல்லாத காரணங்களால் 50 வயதிலேயே முதுமை ஏற்பட்டு விடுகிறது. எனவே பெண் கட்டுமான தொழிலாளர்களுக்கு 50 வயதில் ஓய்வூதியம் வழங்கிட வகை செய்திட வேண்டும்.

பெண் கட்டுமான தொழிலாளர்களுக்கு வெறும் 18000 ரூபாய் மட்டுமே பேரு கால பலனாக வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டின் தொழில் கூடங்களிலும், பல்வேறு தொழில்களிலும் பணிபுரியும் பெண் தொழிலாளர்களுக்கு ஆறு மாத காலம் பேரு கால விடுப்பும், சம்பளமும் வழங்கப்பட்டு வருகிறது .கட்டுமான தொழிலிலும் அதே போல் மாதம் 15,000 சம்பளம் என்ற அடிப்படையில் ஆறுமாத சம்பளமாக 90 ஆயிரம் ரூபாயும், 6 மாத பேருகால விடுப்பும் வழங்கப்பட வேண்டும். பதிவு பெற்ற தொழிலாளர்களின் குழந்தைகளின் முழு கல்விச் செலவும் வாரியமே ஏற்கும் வகையில் கல்வி உதவித்தொகைகள் உயர்த்தி வழங்கப்பட வேண்டும்.

தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட வீடு இல்லாத கட்டுமான தொழிலாளர்களுக்கு வீடு வழங்கும் அல்லது வீடு கட்ட 4 லட்சம் ரூபாய் பணம் வழங்கும் திட்டத்தில் விண்ணப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் முழுவதும் பல்வேறு காரணங்களால் திருப்பி அனுப்பப்படுகிறது. வீடு அல்லது வீடு கட்ட நிதி உதவி கேட்டு விண்ணப்பிக்கும் நடைமுறையை மிகவும் எளிமையானதாக மாற்றி அனைவருக்கும் விரைவில் வீடு அல்லது வீடு கட்டும் நிதி உதவி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நல வாரியத்தின் நிதியை வங்கியில் டெபாசிட் செய்து அதற்கு கிடைக்கும் வட்டியில் நலவாரியம் செயல்பட்டுவருகிறது. ஆண்டுக்கு 720 கோடி ரூபாய் நலநிதி வசூலிக்கப்படும் நிலையில் தொழிலாளர்களுக்கான நலத்திட்ட பலன்களுக்கு மிகவும் குறைந்த அளவே செலவிடப்படுகிறது. கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் தன்னாட்சி அதிகாரம் கொண்ட முத்தரப்பு வாரியமாக செயல்பட தமிழக அரசு அனுமதிக்க வேண்டும் .

கடந்த 2021 டிசம்பர் 7ஆம் தேதி சென்னை ராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் நடைபெற்ற கட்டுமான தொழிலாளர்களின் கோரிக்கை மாநாட்டில், தமிழ்நாடு அரசின் சார்பில் வந்து கலந்து கொண்ட தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வே.கணேசன் மாநாட்டில் தொழிலாளர் பிரதிநிதிகளால் வழங்கப்பட்ட கோரிக்கைகளை மாநாட்டு மேடையிலேயே முழுவதும் வாசித்து அனைத்து கோரிக்கைகளும் நியாயமானவை என்றும், இந்த அரசு இந்த கோரிக்கைகள்

தொடர்ச்சி 4ம் பக்கம்

கட்சிக் கடிதம்

# மேதகு ஆளுநரே பறித்த உயிர்கள் போதாதா?



போர்க்குணமிக்க தோழர்களே!

**சூதாட்டம் நம்மில் பெரும்பாலானோருக்குத் தெரியாது. கேள்விப்பட்டுள்ளோம். மகாபாரதக் கதையில் தர்மன் சூதாடினான்; நாட்டையே இழந்தான்; பின் தன்னையே இழந்தான். அதன் பின்னர் தனது தர்மபத்தினியையும் சூதாட்டத்தால் இழந்தான். பின் 12 ஆண்டுகள் வனவாசம், ஓராண்டு அஞ்ஞான வாசம் சென்று மீண்டு வந்தான்.**

**நிபந்தனைகள் முடிந்த பின்னரும் ராஜ்யத்தை கௌரவர்கள் பாண்டவர்களுக்குத் தரவில்லை. அதனால் போர் நடைபெற்றது என்பது மகாபாரதத்தின் கதை சுருக்கமாகும்.**

பாரத கதையை நன்கு படித்தவர்கள் மட்டுமல்ல, அதுவே தங்களின் வழிகாட்டியாக, வேத வாக்காக அச்சு பிறழாமல் பின்பற்றி வருபவர்களாக காட்டிக் கொள்கிறார்கள் ஒன்றிய ஆட்சியாளர்கள். அவர்களின் ஆணையை ஏற்று அங்குலம் கூட தவறாமல் நிறைவேற்றிட தமிழ்நாட்டிற்கு ஆளுநராக நியமனம் செய்யப்பட்டவர் தான் ஆர்.என்.ரவி.

அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டும், மதித்தும், பாதுகாத்தும் செயல்பட வேண்டிய ஆளுநர், மாறாக மீறியும், மிதித்தும், புறக்கணித்தும் திமிரோடு செயல்பட்டு வருகின்றார். அவர் இருக்கும் இடம் மிக உயர்ந்த இடம். கண்ணியமிக்க இடம். உயர்ந்த இடத்தை, கண்ணியத்தை காக்கத் தவறி நான்காம் தர இழி செயலை மேற்கொண்டு வருகின்றார்.

அவர் இழிவாக நடப்பது அவரது விருப்பம் என்று, வீணாப்போன அண்ணாமலை ஆளுநருக்கு ஆதரவுக் கரம் நீட்டுகின்றார். இத்தகைய இழி பிறவிகளின் பொறுப்பற்ற செயல்பாட்டால் மதிப்புமிக்க உயிர்கள் பறிபோய் கொண்டுள்ளது. விலைமதிப்பற்ற உயிர்களை துச்சமென கருதுகின்றார்கள்.

கால்நடைகளின் உயிர்கள் குறித்து கவலை கொள்ளும் ஆளுநரும், அவரது அடி வருடிகளும் விலை மதிக்கவொண்ணா மனித உயிர்கள் குறித்து கவலைப்படவில்லை.

ஒன்றா? இரண்டா? இதுவரை 44 உயிர்கள் பலியாகி இருக்கின்றன. இவ்வெண்ணிக்கை என்பது வெளியில் தெரிந்தது. வெளித் தெரியாமல் மாண்டு மடிந்த உயிர்கள் எத்தனை? என்பது எவருக்குத் தெரியும்.

தற்போது நடைபெறுகின்ற சூதாட்டம் தர்மன் காலத்து சூதாட்டம் அல்ல. மாறாக விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியால் கண்டறியப்பட்ட இணைய சூதாட்டம்.

இச்சூதாட்டத்தில் பங்கு பெறுபவர்கள் சாமானியர்கள் அல்ல. எழுதப் படிக்க தெரியாதவர்கள் அல்ல; ஏழைகளும் அல்ல. மாறாக மெத்தப் படித்திட்ட மேதாவிகளும், ஓரளவிற்கு செல்வ வசதி மிக்க சீமான்களும், இணைய வழி சூதாட்டத்தை மேற்கொண்டால் லட்சம், பல லட்சம், கோடிகளை சுருட்டலாம் என்கிற மினிமினுக்கும் விளம்பரத்தை நம்பி தங்களை ஈடுபடுத்திக் கொள்கிறார்கள்.

சிரமப்பட்டு சேமித்த தொகையை செலுத்தி அதனை இழந்த பின்னர், வீட்டில் உள்ள பொருட்களையும் குறைந்த விலைக்கு விற்று அல்லது அதிக வட்டி குறித்து கவலை கொள்ளாது கடன் பெற்று, அதனை இழந்து இனி என்ன செய்வதென்று அறியாது குடும்பத்தாரின் கடுகடுத்த முகபாவனை கண்டு, தலை நிமிர்ந்து நிற்க இயலாமல் வாடிய முகத்தோடு வீட்டை விட்டு வெளியே வந்தால், வட்டிக்குக் கொடுத்தவன் வரவேற்பைக் காண நேர்ந்து, வழியேதும் அறியா அப்பாவிக்கு கொடிய விஷமருந்து பாட்டில்களும், தூக்கில் தொங்க கயிறும், மரக்கிளைகளும் ஆதரவுக் கரம் நீட்டுகின்றது. இவை போதாது என்று வங்கக் கடலும் வா மகனே என்று வாரி அழைத்துக் கொள்கிறது.

சூதாட்ட கொடுமையால் சொந்த மாநிலத்து மக்கள் உயிர் பறிக்கப்படுகின்றதே என்று கவலை கொண்ட அதிமுக அரசு தடைச் சட்டம் நிறைவேற்றியது.

சூதாட்ட சூறாவளி கம்பெனி முதலாளிகள் சும்மா இருப்பார்களா? நீதிமன்றத்தை நாடினார்கள்.

நீதிமன்றம், சட்ட முன்வடிவு சரியாக தயாரிக்கப் படவில்லை எனக் கூறி அதிமுக அரசின் சட்டத்தை நிராகரித்து, சூதாட்டம் நடத்துபவர்களுக்கு சாதகத் தீர்ப்பு வழங்கியது. சூதாட்டக்காரர்கள் நீதிமன்ற தீர்ப்பை தலைவணங்கி ஏற்று இனிப்பு வழங்கி கொண்டாடி மகிழ்ந்தனர்.



ஆட்சி மாறியது, திமுக அரசு பொறுப்பேற்றது. அவசர கோலமின்றி இணைய வழி சூதாட்டம் குறித்து ஆய்வு செய்திட ஓய்வு பெற்ற நீதிமான் கே.சந்துரு தலைமையில் குழு அமைத்தது.

அக்குழு அவசரம் காட்டாமல் பலரிடம் கருத்துக் கேட்டது. 10735 பேரிடம் கருத்துக் கேட்டதில் 10708 பேர் சூதாட்டத்தை தடை செய்திட வேண்டும் என்றும், வெறும் 27 பேர் தேவையெனவும் கருத்து தெரிவித்துள்ளனர்.

இதனை அடிப்படையாகக் கொண்டு விரிவான அறிக்கையை அரசுக்கு அளித்தது.

நீதியரசர் கே.சந்துரு தலைமையிலான குழுவின் பரிந்துரையை பரிசீலித்து அமைச்சரவைக் கூட்டத்தில் இணைய வழி சூதாட்டத்தை தடை செய்திடும் அவசர சட்டத்தை நிறைவேற்றி ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைத்தது.

ஆளுநர் அவசரச் சட்டத்தை வரி விடாமல் நன்கு படித்து, அறிந்து, புரிந்து சட்ட நுணுக்கங்கள் அனைத்தையும் அலசி ஆராய்ந்து அவசரச் சட்டத்திற்கு 1.10.2023 ஆம் நாள் ஒப்புதல் அளித்தார்.

இவ்வாறு ஒப்புதல் அளித்திட்ட அறிவாளி ஆளுநர் சத்தியமாக ஆர்.என்.ரவி தான்.

ஆளுநரின் ஒப்புதலைப் பெற்ற அரசு அதனை 03.10.2022 ல் அரசிதழில் வெளியிட்டது. அவசரச் சட்டம் அமலுக்கு வந்துவிட்டது.

அவசரச் சட்டத்தை முழு சட்டமாக சட்டப்பேரவையில் 17.10.2022ல் ஒருமனதாக நிறைவேற்றி மேதகு ஆளுநர் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அவசரச் சட்டத்திற்கு மறுப்பளிக்காது ஒப்புதல் வழங்கியவர், முழுமையான சட்ட வடிவத்திற்கு ஒப்புதல் வழங்காமல் கால தாமதப்படுத்தினார். கண்டனக் குரல்கள் எழுந்தன.

இரு மாதங்கள் கடந்து கும்பகர்ண தூக்கத்தில் இருந்து மெல்ல எழுந்த ஆளுநர், சட்டத்தில் எழுந்திட்ட சந்தேகங்களுக்கு அரசிடம் விளக்கம் கோரினார்.

அரசும் தாமதம் செய்யாமல் ஆளுநர் கோரிய ஐயப்பாடுகளுக்கு ஐய்யம் திரிபுர உரிய விளக்கத்தை ஆளுநர் கடிதம் கிடைத்திட்ட 24 மணி நேரத்தில் அளித்தது.

அரசு விளக்கமளித்தது மட்டுமல்ல, மாண்புமிகு சட்ட அமைச்சர் ரகுபதி அவர்கள் நேரடியாக ஆளுநர் மாளிகை சென்று, அன்னாரை சந்தித்து விரைவாக ஒப்புதல் அளிக்குமாறு கேட்டுக் கொண்டார். ஆளுநரும் மறுக்கவில்லை அன்று.

பின்னர் ஆளுநர் இணைய சூதாட்டம் நடத்தி கோடி, கோடியாய் கொள்ளையடித்து கல்லாப்பெட்டியை நாள்தோறும் நிரப்பி மகிழ்வதுடன், பலரின் உயிர் பலிக்கு காரணமான நிர்வாகிகளை ஆளுநர் மாளிகைக்கு இன்முகம் காட்டி அழைத்தது ஏன்? அவர்களிடம் ஆளுநர் என்ன பேசினார்? என்ன கேட்டார்? அவர்கள் ஆளுநரிடம் என்ன சொன்னார்கள்? என்ன கொடுத்தார்கள்? என்பது இன்றுவரை புரியாத புதிராக உள்ளது.

ஆளுநரின் நம்பகத்தன்மை...? நீண்ட இடைவெளிக்கு பின்னர் கடந்த 08.03.2023ல் ஒட்டுமொத்தமாக மசோதாவை அரசுக்கு திருப்பி அனுப்பிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏன்?

இணைய வழி சூதாட்டத்தை தடை செய்திட, மறுத்திட காரணம் என்ன? ஆளுநரை நிர்பந்தித்தது யார்?

மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை என தற்போது ஏன் கூற வேண்டும்?

அக்டோபரில் தயக்கமின்றி அவசரச் சட்டத்திற்கு கையொப்பம் இட்ட ஆளுநர் மார்ச் மூன்றாம் நாள் மறுத்திட்ட காரணம் என்ன?

கடந்த நான்கு மாத காலத்தில் மட்டும், சட்டம் நிறைவேற்றி ஆளுநருக்கு இடைக்காலத்தில் மட்டும் ஒரு டஜன் உயிர் பலிபோய் உள்ளதே – ஆளுநரின் இதயத்தை இது வருட வில்லையா?

இந்நாள் வரை 44 பேர் உயிர் பறிக்கப்பட்டுள்ளதே, இதற்கு ஆளுநரின் இதயம் துடிக்கவில்லையா?

இன்னும், இன்னும் எத்தனை எத்தனை உயிர்களை காவு வாங்க காத்துக் கொண்டுள்ளார் ஆளுநர்?

ஒரு பக்கம் விவசாயிகள் தற்கொலைகள் தொடர்கின்றன.

மறுபக்கம் வேலையில்லாமல் பரிதவிக்கும் இளைஞர்களின் தற்கொலைகள் தொடர்கின்றன.

இவைகள் போதாது , போதாது என்று சூதாட்டத்தின் மூலமாக தற்கொலைகள் தொடரத்தான் வேண்டுமா?

ஆளுநரின் அடாவடித்தனத்திற்கு முடிவே இல்லையா?

முடிவற்ற எதுவும் இல்லை. மக்களின் பேரெழுச்சி அனைத்திற்கும் முடிவு கட்டும்.

ஆம், நமது இளைஞர் பெரும்படை, மார்ச் 23ஆம் நாள், மாவீரன் பகத்சிங் நினைவு நாளில், எட்டு திசையும் எதிரொலிக்கும் பரப்புரை பிரச்சாரப் பேரியக்கத்தை நான்கு முனைகளில் இருந்து மேற்கொள்ள உள்ளனர்.

சிங்காரவேலரின் சிங்காரச் சென்னை, விடுதலைக்கு வித்திட்ட வேதாரண்யம், தொழில் நகரமாக உருவெடுத்துவரும் ஓசூர், வங்கக் கடலும், அரபிக் கடலும் சங்கமிக்கும் குமரிமுனை ஆகிய நான்கு முனைகளில் இருந்து போர்ப் படையாக புறப்பட உள்ள இளைஞர் பெரும்படை எங்கே எனது வேலை? எனக் கேட்டு விண்ணதிர முழக்கமிட்டு வரும் பெரும்படை, ஆளுநர் ரவியின் அடாவடித்தனத்தையும் அம்பலப்படுத்தும்.


சூதாட்ட சூழ்ச்சிக்கு இறையாகிப் போன இளைஞர்களுக்கு நியாயம் கேட்கும்!

பெரும்படையை வாஞ்சையோடு வரவேற்பீர், வாழ்த்துக் கூறுவீர்! வெற்றித் திலகமிட்டு வழியனுப்புவீர்! அவர்கள் நமது பிள்ளைகள் அல்லவா?

நமது செல்வங்கள் – பொது நலனுக்கு போராட போர்க்களம் கண்டுள்ளதைக் கண்டு மகிழுங்கள்!

மாவீரன் பாலன் பிறந்த ஏப்ரல் இரண்டாம் நாள் திருச்சி மாநகரில் நமது வீட்டு செல்வங்கள் எல்லாம் திரளட்டும்! திசை மாறி போய்க் கொண்டுள்ள நாட்டை இடது பக்கம் திருப்பட்டும். மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

தோழமைமிக்க,



(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்



மு.வீரபாண்டியன்

# உக்ரைன் - ரஷ்ய போர்... முடிவே இல்லையா?

**ரஷ்ய – உக்ரைன் போர் துவங்கி ஓர் ஆண்டு கடந்து விட்டது. லட்சக்கணக்கான மக்கள் அழுத விழிகளோடு பிறந்த நாட்டை விட்டு புலம்பெயர்ந்து விட்டார்கள். குழந் தைகள், முதியோர், நோயுற்றோர் துயரங்கள் ஏட்டில் அடங்காது.**



ஐரோப்பாமுழுவதும்எண்ணெய்–எரிவாயு 60 சதம் ரஷ்யாவை எதிர்பார்த்துதான். போர்ச் சூழலில் அது முற்றிலும் முடங்கி விட்டது. பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் மூடப்பட்டு விட்டன. தொழிற்சாலைகள் முடங்கி விட்டன. உக்ரைனில் பயிர்கள், தானியங்கள் முற்றிலும் அழிந்துவிட்டது.

பேசித் தீர்க்க முயற்சிக்க வேண்டிய அமெரிக்கா, ஐரோப்பா போரைத் தூண்டுகின்றன. போர் தொடர விரும்புகின்றன.

போரில்தான் ஆயுத வியாபாரம் சூடு பிடிக்கும். லெபார்ட் பீரங்கி அரசியல் இப்படித்தான். போரில்தான் ஆயுத ஆற்றல் வெளிப்படும். போருக்கு சோதனைக் களம் தேவைப்படும். அதுதான் உக்ரைன். போரில் முட்டாள்தனமும் – மூர்க்கத்தனமும் வெளிப்படும்.

போருக்கான காரணங்களை பட்டியலிடுவதை விட, போரை நிறுத்த என்ன வழி என உலகத் தலைவர்கள் சிந்திக்க வேண்டும்.

எனினும் போருக்கான காரணம் தெளிவாக வேண்டும்.

முதல் காரணம் மின்ஸ்க் ஒப்பந்தம் மீறப்பட்டது தான். மின்ஸ்க் ஒப்பந்தம் உக்ரைனில் வாழும் ரஷ்யர்கள் மீது தாக்குதல்கள்; படுகொலைகள் கூடாது என்கிறது. ஆனால் நியோ நாஜிகளால் ரஷ்யர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். மால்டோவாவிலும் அதே நிலை தான்.

நியோ நாஜிகளை அமெரிக்கா – ஐரோப்பா ஏன் கண்டிக்கவில்லை?

அடுத்த, நேட்டோ விரிவாக்கம். நேட்டோவில் இனி விரிவாக்கம் இல்லை என்றது ஐரோப்பா, அமெரிக்கா?

அதை மீறி உக்ரைன், பின்லாந்து, ஸ்வீடனைத் தூண்டி ஏன் சேர்க்கத் துடிக்கிறார்கள்?

வர்சா கலைக்கப்பட்ட பின்பும் நேட்டோ, தொடர்வது ஏன்? ரஷ்யாவின் இந்த கேள்விகளுக்கு பதில் இல்லை.

ரஷ்யா பேச்சுவார்த்தைக்கு தயார் என்கிறது. உக்ரைன் பேச்சுவார்த்தைக்கு ஒப்புக்கொள்ள கூடாது என்கிறது அமெரிக்கா.

அதே நேரத்தில் அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் இருந்து ரஷ்யா விலகியவுடன், ரஷ்யா அமெரிக்காவுடன் பேச வேண்டும் என்கிறது.

உலகில் நடந்த அனைத்து போர்களும் ஏகாதிபத்தியத்தால் நடத்தப்பட்டவைதான். ஏகாதிபத்தியம்தான் உலகை தீர்மானிக்கிறது. அமெரிக்கா தான் தலைமை தாங்குகிறது.

ஐரோப்பா – அமெரிக்காதான் நாடுகள் என்கிறார்கள். மற்றவை காடுகள் என்றார்கள். இனி உலகை இந்தியா, சீனா, ரஷ்யா, ஆப்பிரிக்கா தீர்மானிக்கட்டும் என்கிறது ரஷ்யா.

புதிய உலக ஒழுங்கு முறையை கோருகிறது ரஷ்யா.

இது ஆழ்ந்து சிந்திக்க வேண்டியது. உலக வர்த்தகம் முழுக்க முழுக்க டாலரில் தான் நடைபெறுகிறது.

உலக வர்த்தகம் முழுக்க முழுக்க ஐரோப்பிய – அமெரிக்கா நலன்களால் பிணைக்கப்பட்டிருக்கிறது.

உலக நிதி நிறுவனங்கள் அனைத்திலும் அதிக பங்கு அமெரிக்கா – ஐரோப்பா உலக நிதி மூலதனங்கள் முழுவதும் அமெரிக்காவின் கரங்களில்.

ஐநா சபையிலும், அமெரிக்க ஐரோப்பிய கூட்டணியே ஆதிக்கம் செய்கிறது.

அநீதி செய்யும் இஸ்ரேல் பாசிசம், அமெரிக்கா ஐரோப்பா.

பாலஸ்தீனம் தொடர்ந்து ஏமாற்றப்படுகிறது.

உலகில் 360 இடங்களில் அமெரிக்க ஐரோப்பிய ராணுவத் தளங்கள். ரஷ்ய ராணுவ முகாம்கள் 16 இடங்கள்தான். அனைத்து ராணுவ முகாம்களையும் கலைக்க வேண்டும் என்கிறது ரஷ்யா. புதிய உலக ஒழுங்கு முறையில் இந்த முழக்கமும் ஒன்று.

ஆக, ரஷ்யாவின் கோரிக்கைகளில் நியாயங்கள் உண்டு.

அது அமெரிக்க – ஐரோப்பிய மேலாதிக்க கூட்டணி எதிர்ப்பால் உலக ஆதரவும் அதற்கு உண்டு!

எனினும் எதன் பொருட்டும் போரினை ஆதரிக்க முடியாது.

சீனா, இந்தியா, தென்னாபிரிக்கா போன்ற நாடுகள் ரஷ்யாவை நிர்ப்பந்திக்க வேண்டும்.

உக்ரைன் – ரஷ்யா பேச்சு வார்த்தை துவங்க வேண்டும்.

ஜெலன்ஸ்கி அமெரிக்க பிடியிலிருந்து விலக வேண்டும். ரஷ்யா விட்டுக் கொடுத்து பேசி தீர்க்க வேண்டும். மனிதநேய அறிவுலகம் இதைக் கோருகிறது!

---

# கார்ல் மார்க்ஸின் வாழ்க்கை குறித்த நினைவலைகள்



எலினார் மார்க்ஸ்
(கார்ல் மார்க்ஸின் மகள்)

ஜென்னியைத் திருமணம் செய்வதென நிச்சயிக்கப் பட்டபோது, கார்ல் மார்க்ஸ் பதினேழே வயதான இளைஞன். கார்ல் மார்க்ஸை விட ஜென்னி 4 வயது மூத்தவர். அவர்களின் உண்மையான காதல் பாதை மென்மையானதாக ஒன்றுமில்லை.

அவ்வளவு சின்ன வயதிலான தமது மகனுக்கு திருமணம் நிச்சயம் செய்யப்படுவதை கார்ல் மார்க்ஸின் பெற்றோர்கள் எதிர்த்தார்கள். அது புரிந்து கொள்ளக் கூடியது தான்.

திருமண நிச்சயதார்த்தத்தின் போது அவரது வீடு புயலடித்தது போல இருந்தது. அத்தனை முரண்பாடுகளுக்கு இடையிலும், தன் தந்தை மீது தான் கொண்டிருக்கும் அன்பை, மிகுந்த அக்கறையோடு மார்க்ஸ் விளக்கினார்.


அந்த நேரத்தில் என் தந்தை மிகவும் மூர்க்கமானவராக இருந்ததாக அவரே கூறுவார். ஆனால் அவரது பதினெட்டாவது பிறந்தநாளுக்கு சற்று முன்பு அல்லது அதற்குப் பிறகு பிரச்சினையில் சுமூகத் தீர்வு ஏற்பட்டு நிச்சயதார்த்தம் முறையாக அங்கீகரிக்கப்பட்டது. தனது அழகான ஜென்னிக்காக ஏழு வருடங்கள் கார்ல் காத்திருந்தார். அவர் அவளை மிகவும் நேசித்ததால் அந்த ஏழு வருடங்கள், ஏழு யுகங்களைப் போல அவருக்குத் தோன்றின.

ஜூன் 19, 1843 அன்று அவர்கள் திருமணம் செய்து கொண்டனர். சிறுவயதில் ஒன்றாக விளையாடி, இளம் பருவத்தில் நிச்சயம் செய்து கொண்ட இந்த ஜோடி, போராட்ட வாழ்க்கை முழுவதும் கையோடு கைகோர்த்து உறுதியாக நின்றது.

எப்படிப்பட்ட போராட்டம் அது! பல ஆண்டுகளாக அழுத்திக் கொண்டே இருந்த நிறைவு செய்ய முடியாத அடிப்படை வாழ்க்கைத்தேவைகள், அதுநீடித்துச்சென்ற கசப்பான அனுபவங்கள், மிருகத்தனமான சந்தேகங்கள், பொய்யான அவதூறுகள் மற்றும் உறையச் செய்யும் அலட்சியம் எல்லாவற்றையும் அவர்கள் கடந்தனர். ஆனால் மாசற்ற காதலர்களான இரண்டு வாழ்நாள் நண்பர்களும் மகிழ்ச்சியிலும் துன்பத்திலும், எல்லாவற்றிலும், ஒருபோதும் தடுமாறவில்லை, ஒருபோதும் தமக்குள் சந்தேகிக்கவில்லை: அவர்கள் மரணம் வரை விசுவாசமாக இருந்தனர். மரணத்தால் கூட அவர்களைப் பிரிக்க முடியவில்லை.

அவரது வாழ்நாள் முழுவதும் மார்க்ஸ் தனது மனைவியை நேசித்தது மட்டுமல்ல, அவர் மீது மாறாத காதல் கொண்டிருந்தார். ஜென்னி ஆறு குழந்தைகளைப் பெற்ற பிறகு 1856ல் மார்க்ஸ், அவருக்கு எழுதிய ஒரு கடிதம் பதினெட்டு வயது இளைஞன் எழுதியது என்று கருதக் கூடிய உணர்ச்சியும், இளமைத் தீவிரமும் கொண்டதாக இருக்கிறது.

1863ல் தனது தாயின் மரணத்துக்காக அவர்கள் இளமைக் காலத்தில் வாழ்ந்த ட்ரையருக்கு சென்ற அவர், "ரோமானியப் பழைமையைக் காட்டிலும் எனக்கு மிகவும் ஆர்வமாக உள்ள 'வெஸ்ட்ஃபாலென்'களின் (ஜென்னி குடும்பத்தின் பெயர்) பழைய வீட்டிற்கு தினசரி யாத்திரை மேற்கொள்கிறேன். அங்குதான் எனது மகிழ்ச்சியான இளமைக் காலத்தில், என் அன்பான விலைமதிப்பற்ற பொக்கிஷம் இருந்தது. அதுமட்டுமல்லாமல், அன்றைய 'ட்ரையர்' நகரத்தின் மிக அழகான பெண்', 'ராணி' என ஜென்னியைப் பற்றி எல்லா தரப்பிலும் என்னிடம் இப்போதும் பேசுவதைக் கேட்கிறேன். ஒரு முழு நகரத்தின் நினைவுகளில் கற்பனை இளவரசியாக, இப்போதும் தனது மனைவி வாழ்வதைக் கண்டறிவது அவளது கணவன் ஆகிய எனக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது" என கடிதம் எழுதினார்.



மார்க்ஸ் தனது தந்தையிடம் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தார். அவரைப் பற்றி பேசுவதில் சோர்வு அடைவதே இல்லை. எப்போதும் அவரது பழைய புகைப்படத்தைத் தன்னுடன் வைத்திருப்பார்.. ஆனால் அவர் அதை ஒருபோதும் அந்நியர்களிடம் காட்ட மாட்டார். ஏனெனில் இது அசல் போல இல்லை என்று அவர் கூறுவார். முகம் மிகவும் அழகாக இருந்தது, கண்கள் மற்றும் புருவங்கள் அவரது மகனைப் போலவே இருந்தன, ஆனால் வாய் மற்றும் கன்னங்கள் இன்னும் மென்மையாக இருந்தன. பொதுவான யூதருக்குரிய வடிவம், ஆனால் அதைவிடவும் அழகாக இருந்தார்.

தனது மனைவியின் மரணத்திற்குப் பிறகு, மார்க்ஸ் தனது உடல்நலத்தை மீட்டெடுக்க நீண்ட, சோகமான பயணத்தை மேற்கொண்டார். அதுவும் கூட அவரது நிறைவடையாத 'மூலதனம்' நூலை முடிப்பதற்காகவே.(அது முடியாமலேயே போய்விட்டது. மூலதனத்தின் முதல் பகுதி மட்டுமே அவர் உயிரோடு இருக்கும் போது வந்தது. மற்ற இரண்டு பாகங்களையும் அவரது மரணத்துக்குப் பின், எங்கெல்ஸ் தான் தொகுத்து வெளியிட்டார்–மொ.) அவர் எப்போதும் தன்னுடன் தனது தந்தையின் புகைப்படத்தையும், கண்ணாடி சட்டமிட்ட என் அம்மாவின் பழைய புகைப்படத்தையும், மற்றும் அவரது மகள்களில் ஒருவரான (எனது சகோதரி) ஜென்னியின் படத்தையும் வைத்திருந்தார். அவர் இறந்தபோது, அவரது சட்டைப் பையில் அவற்றைக் கண்டோம்.

சவப்பெட்டியில் மார்க்ஸ் உடல் கிடத்தப் பட்டபோது, தோழர் எங்கெல்ஸ் அந்தப் படங்களையும் உடலோடு சேர்த்து வைத்தார்.

தமிழில்: டி.எம்.மூர்த்தி

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 85 இதழ் 50

# விவசாயத்துக்கு ஒதுக்கிய நிதியை செலவிடாத மோடி அரசு

விவசாயத்துக்கான நாடாளுமன்ற நிலைக்குழு, தனது அதிர்ச்சியூட்டும் அறிக்கை ஒன்றை நாடாளுமன்ற மக்களவையில் மார்ச் 13ம் நாளன்றும், மாநிலங்களவையில் 14ம் நாளன்றும் முன்வைத்துள்ளது.

கடந்த மூன்று நிதி ஆண்டுகளாக நிதிநிலை அறிக்கையில் விவசாயத்துக்கான ஒதுக்கப்பட்ட தொகையில் கணிசமான பகுதியை செலவழிக்காமல் விவசாயத்துறை ஒன்றிய அரசிடம் திருப்பி ஒப்படைத்துள்ளது.

இதுவரை மொத்தம் 44,015.81 கோடி ரூபாய் இவ்வாறு திருப்பி தரப்பட்டுள்ளது. 2020–21, 2021–22, 2022–23 நிதி ஆண்டுகளில் முறையே

23,824.54 கோடி, 429.22 கோடி, 29,762.05 கோடி வீதம் ஒவ்வொரு ஆண்டும் தொகை திருப்பி தரப்பட்டுக் கொண்டே இருக்கிறது.

மறுபுறத்தில் விவசாயத்துக்காக மோடி அரசு ஒதுக்கும் தொகை ஒவ்வொரு ஆண்டும் குறைகிறது.

2020–21ம் கணக்காண்டில் 4.41%, 2021–22ல் 3.53%, 2022–23ல் 3.14% என குறைக்கப்பட்டு கொண்டே வந்த நிதி ஒதுக்கீடு, இந்த 202324ம் ஆண்டில் வெறும் 2.57% என ஆகக் குறைந்தபட்ச நிதி ஒதுக்கீடாக மாறியுள்ளது.

திட்டங்களின் பலன்கள் வேர் நுனி வரைக்கும் பரவுவதற்கு வழி தராமல் தடுத்து, இடையிலேயே முறித்து அனுப்புவது சரியல்ல என்று நாடாளுமன்ற நிலைக்குழு விவசாயத் துறையை சாடி இருக்கிறது.

விவசாயிகள் பல கோரிக்கைகளை வைத்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவை நிறைவேற்றப்படுவதை பற்றி அரசு எந்தக் கவனமும் செலுத்துவது இல்லை. ஏராளமான திட்டங்களின் மூலம் சாதாரண மக்களுக்கும் விவசாயிகளுக்கும் இதற்கு முன் இல்லாத அளவுக்கு அதிக உதவிகளை செய்கிறோம் என்று பாஜக தலைவர்கள் ஊடகங்கள் முன்பு கொட்டி முழக்குகிறார்கள். ஆனால் இந்த திட்டங்களில் லட்சணம் எவ்வாறு இருக்கிறது என்பதை பட்டவர்த்தனமாக நாடாளுமன்ற நிலைக்குழு எடுத்துக்காட்டி யிருக்கிறது.

குழுவின் தலைவர் பி.சி.காடிகவுடர் என்ற பிஜேபியின் நாடாளுமன்ற உறுப்பினர் தான். தமிழ்நாட்டில் இருந்து, வைகோ, அ.கணேசமூர்த்தி, எஸ்.கல்யாணசுந்தரம் என மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தக் குழுவில் உள்ளனர்.

இந்தக் குழு தான் இந்த சாட்டையடி அறிக்கையை தயாரித்தது.

ஒருபுறம் கூடுதல் தொகை ஒதுக்குவதற்கான கோரிக்கைகளை துறை வைக்கிறது. மறுபுறத்தில் ஒதுக்கப்பட்ட தொகை செலவிடாமல் திருப்பி ஒப்படைக்கிறது. இது பொருத்தமற்ற செயலாகும். வேளாண்துறை அமைச்சகத்தில் திட்டமிடலிலும் செயல்பாட்டிலும் அதன் கவனமின்மை பரிதிபலிக்கிறது என்று சுட்டிக் காட்டக் குழு தவறவில்லை.

இந்தியாவில் வேளாண்மை, காரீப் மற்றும் ரபி இரண்டு பருவ காலங்களை கொண்டதாக உள்ளது. ஆனால் வேளாண் திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் நிதி, தலா 25சதம் வீதம், நான்கு தவணைகளாக செலவிடப்படுகிறது. ஒவ்வொரு முறையும், ஆவணங்களைத் தாக்கல் செய்தல், சரி பார்த்தல் மற்றும் இவை தொடர்பான பலனற்ற அலுவலகப் பணி அதிகரித்து, கடைசியில் திட்டத்தின் பலன் விவசாயிகளைச் சென்றடையவில்லை. எனவே இரண்டு பயிர் பருவங்களிலும் தலா ஐம்பது சதம் என நிதி செலவிட்டு கால தாமதத்தை அகற்றுமாறு ஆலோசனையும் கூறப்பட்டுள்ளது.

முழுமையாக நிதியை செலவழிக்க முடியாததன் காரணத்தை வேளாண் துறை அறிந்திருக்கும். நிதி வழங்கும் முறை மற்றும் செயல்படுத்தும் முறை உட்பட அதன் திட்டங்களைத் தகுந்த முறையில் மாற்றியமைக்க வேண்டும்.

'விவசாயம் மாநிலத்திற்கு உட்பட்டது என்ற உண்மையைக் கருத்தில் கொண்டு, தற்போதுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை, செலவினத் துறையுடன் அமர்ந்து பேசி, தகுந்த முறையில் மாற்றியமைப்பது அவசியம்.

"நாட்டின் கிராமப்புற வாழ்வாதாரம், வேலைவாய்ப்பை உருவாக்குதல் மற்றும் உணவுப் பாதுகாப்பு ஆகியவற்றில் விவசாயம் வகிக்கும் முக்கிய பங்கைக் கருத்தில் கொண்டு, பட்ஜெட் ஒதுக்கீட்டை அதிகரிக்குமாறும் நிதி அமைச்சகத்துக்கு குழு பரிந்துரை செய்தது.

"நாங்கள் குறைந்தபட்ச ஆதார விலை விலையை மாற்றி அமைக்க போகிறோம். அது புதிய சூத்திரமாக அமையும். விவசாயியின் ஒட்டுமொத்த பயிர் உற்பத்திச் செலவையும் அதனோடு சேர்த்து 50% லாபமும் சேர்த்து புதிய கணக்கீடு அமையும். இது விவசாயிகளை பாதுகாப்பது மட்டுமல்ல, விவசாயிகளை கொள்ளை அடிப்பவர்களை கூண்டோடு ஒழித்து விடும்" என்று சென்ற 2014 நாடாளுமன்றத் தேர்தலில், விவசாயிகளின் வாக்குகளைக் கவர்வதற்காக, நாடெங்கும் சென்று மோடி, நாவால் கொட்டி முழக்கினார்.

கடந்த 9 ஆண்டுகளில், இந்த முறைமையையும் கெடுத்திருக்கிறார் என்பதற்கு நாடாளுமன்ற நிலைக்குழு அறிக்கையே சாட்சி.

# இரண்டாம் நிலை மருத்துவ ஆய்வக நுட்புநர்களின் பணியிடங்களை நிரந்தர அடிப்படையில் நிரப்பிடக் கோரி உண்ணாநிலை அறப்போராட்டம்



1. மருத்துவ ஆய்வக நுட்புநர் நிலை 2 காலிப்பணியிடங்களை மருத்துவ பணியாளர் தேர்வாணையம்மூலம் எழுத்து தேர்வு வைத்து, இட ஒதுக்கீடையும் நடைமுறைப்படுத்தி, காலமுறை ஊதியத்தில் விரைந்து நிரப்பிட வேண்டும்.

2. கடந்த 2015 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட வெயிட்டேஜ் மதிப்பெண் முறையில் பணியிடங்களை நியமிக்கும் அரசாணை எண்:401 ஐ ரத்து செய்திட வேண்டும்.

3. பணி நியமனத்தின் போது சீனியர்கள் பாதிக்கப்படாமல் இருக்க கருணை அடிப்படையில், அவர்களுக்கு கூடுதல் மதிப்பெண் வழங்கிட வேண்டும்.

4. தமிழ்நாடு அரசால் தொடங்கப்பட்ட 11 புதிய மருத்துவக் கல்லூரிகளில் ஆய்வக நுட்புநர் நிலை 2 காலிப் பணியிடங்களை விஸிபி மூலம் எழுத்து தேர்வு வைத்து, இட ஒதுக்கீட்டையும் பின்பற்றி நிரந்தர அடிப்படையில் நிரப்பிட வேண்டும்.

5. மருத்துவ ஆய்வக நுட்புநர் காலிப் பணி யிடங்களை நிரப்புவதில் ஒப்பந்தம்,தற்காலிகம், அவுட்சோர்சிங் போன்ற பணிநியமன முறைகளை கைவிட வேண்டும். நிரந்திர அடிப்படையில் மட்டுமே நியமனங்களை செய்திட வேண்டும்.

6. மருத்துவ ஆய்வக நுட்புநர்களின் நலன் காத்திட, 2014 ஆம் ஆண்டு வெளியிட்ட அரசாணை எண்:417 ன் படி, தனி கவுன்சில் அமைத்திட வேண்டும்.

7. தேசிய மருத்துவ ஆணையம் வழிகாட்டுதல்படி, நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, மருத்துவ ஆய்வக நுட்புநர் நிலை இரண்டிற்கான, புதிய பணி யிடங்களை உருவாக்கிட வேண்டும்.

8. அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெறும் இரண்டாம் நிலை ( நிலை2 ), மருத்துவ ஆய்வக நுட்புநர்களின் பணியிடங்களை கண்டறிந்து, அவற்றை காலிப் பணி யிடங்களாக அறிவித்திட வேண்டும்

9. தமிழ்நாடு முழுவதும், வட்டார அளவில் ஒருங்கிணைந்த , சிறந்த மருத்துவப் பரிசோதனை ஆய்வகங்களை உருவாக்கி,அதில் மருத்துவ ஆய்வக இரண்டாம் நிலை நுட்புநர்களை (நுட்புநர்2) நிரந்தர அடிப்படையில்,காலமுறை ஊதியத்தில் நிரப்பிட வேண்டும்.

10. அரசு மருத்துவக் கல்லூரிகளில் இரண்டாண்டு, மருத்துவ ஆய்வக நுட்புநர் பட்டயப் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு வெள்ளை அங்கியும், Internship காலத்தில் கருணை அடிப்படையில் ,பயிற்சிக் கால உதவி ஊக்கத் தொகையும் வழங்கிட வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி மார்ச் 15 அன்று உண்ணாநிலை அறப்போராட்டம் சென்னை, எழும்பூர், ராஜரெத்தினம் விளையாட்டரங்கின் எதிரில், ருக்மணி லட்சுமிபதி சாலையில் நடைபெற்றது.

தமிழ்நாடு மருத்துவத்துறை பணியாளர்கள் கூட்டமைப்பின் தலைவர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் தலைமை தாங்கினார்.

இரண்டு ஆண்டு பட்டயப் பயிற்சியை நிறைவு செய்த மருத்துவ ஆய்வக நுட்புநர்களின் நலச் சங்கத்தின் மாநிலத் தலைவர் ஏ. ராஜவேலு, துணைத் தலைவர்எம். கார்த்திக், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் உண்ணாவிரதப் போராட்டத்தை துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு ஏ.ஐ.டி.யு.சி யின் பொதுச் செயலாளர் எம்.ராதாகிருஷ்ணன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய மாவட்டச் செயலாளர் ஜி.செல்வா, ஆம் ஆத்மி கட்சியின் தலைவர் வசீகரன், சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் மாநிலச் செயலாளர் டாக்டர் ஏ.ஆர்.சாந்தி, தமிழ்நாடு மருத்துவத்துறை பணியாளர்கள் கூட்டமைப்பின் மாநில செயல் தலைவர் பி.காளிதாசன், மெடிக்கல் லேப் கல்வி மற்றும் நலச் சங்கத்தின் மாநில துணைத்தலைவர் எஸ். தனவந்தன், சி.பி.ஐ மத்திய சென்னை மாவட்டச் செயலாளர் கருணாநிதி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இரண்டு ஆண்டு பட்டயப் பயிற்சியை நிறைவு செய்த மருத்துவ ஆய்வக நுட்புநர்களின் நலச் சங்கத்தின் மாநிலச் செயலாளர் சி.முருகேசன், பொருளாளர் இ.பரத், எஸ்.செல்வக்குமார், கனிமொழி,பிரகதீசன், தினகரன், பிரமிளா உள்ளிட்டோர் கோரிக்கைகளை விளக்கி உரையாற்றினர்.

மே 17 இயக்கத்தின் தலைவர் திருமுருகன் காந்தி உண்ணாநிலை அறப்போராட்டத்தை முடித்து வைத்து நிறைவுரையாற்றினார். இதில் 300 க்கும் மேற்பட்ட லேப் டெக்னீசியன்கள் தமிழ்நாடு முழுவதிலுமிருந்து வந்து கலந்து கொண்டனர்.

1 ம் பக்கத் தொடர்ச்சி

அனைத்தையும் நிறைவேற்றும் என்று உத்தரவாதமும், நம்பிக்கையும் அளித்தார்கள்.

கட்டுமான தொழிலாளர் நல வாரியம் வேலை அளிப்போர் என்ற நிலையில் இருந்து கட்டுமான திட்ட மதிப்பீட்டில் தற்போது வசூலிக்கப்படும் ஒரு சத நல நிதியை, ஐந்து சதவீதம் வரையில் உயர்த்தி வசூலிக்க சட்ட திருத்தம் செய்து, தொழிலாளர் சட்டப் பலன்கள் அனைத்தும் தமிழ்நாட்டில் கட்டுமான தொழிலாளர்களுக்கு கிடைத்திட உரிய நடவடிக்கை தமிழ்நாடு அரசு எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, தமிழ்நாடு முதலமைச்சருக்கு மனு கொடுக்கும் போராட்டம் நடைபெற்றது. தமிழ்நாடு முழுவதிலும் இருந்து 1150 கிராம நிர்வாக அலுவலர்கள் மூலம் தமிழ்நாடு முதலமைச்சருக்கு அனுப்பப்பட்டது.

மாவட்ட வாரியாக: நீலகிரி மாவட்டம் 21 மையம், கோவை 113, திருப்பூர் 42, ஈரோடு தெற்கு 81, ஈரோடு வடக்கு 52, சேலம் 72, தர்மபுரி 20, கிருஷ்ணகிரி 3, திருவண்ணாமலை 27, வேலூர் 76, தென் சென்னை 3, வடசென்னை 11, மத்திய சென்னை 11, திருவள்ளூர் 14, செங்கல்பட்டு 17, விழுப்புரம் 10, கள்ளக்குறிச்சி 20, கடலூர் 10, மயிலாடுதுறை 15, நாகப்பட்டினம் 29, திருவாரூர் 32, தஞ்சாவூர் 22, அரியலூர் 13, பெரம்பலூர் 5, புதுக்கோட்டை 32, திருச்சி 13, கரூர் 23, நாமக்கல் 25, திண்டுக்கல் 52, தேனி 24, மதுரை 42, விருதுநகர் 37, தென்காசி 1, ராமநாதபுரம் 46, சிவகங்கை 7, தூத்துக்குடி 70, கன்னியாகுமரி 21 மொத்தம் 1150 கிராம நிர்வாக அலுவலர்கள் மூலம் மனு கொடுக்கும் நிகழ்வில் கட்டுமானத் தொழிலாளர்கள் பெண் கட்டுமான தொழிலாளர்கள் பெருமளவில் பங்கேற்றனர்.

தமிழ்நாடு முழுவதும் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டம், மனு கொடுக்கும் போராட்டத்தில் 15000 க்கு மேற்பட்ட கட்டுமான தொழிலாளர்கள் பங்கேற்றனர். பெண் தொழிலாளர்கள் பெருமளவில் பங்கேற்றனர்.





- த.லெனின்

கோயிற் பூசை செய்வோர் – சிலையைக்
கொண்டு விற்றல் போலும்,
வாயில் காத்து நிற்போன் – வீட்டை
வைத் திழத்தல் போலும்,
ஆயிரங்க ளான – நீதி
யவை உணர்ந்த தருமன்
தேயம் வைத் திழந்தான் – சிச்சீ!
சிறியர் செய்கை செய்தான்.

# சிச்சீ... ஆளுநரின் சிறிய செய்கை!

பாஞ்சாலி சபதத்தில் மகா கவி பாரதியால் இப்படித்தான் சூதாட்டம் இடித்துக் காட்டப்பட்டது. இன்று சனாதன இந்துத்துவத்தை பெருமை பேசும் ஆளுநர் ரவி ஆன்லைன் சூதாட்ட தடை சட்டத்தை திருப்பி அனுப்பியதன் மூலம் மீண்டும் ஒரு சகுனியாக மாறிவிட்டாரா?.

ஆன்லைன் சூதாட்ட முறையை எதிர்த்து கடந்த அதிமுக ஆட்சி காலத்திலும் ஒரு தடை சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால் உயர்நீதிமன்றம் திறமை மற்றும் வாய்ப்புக்கு இடம் அளிக்கும் விதத்தில் இச்சட்டம் இல்லை என்றும், அரசமைப்புச் சட்டப் பிரிவு 19(1)(ஜி) எதிரானதாக இருப்பதாகக் கூறி தள்ளுபடி செய்தது.

தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்ற பிறகு இந்த ஆன்லைன் சூதாட்டத்தால் தொடர்ந்து குடும்பங்கள் சிதைவதும், தற்கொலை சம்பவங்கள் அதிகரிப்பதும் வாழ்நாளெல்லாம் திரட்டிய சொத்தை இழத்தலுமாக ஒரு சோக சித்திரத்தை தீட்டியது.

இதிலிருந்து மக்களைக் காப்பாற்றும் விதமாக உயர்நீதிமன்றம் சொன்ன கருத்துக்களையும் கவனத்தில் கொண்டு, முன்னாள் நீதியரசர் சந்துரு தலைமையில் ஒரு குழுவும் அமைக்கப்பட்டு அதன் பரிந்துரைகளின் அடிப்படையில் ஒரு ஆன்லைன் சூதாட்ட தடை அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்தது.

இந்த அவசரச் சட்டத்திற்கு ஆளுநர் ஒப்புதலும் அளித்தார். ஆனால், அந்த அவசரச் சட்டத்தை நிரந்தரச் சட்டமாக்க சட்டமன்றம் ஒருமனதாக தீர்மானித்து கொண்டுவந்த சட்டமுன் வடிவை ஆளுநர் ரவி வழக்கம்போல ஐந்து மாதங்கள் கால தாமதம் செய்தார். தற்போது திருப்பி அனுப்பியிருக்கிறார்.

ஆனால்இதற்குமுன்பாகவே ஆன்லைன் ரம்மி விளையாட்டு உரிமையாளர்களை ஆளுநர் சந்தித்து பேசியிருக்கிறார். அதன் பிறகுதான் திருப்பி அனுப்பியிருக்கிறார் என்றால் இதற்கு என்ன பெயர்?

நீதியரசர் சந்துரு தலைமையிலான குழு மிக விரிவான ஆய்வுகளை மேற்கொண்டது. 74% மாணவர்களுக்கு (ஐ.கியூ) மூளைத்திறன் பாதிக்கப்படுவதாகவும், 67% மாணவர்களுக்கு கண்கள் பாதிக்கப்படுவதாகவும், 75% மாணவர்கள் இதில் உணர்ச்சிவசப்பட்டுஈடுபடுவதாகவும் கூறியிருந்தது.

இச்சட்டத்தை திருப்பி அனுப்பிய ஆளுநர் அதற்கான காரணங்களாக குறிப்பிடுவது...

1. இது ஒன்றிய அரசின் பட்டியலில் வருவது.

2. நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக இருக்கிறது.

3. அரசமைப்புச் சட்டத்திற்கு எதிராக இருக்கிறது.

இதனால் இதனை திருப்பி அனுப்புவதாகக் கூறி இருக்கிறார்.

அத்துடன், திருப்பி அனுப்பவதற்கான அதிகாரம் அரசமைப்புச் சட்டம் பிரிவு 200ல் தனக்கு இருப்பதாகவும் கூறி இருக்கிறார்.

உயர்நீதிமன்றம் கூறியதுபோல இது சமமானதிறன் அடிப்படையில்நடைபெறுகிற போட்டி அல்ல. மாறாக நேரடியாக நடக்கும் சூதாட்ட விளையாட்டுகளில் திறன்களும், நிகழ்தகவு முறைகளும் வேண்டுமென்றால் காணப்படலாம்.

ஆனால், ஆன்லைன் மூலம் விளையாடும் விளையாட்டில் நீங்கள் யாரோடு விளையாடுகிறீர்கள் என்பதற்கு எந்த வெளிப்படைத் தன்மையும் இல்லை. அத்துடன் ஏற்கனவே கணினி முறையில் திட்டமிடப்பட்ட போட்டியாக இது அமைவதால் மனிதர்கள் வெற்றிபெற முடியாத ஒரு சூழல் எழுகிறது. இதிலே எங்கே திறமையை நிரூபிக்க முடியும்?

விவாதக் களத்திற்கு வரும் சங்கிகளும், பா.ஜ.க.வினரும் மாநில அரசுக்கு இதனை தடை செய்வதற்கான உரிமை இல்லை என்று வாதிடுகின்றனர். அப்படியென்றால் தமிழ்நாட்டில் லாட்டரி சீட்டு எப்படி சட்டப்படி தடை செய்யப்பட்டது?

அத்துடன் இரவு நேரங்களில் சென்னையில் மாநில, தேசிய நெடுஞ் சாலைகளில் பைக் மற்றும் கார் பந்தையங்கள் பொதுமக்கள் நலன் கருதிதானே தடை செய்யப்பட்டிருக்கிறதே? இதை திறமைக்கு எதிரானது என்று திறந்துவிட முடியுமா?

எனவே, ஆன்லைன் சூதாட்டம் திறமையை அடையாளம் காட்டும் போட்டி விளையாட்டு அல்ல. மாறாக கார்ப்பரேட்டுகளின் சூழ்ச்சியால் நமது சாதாரண எளிய, நடுத்தர மக்களை உளவியல் உந்துதலுக்கு ஆளாக்குவது ஆகும். இவ்விளையாட்டில் வெறியோடு பங்கேற்று அனைத்தையும் இழந்து இறுதியில் தற்கொலையில் முடியும் தொடர் நிகழ்வாகவே மாறிப்போனது.



ஆன்லைன் சூதாட்ட தடைச் சட்டம் கொண்டு வர மாநில அரசுக்கு உரிமை இல்லையா?

நமது அரசமைப்புச் சட்டம் 7வது அட்டவணையில் உள்ள பட்டியல் 2ல் பிரிவு 1, 34, 33 மற்றும் 6 ஆகியவை. அதாவது, பிரிவு 1. பொது அமைதியையும், பிரிவு 34 பணையம் மற்றும் விளையாட்டுகளையும், பிரிவு 33 திரையரங்குகள் மற்றும் நாடக செயல் திறன்களையும், பிரிவு 6 பொது சுகாதாரத்தையும் எடுத்துச் சொல்கிறது.

இவை அனைத்தும் மாநில அரசின் உரிமைக்குள் வருவதுதான். இது குறித்து நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியபோது, இணை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் மின்னணு தகவல், ஆன்லைன் சூதாட்டம் இவை அனைத்தும் மாநிலங்கள் உரிமையில் வருகிறது என்றும் பதில் அளித்துள்ளார்.

உலக சுகாதார நிறுவனத்தின் பிரகடனம் (WHO) ஆன்லைன் விளையாட்டுகளையும், சூதாட்டங்களையும் ஒரு மனப்பிறழ்வு நோயாகவே சுட்டிக் காட்டுகிறது. குழந்தைகளின் மனநிலையில் பெருத்த பாதிப்பையும், அதற்கு அடிமையாக மாறும் சூழ்நிலையையும் ஏற்படுத்துகிறது என்றும் கண்டித்துள்ளது.

கடந்த 2013ல் வெளியான நோய் கண்டறிதல் மற்றும் புள்ளியியல் கையேடு (diagnostic and statistical manual of mental disorders). இதுதான் அமெரிக்க மனநோய் மருத்துவர்களின் பைபிள் என்று அழைக்கப்படுகிறது. இதுவும் இதனை இணைய விளையாட்டு மனப்பிறழ்வு என்ற ஒரு தீவிர நோயாக வகைப்படுத்துகிறது.

2014ல் புகழ்பெற்ற மருத்துவர் டாக்டர் நிக்கோலஸ் கர்டரார் எழுதிய ஒளிரும் குழந்தைகள் என்ற நூலில் எப்படி இணையத்திரைகள் நமது குழந்தைகளுக்கு ஒரு போதையைத் தந்து அவர்கள் மூளையைக் கடத்தி விடுகிறது என்பதையும், அவர்களின் நடத்தை மாற்றத்தில் இந்த நோய் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதையும் இந்த நூல் தெளிவாக விளக்குகிறது.

இப்படி அடுத்தத்த தலைமுறையையும் விட்டுவைக்காத ஒரு நவீன அசுரனாக உருவெடுத்திருக்கும் இந்த ஆன்லைன் சூதாட்டத்தை தடை செய்யாமல், வேறு என்ன செய்ய வேண்டும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு?

தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி தொடர்ந்து தமிழக மக்களுக்கு எதிரான ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. நிலைப்பாட்டையே தனது நிலைப்பாடாக நிலைநாட்டி வருகிறார்.

ஏற்கனவே நீட் விலக்கு சட்ட மசோதாவையும் இவர் கிடப்பில் போட்டவர்தான். ஏன், தமிழ்நாடு தேர்வாணைய குழும தேர்வுகளில் தமிழ்பொதுமொழித் தேர்வை முன்மொழிவதற்கான சட்ட திருத்தத்தையும் கூட இன்னும் ஒப்புதல் அளிக்காமல் கிடப்பில் போட்டுள்ளார். இப்படி 19 சட்ட முன்வடிவுகள் கவர்னர் அலுவலகத்தில் நீண்ட கும்பகர்ண தூக்கம் போட்டுக் கொண்டுள்ளது. இதுதான் அவரது அரசமைப்புச்சட்டப் பணியா? அதற்குத்தான் தமிழக மக்களின் வரிப்பணத்தில் இருந்து இவ்வளவு பெரும் தொகையை ஊதியமாக கொட்டி அழுகிறோமா?

கவர்னரின் அதிகாரம் குறித்து சுதந்திரத்திற்கு முன்பே பல விவாதங்கள் நடந்துள்ளன. வல்லபாய் பட்டேல் தலைமையிலான மாகாணங்களுக்கான அரசமைப்பு குழு அமைக்கப்பட்டிருந்தது. நேருவின் தலைமையில் மைய அரசுக்கான அரசமைப்புச் சட்டக்குழு அமைந்திருந்தது. அதுநாடாளுமன்றவழிப்பட்ட அரசாங்கத்தை நமது நாட்டுக்கு பொருத்தமானது என்று கூறியது. அத்தோடு மாநில ஆளுநர்களை நேரடியாக வாக்கெடுப்பின் மூலம் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று அதன் நகல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது.

இதனை முழுமையாக பட்டேல் தலைமையிலான குழுவும் ஏற்றுக் கொண்டது. இது குறித்து ஒரு தீவிரமான விவாதம் அரசியல் நிர்ணய சபையில் நடைபெற்றது. அப்போதுதான் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஆளுநர் என்பதற்கு பதிலாக குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படும் முறை கொண்டுவரப்பட்டது.

நிர்ணய சபையில் பல உறுப்பினர்கள் நியமன ஆளுநர், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சரின் அதிகாரங்களை கேள்வி கேட்பது சரியாக இருக்காது என்று குறிப்பிட்டபோதுதான் கவர்னராக வருபவர் கட்சி நபராக இருக்கக் கூடாது ஒரு தனி நபராக இருக்க வேண்டும் என்று கூறப்பட்டது. இது குறித்து அரசமைப்புச் சட்டம் பிரிவு 163 மிகத் தெளிவாக வரையறுக்கப்பட்டது.

இதில் அமைச்சரவை எடுக்கும் முடிவுகளின் அடிப்படையில் கவர்னர்கள் ஆலோசனை தரவும், அரசமைப்புச் சட்டம் அறுவுறுத்தியிருக்கிற பணிகளில் ஈடுபடவும் பணித்தது. இதில் அவர்களுக்கான விருப்புரிமை என்பது அரசமைப்பு சட்டத்தின் 6வது பட்டியலில் உள்ள வேறு பிரிவுகளில் சொல்லப்பட்டிருக்கும் பழங்குடியினர் வாழ்ந்த பகுதியான அசாம் மாநிலத்திற்குத்தான் பொருந்தும்.

அதாவது பழங்குடியினர் வாழும் வனப்பகுதியையும், மலைப்பகுதியையும், அவர்களது கலாச்சாரத்தையும் பாதுகாக்கும் ஓர் நடவடிக்கையே ஆகும்.

இது குறித்து அரசமைப்புச் சட்டத்தின் சிற்பி அண்ணல் அம்பேத்கர் கூறியதை நாம் எப்போதும் கவனத்தில் கொள்ள வேண்டும். அவர் கூறுகிறார், நம்முடைய அரசமைப்புச் சட்டத்தின் கீழ் வரும் ஆளுநர்களுக்கு தாங்களாகவே மேற்கொள்ள எந்தப் பணியும் இல்லை, அவராக மேற்கொள்ளப்படும் பணிகளும் எதுவும் இல்லை என்பதை எப்போதும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்கிறார்.

சட்டமன்றத்தில் பெரும்பான்மை இல்லாத போது தனிப் பெரும் கட்சியையோ, பெரும்பான்மை உள்ள கூட்டணியையோதான் அவர் அழைக்க முடியும்.

ஆட்சி கவிழ்ந்துவிட்டால் சட்டமன்றத்தை கலைக்க பரிந்துரைக்க முடியும். இவைதான் கவர்னரால் செய்ய முடியும். மற்றபடி தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் சட்ட முன்வடிவுகளை திருப்பி அனுப்பவோ, கிடப்பில்போடவோ கிஞ் சித்தும் அவருக்கு எந்த உரிமையும் இல்லை. அப்படி செய்வது, செயல்படுவதுதான் அரசமைப்புச் சட்டத்திற்கு நேர் விரோதம்!

1994ஆம் ஆண்டு எஸ்.ஆர்.பொம்மை வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பிற்கு பிறகு மாநில அரசுகளை இப்போது ஒன்றிய அரசால் கலைக்க முடியாது. எனவேதான் பா.ஜ.க. – ஆர்.எஸ்.எஸ். பின்புலத்தில் உள்ள தங்களுக்கான ஆளுநர்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட எதிர்க்கட்சிகளின் மாநில அரசின் கொள்கைகளுக்கு, செயல்பாடுகளுக்கு ஊறு விளைவிக்கவும், வீண் தாமதமும் செய்ய மட்டுமே முடியும். இதுதான் பா.ஜ.க. கூறும் பொறுப்பான கூட்டாட்சியா?

இல்லை, இதுதான் அவர்களின் பொறுப்பற்ற காட்டாட்சி!

தொடர்புக்கு: 94444 81703



தி.இராமசாமி

# பா.ஜ.க.விடம் இருந்து அ.இ.அ.தி.மு.க.வை காப்பற்றுவாரா எடப்பாடி?

**தமிழகத்தில் எதிர்க்கட்சி (அ.இ.அ.தி.மு.க) தலைவர் எடப்பாடி பழனிச்சாமி, ஜெயலலிதா மறைவுக்குப் பின் அ.இ.அ.தி.மு.க. வில் கடும் நெருக்கடி ஏற்பட்டது. நெருக்கடியைத் தீர்க்க அவர்கள் சொந்தமாக முயற்சி செய்தார்கள். ஜெயலலிதா மருத்துவமனையில் இருக்கும் போது முதல்வராக இருந்த ஓ.பன்னீர்செல்வம், அவரது மறைவுக்குப் பிறகு அப்பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டார். எடப்பாடி பழனிச்சாமி முதல்வரானார். இந்த நேரத்தை பா.ஜ.க. தனக்கு சாதகமாக பயன்படுத்த முயற்சித்தது.**



ஓ.பன்னீர்செல்வத்தை தனது விசுவாசியாக மாற்றியது; அ.தி.மு.க வை உடைத்தது. ஓ.பன்னீர்செல்வம் பக்கம் பா.ஜ.க. நின்றது ஓ.பன்னீர்செல்வத்தை பயன்படுத்தி பல நெருக்கடிகளை உண்டாக்கியது.

பன்னீர்செல்வம் அதிமுகவிற்கு கொடுத்த நெருக்கடியின் காரணமாக கட்சிக்கு ஒற்றைத் தலைமை வேண்டும் என்ற பிரச்சனை எழுந்தது. பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தீர்மானங்கள் செல்லாது என்றும், இரட்டை இலை சின்னத்தை கொடுக்க கூடாது என்றும் கட்சிக்குள் இப்பிரச்சினையை தீர்ப்பதற்கு பதிலாக நீதிமன்றம் சென்றார்கள். நீதிமன்றம் இரட்டை இலை சின்னத்தை எடப்பாடிக்கு வழங்கியது. எடப்பாடி பழனிச்சாமி இடைக்கால பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டது செல்லும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. அ.இ.அ.தி.மு.க எடப்பாடி தலைமையில் ஒருங்கிணைந்தது. அ.இ.அ.தி.மு.க தலைமை எடப்பாடிதான் என்பது உறுதியாகி விட்ட நிலையில், கட்சிக்குள் ஏற்பட்ட சாவால்களை சமாளித்து பெரும்பாலும் வெற்றி பெற்றுவிட்டார்.

ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் அ.தி.மு.க போட்டியிட்டது. பா.ஜ.க. அதிமுகவை ஆதரித்தது. பன்னீர்செல்வத்தை பொறுத்தவரை பா.ஜ.க. போட்டியிட்டால் நான் போட்டி யிடமாட்டேன் என்று அறிவித்து அவர் பா.ஜ.க.வின் உண்மை விசுவாசி என்பதை நிரூபித்து விட்டார்.

திருநெல்வேலியில் எடப்பாடி, பா.ஜ.க. – அ.தி.மு.க. கூட்டணி தொடரும் என்று அறி வித்துள்ளார். இதன் மூலம் எடப்பாடி நிலை புலிவாலை பிடித்த கதையாக உள்ளது. பா.ஜ.க.விடமிருந்து அ.இ.அ.தி.மு.க வை காப்பாற்ற வேண்டிய புதிய சவால் எடப்பாடிக்கு எழுந்துள்ளது.

**தனது கூட்டணியில் இருக்கும் கட்சிகளை கொஞ்சம் கொஞ் சமாக அழிக்க முயற்சிப்பதுதான் பா.ஜ.க.வின் கலாச்சாரம். உதாரணத்திற்கு பீகார் மாநிலம் ஐக்கிய ஜனதாதளம் நிதிஷ்குமாருடன் கூட்டணி சேர்ந்தார்கள். நிதிஷ் குமாரை பயன்படுத்தி தங்களது கட்சியை வலுப்படுத்தினார்கள். அதன் பின்பு நிதிஷ்குமார் கட்சியையே உடைக்க முயற்சித்தார்கள்.**

இதை உடனடியாக உணர்ந்த நிதிஷ் குமார் பா.ஜ.க. கூட்டணியில் இருந்து விலகி ராஷ்ட்டிய ஜனதா தளத்துடன் சேர்ந்து ஆட்சியையும், முதல்வர் பதவியையும் தக்க வைத்துக்கொண்டதுடன் கட்சியையும் காப்பாற்றி விட்டார். பா.ஜ.க.வின் வஞ் சக வலை அங்கே கிழிந்து விட்டது.

அதே போல மகாராஷ்டிரத்தில் சிவசேனையை பிளந்து ஏக்நாத் ஷிண்டேவை முதல்வராக்கி அவரையும் கவிழ்க்க காத்திருக்கிறது பா.ஜ.க.

அ.இ.அ.தி.மு.க எம்.ஜி.ஆர் தொடங்கிய கட்சி. அதிமுகவை தொடங்குவதற்கு முன்பு எம்.ஜி.ஆர். தி.மு.க வில் இருந்தார். திராவிடர் கழகத்தில் இருந்து தி.மு.க தோன்றியது. தி.மு.க வில் இருந்து அ.இ.அ.தி.மு.க தோன்றியது. எனவே இரண்டும் திராவிட கட்சிகள்.

**பா.ஜ.க.வை பொறுத்தவரை மதத்தை அடிப்படையாக கொண்ட சனாதன தர்மத்தை பேணிப் பாதுகாக்கின்ற இந்து மதவாதிகளின் கட்சி. இவர்களின் பூர்வீகம் ஆரியம். இவர்களுக்கு வழிகாட்டி சாவர்க்கர். இவர் ஹிட்லரின் வாரிசு. இந்த கட்சியை இயக்குவது ஆர்.எஸ்.எஸ். ஆகும்.**

திராவிடம் இந்தக் கட்சிக்கு நேர் எதிரான கொள்கை கொண்டது. சுயமரியாதை, பகுத்தறிவு, மூட நம்பிக்கை எதிர்ப்பு, சாதிஒழிப்பு, தீண்டாமை எதிர்ப்பு, சமூகநீதி கோட்பாடு, சமத்துவம், ஜனநாயகம் இவைகளை அடிப்படையாக கொண்டது. இந்த கொள்கைகள் கம்யூனிஸ்டு களுக்கும் உடன்பாடானவை.

இந்த திராவிட கொள்கைகளுக்கு நேர் எதிரானது ஆரியர் கொள்கை. அதை அடிப்படையாக வைத்து பா.ஜ.க. செயல்படுகிறது.

**சாதி சதுர்வர்ணம் அறிவியல் பூர்வமானது என்பதும், சமூக ஏற்றத்தாழ்வு இயல்பானது என்பதும், பெண்கள் ஆண்களுக்கு கீழானவர்கள் என்பதும் ஆர்.எஸ்.எஸ்.சின் சித்தாந்தம். அதன் வாரிசாகத்தான் பா.ஜ.க. செயல்படுகிறது.**

தமிழக மக்கள் தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய கட்சிகளை பெருவாரியாக ஆதரிப்பதற்கு காரணம் மேலே சொல்லப்பட்ட கொள்கைகளுக்கு எதிராகத் தான். எனவே, தமிழகம் என்றால் திராவிடம். இந்த கொள்கைக்கு நேர் எதிரானவர்களுடன் கூட்டணி சேருவது தமிழக மக்களுக்கு எதிராக செயல்படுவதாக அமையும்.

எனவே தான் இந்த கொள்கைக்கு எதிராக இருக்கும் பா.ஜ.க.வை தமிழக மக்களுக்கு விரோதமான கட்சி, தமிழ்நாட்டின் வளர்ச்சியை தடுக்கும் கட்சி என்று கூறுகிறோம்.

இத்தகைய பா.ஜ.க.வுடன் அ.இ.அ.தி.மு.க. கூட்டணி தொடர்ந்தால் தன் அடையாளங்களை இழந்து, தன் தலையில் தானே மண்ணை வாரி போட்டுக்கொள்வதற்கு சமமாகும். பா.ஜ.க.வின் திட்டமே திருதிராஷ்டிரன் ஆலிங்கணம்தான். அதாவது கட்டியணைத்து அணைத்தவனை பொடிப்பொடியாக்கிவிடுவதுதான்.

எனவே எடப்பாடி அ.இ.அ.தி.மு.க. வை காப்பாற்ற வேண்டுமானல் பா.ஜ .க.விடம் எட்டி நிற்க வேண்டும். கிட்டே செல்லக்கூடாது.

ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் முடிவுக்கு பிறகு எடப்பாடி, அ.இ.அ.தி.மு.க, வை ஜெயலலிதா வழியில் செயல்படுத்துவோம் என்று கூறியிருந்தார். ஜெயலலிதா மோடியா? லேடியா? என்று சவால் விட்டவர். அந்த சவாலின்படி எடப்பாடி சென்றால் பா.ஜ .க.விடம் இருந்து அ.இ.அ.தி.மு.க வை காப்பாற்ற முடியும் செய்வாரா?

**தொடர்புக்கு: 82483 87433**

# தருமபுரி கட்சி அலுவலகத்தை கைப்பற்ற சதி

தருமபுரி மாவட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட கட்சி அலுவலகம் வட்டார வளர்ச்சி காலனியில் செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில் சில ஆண்டுகளுக்கு முன்பு கட்சியில் இருந்து வெளியேறிய சிலர் போலி ஆவணங்கள் தயாரித்து கட்சி அலுவலகத்தை தமக்கு சொந்தமானது எனக் கூறியதோடு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினர் கட்டிடத்திற்குள் நுழையக் கூடாது எனத் தடைகோரி வழக்கும் தொடர்ந்தனர். அவ்வாறு தடை விதிக்க முடியாது என சார்பு நீதிமன்றம் உத்தரவிட்டது. இதனை எதிர்த்து மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தனர். அதிலும், கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்பை உறுதி செய்து, அவர்களது மேல் முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது. இதனையடுத்து அலுவலக கூட்ட அரங்கில், அரசியல் விளக்கப் பேரவைக் கூட்டம் 13.03.2023ல் நடைபெற்றது.

இதில் கட்சியின் மாநில துணைச் செயலாளர் நா.பெரியசாமி, தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர் டி.எம்.மூர்த்தி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் மூத்த தலைவருமான என்.நஞ்சப்பன், மாநில நிர்வாகக்குழு உறுப்பினர்கள் எஸ்.தேவராஜ், சேலம் மோகன், தருமபுரி மாவட்டச் செயலாளர் எஸ்.கலைச் செல்வன் ஆகியோர் கூட்டத்தில் பேசினர்.

இதையறிந்த எதிர்தரப்பினர் சிலர் பெண்களுடன் அலுவலகத்திற்குள்ளே நுழைந்து தகராறில் ஈடுபட்டனர். இந்த சம்பவம் குறித்து தகவலறிந்த தருமபுரி நகர காவல் ஆய்வாளர் ரங்கசாமி தலைமையில் காவல்துறையினரும், தருமபுரி தாசில்தார் ஜெயசீலன் தலைமையில் வருவாய்த்துறை அதிகாரிகளும் வந்தனர்.தகராறு செய்தவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினர்.

நீதிமன்றத் தீர்ப்புகள் மற்றும் ஆவணங்களைப் பரிசீலிக்குமாறும், பாதுகாப்பு வழங்குமாறும் அரசு அதிகாரிகளிடம் கட்சி முறையிட்டது.

சட்டம், ஒழுங்கு பாதிப்பு இல்லாமல் குறுகிய காலத்தில் விசாரணை நடத்தி சொத்துக்கு உரியவர்களிடம் கட்டிடத்தை ஒப்படைப்பதாகவும், அதுவரை அரசு தன் பொறுப்பில் கட்டிடத்தை எடுத்துக் கொள்வதாகவும் வருவாய் அதிகாரி கோரினார். அதனை ஏற்று அலுவலகத்தை பூட்டி வட்டாட்சியரிடம் சாவியை, மாவட்டச் செயலாளர் எஸ்.கலைச் செல்வன் ஒப்படைத்துள்ளார்.


**PRESS & REGISTRATION OF BOOKS ACT, 1867**

Registration of Newspapers (Central) Rules. 1956

FORM IV (SEE RULE 8) statement about

Ownership & other particulars about Newspaper

JANASAKTHI TAMIL WEEKLY

| | |
|---|---|
| 1.Place of Publication | : 43, Chevalie Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai-17 |
| 2.Periodicity of its Publication | : Weekly |
| 3.Printer's Name | : S.Shanmuganathan |
| Nationality | : Indian |
| Address | : 142/16 Jani Jan khan Roan, Royapettah, Chennai-14 |
| 4. Publisher's Name | : R.Mutharasan |
| Nationality | : Indian |
| Address | : 43, Chevalie Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai-17 |
| 5.Editor's Name | : D.Pandian |
| Nationality | : Indian |
| Address | : 43, Chevalie Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai-17 |
| 6.Name and Address of Shereholders holding more than one percent of the Share Capital | R.Mutharasan 43, Chevalie Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai-17 |

I, R.MUTHARASAN hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief

Dated : 04.03.2023

Signature of Publisher: R.MUTHARASAN



அஸ்வினி

# எங்கே எனது வேலை



**“வேலைவாய்ப்பின்மை” இரட்டை அடைப்புக்குறிக்குள் அடக்கி விட முடியாத அளவிற்கு அரசியலை, மிகப்பெரும் ஆபத்தை, திட்டமிட்ட ஊழலை, நாட்டின் பொருளாதாரத்தை, உலகளாவிய வளர்ச்சியை தவிர்க்கும் சதியை உள்ளடக்கிய வார்த்தைக்குள் அடங்காச் சொல்.**

வேலை என்பது வாய்ப்பா? உரிமையா? கடமையா? வேலை என்பது உழைப்பு! உழைப்பு என்பது சமுதாய இயக்கத்தின் அடிப்படை. மனிதன் வாழ தேவையான அனைத்திற்கும் அடிப்படையானது.

ஒரு மனிதன் வாழ உணவு, உடை, இருப்பிடம் எப்படி அடிப்படையானதோ, அதே போன்றே வேலையும், சுயவாழ்வின் அடிப்படை தேவைகளை கட்டமைத்து கொள்வதும் ஒவ்வொருவரின் உரிமையே.

வல்லரசு கனவில் சுழன்று கொண்டிருக்கும், இந்தியா போன்ற நாடுகள் (வேலைவாய்ப்பு) வாய்ப்பாக அடையாளப்படுத்தியிருப்பதும், பொருளாதார தேக்கத்தில் சிக்கி தவிக்கும் போதும் கூட அப்படிப்பட்ட உரிமையை இந்தியாவின் எதிர்கால தூண்கள் தோரணையில் தூக்கில் தொங்கவிட்டிருக்கும் இளைஞர்களை வேலைக்கு அமர்த்தி, தொழிற்புரட்சி புரிய மறுக்கும் அரசாகவே இருக்கிறது என்பது வருந்தத்தக்கது.

இன்றைய தொழிட்நுட்ப வளர்ச்சி பெற்ற நாடுகளில், இந்தியாவும் ஒன்று. அப்படிப்பட்ட நாட்டில், கடந்த 9 ஆண்டுகளாக மத்தியில் ஆளும் பாஜக அரசு அனைவருக்கும் கல்வியும், அனைவருக்கும் வேலையும் உணவைப் போல அடிப்படை உரிமை என்பதை உணர மறுத்து வருகிறது.

குறிப்பாக, தமிழ்நாடு, கேரளா போன்ற ஓரளவு கல்வியில் வளர்ச்சி பெற்ற மாநிலங்களில் கூட கல்வியும், வேலையும் அடிப்படை உரிமையாக்கப்படவில்லை. மாறாக மும்மொழி கொள்கை, தேசியக் கல்வி கொள்கை, குலவழிகற்றல் முறை, நீட் நுழைவுத் தேர்வு என கற்றல் கடினப்படுத்தப்படுகிறது.

மாணவர்களை இளம் வயதிலேயே தன்னால் இயலாது என்னும் சுய நம்பிக்கையை இழக்க வைக்கும் சூழ்ச்சிகர செயல்களில் திட்டமிட்டே இறங்கி யிருக்கிறது.

போதாக்குறைக்கு, போதைப்பொருட்களின் விற்பனையை துளியும் கண்டுகொள்ளாமல், பள்ளி, கல்லூரி வளாகங்களுக்கு அருகில் கிடைக்கும் கஞ்சா, குட்கா, பான் போன்ற அதிக போதையளிக்கும் வஸ்துக்களை தடை செய்யாதிருப்பதும், விற்பனையில் ஈடுபடுபவர்கள் மீது எந்தவித கடுமையான தண்டனைக்கும் உட்படுத்தாமல் இருப்பதும் கடந்த ஆண்டுகளில் அம்பலமாகி யிருக்கிறது.

பல இளைஞர்கள் போதைக்கு அடிமையாகி, கல்வி இடை நிற்றலாலும், குடும்பத்தின் பொருளாதார சிக்கல் காரணமாகவும் படிப்பின்றி சமூக விரோத செயல்களில் ஈடுபடுகிறார்கள். 9 மற்றும் 10ம் வகுப்பு மாணவர்கள் 2017–18ல் மட்டும் 16 சதவீதம் பேர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தியிருக்கிறார்கள். குறிப்பாக 2015–16 ல் 8 சதவீதமாக இருந்த இடைநிற்றல், அடுத்த ஆண்டு 16 சதவீதமாக அதிகரித்திருக்கிறது. மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறையின் புள்ளி விவரங்களை சட்டப்பேரவையிலேயே குறிப்பிட்டிருந்த நிலையில், மாணவர்கள், இளம் தலைமுறையினரது எதிர்காலம் கேள்விக் குறியாகியுள்ளது.

பட்டப்படிப்பு, மேற்படிப்பு, தொழிற்கல்வி, மருத்துவம் என அனைத்து துறைகளிலும் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் நுழைவுத் தேர்வுகள் மற்றும் போட்டி தேர்வுகள் ஒரு மாணவனின் திறனை சோதிப்பதாக இருக்க வேண்டும். மாறாக, மத்தியில் ஆளும் அரசு தரப்பில் வலுவாக முன்னிறுத்தப்படும் மநு சாஸ்திரத்தை அடிப்படையிலான ‘பார்ப்பனர்கள் மட்டுமே கல்வி கற்க வேண்டும்‘ என மக்களை அழிவுக்கு இட்டு செல்லும் வகையில் அழித்தொழிக்கப் பயன்படுத்தி கொள்கிறது.

பாசிச அரசு. இந்த வரிசையில் நீட் தேர்வுக்கு பலிகொடுத்த 40 மாணவர்களும் ஓர் உதாரணமே. தமிழகத்திற்கு நீட் தேர்வில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு சட்டம் இயற்றி ஆளுநர் வழியாக ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைத்திருந்தும் எந்த விலக்கும் இதுவரை அளிக்கப்படவில்லை.

பொது முடக்கத்திற்கு மத்தியிலும் வேளாண்மைத் துறை 3.4% வளர்ச்சி அடைந்தத போதிலும் உணவு தானிய உற்பத்தி ஏற்றுமதியைக் கண்டது. ஆனால், இது விவசாய வருமானத்தை அதிகரிக்கவில்லை. விவசாயமே நாட்டின் முதுகெலும்பாக இருந்தபோதிலும், அதை விளைவிக்கும் விவசாயிகளின் முதுகில் ஏறி முறிக்கும் செயல்களை இவ்வரசு செவ்வனே செய்து வருகிறது.

உழைக்கும் ஆற்றல் உள்ள இளைஞர்களை உலகிலேயே அதிகம் கொண்ட நாடு இந்தியாதான். மொத்த மக்கள் தொகையில் ஏறக்குறைய 54 கோடி பேர் உழைக்கத் தகுதியான இளைஞர்கள். இதில் முறையான வேலையில் இருப்பவர்கள் வெறும் 8% பேர் தான்.

தமிழகத்திலோ வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துவிட்டு காத்திருப்போர் எண்ணிக்கை மட்டும் சுமார் 67 லட்சம். பதிவு செய்யாமல் இருப்பவர்களின் எண்ணிக்கை இரு மடங்குக்கு மேல் இருக்கும். முறையான வேலை கிடைக்கப்பெற்றவர்கள் 18 லட்சம்பேர்தான்.

தமிழகத்தில் 5.5 லட்சம் அரசுப் பணி யிடங்கள் காலியாக உள்ளன. பொறியியல் கல்லூரிகளுக்கே சென்று ஆள் எடுத்த பன்னாட்டு நிறுவனங்கள் காலியிடங்கள் இல்லை என்று 40 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களை காத்திருப்புப் பட்டியலில் வைத்திருக்கின்றன.

தகவல் தொழிற்நுட்பத் துறையை பொறுத்தவரையில், எப்போதும் வளர்ச்சியே என கொரோனா காலத்திற்கு பிறகு பிதற்றும் ஒரு கூட்டமே இருக்கிறது. இதில் அதிர்ச்சி தரும் தகவல் என்னவென்றால், தற்போது வரை இந்திய அரசு தகவல் தொழில்நுட்பத் துறையில் உள்ள வேலை இழப்புகள் பற்றிய அதிகாரப்பூர்வமான புள்ளிவிவரங்களை வெளியிடவில்லை.

தகவல் தொழில்நுட்பத் துறையில் பெருமளவு வேலைகளை இந்தியர்கள் பெற்றிருந்த நிலையில், அமெரிக்கா போன்ற ஏகாதிபத்திய நாடுகளின் சந்தையாக இந்தியா மாறியிருக்கிறது. இந்த நிலையில், பாக்ஸ்கான், நோக்கியா, ஹுண்டாய், டொயோட்டோ போன்ற தொழிற்சாலைகளில் ஏற்பட்ட வேலை இழப்பு காரணமாக, இளைஞர்கள் படிப்புக்கும், வேலைக்கும் சம்பந்தமில்லாத தொழில்களில் ஈடுபடுவது அதிகரித்திருக்கிறது.

இப்படி பல லட்சக்கணக்கான இளைஞர்கள், பெண்கள் என சம்மந்தமற்ற தொழில்களில் ஈடுபடுவதும், மிக கடினமான பணிச் சுமைகளுக்கு மத்தியில் அதிக நேரம் வேலைப்பார்ப்பதும் சர்வ சாதரணமாகியுள்ளது.

8 மணி நேர உழைப்பு, 8 மணி நேர ஓய்வு, இதற்கான சட்டங்களை பெற நடந்த போராட்டங்கள், உயிர் தியாகங்கள் ஏராளம். ஆண்கள், பெண்கள் மற்றும் திருநங்கைகளின் ஊதியத்தில் எந்தவிதமான பாகுபாடும் இல்லாமல் இருக்க வேண்டும் என்பதும் இந்த சட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இந்த 8 மணி நேர வேலைகளில் மாற்றங்கள் செய்ய தொழிற்சாலை சட்டத்தின் கீழ் எந்த திட்டமும் செய்யப்படவில்லை.

இருப்பினும் கார்ப்பரேட் தொடங்கி, அரசுப்பணிகளிலும் கூட இப்போது 8 மணி நேரத்தை தாண்டிய உழைப்பை செலுத்த வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது, சூழல்.

இதில் ஒப்பந்த தொழிலாளர் மற்றும் அவுட்சோர்சிங் நிறுவனங்களின் ஊழியர்களுக்கு அதிக வேலைப்பளுவுடன் கூடிய, குறைந்த அளவு ஊதியமே கிடைக்கும் பரிதாப நிலை உள்ளது. இந்தியாவில் நாளொன்றுக்கு 115 கூலித் தொழிலாளர்கள் தற்கொலை செய்து கொண்டிருப்பதாக ஒன்றிய அரசின் உள்துறை இணையமைச்சர் நித்தியானந்தா ராய் தெரிவித்துள்ளார்.

தானாகவே முன்வந்து, சீர்கெட்ட பொருளாதார மாதிரியை முன்னெடுத்ததன் விளைவாக இளைஞர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை ஒத்துக்கொண்டது, ஒன்றிய அரசு. மொத்தத்தில் தொழிலாளர்களின் மீதான உழைப்புச் சுரண்டல் இந்தியா முழுவதும் இருந்துவரும் வேளையில், பெண்கள் ஊதியமில்லா உழைப்பிலும் (குடும்ப பராமரிப்பு வேலைகள்) குறைவான ஊதிய வேலைகளிலும் ஈடுபடுத்தப்பட்டு கடுமையாகச் சுரண்டப்படுகிறார்கள்.

உலகமயமும், தனியார்மயமும் பெண்களின் மீதான உழைப்புச் சுரண்டலை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது. முதலாளித்துவ உலகில் எங்குமே, ஒரு மனிதனுக்கு கொடுக்கப்படும் சம்பளம், அவன் உயிர் வாழ்ந்து, ஓய்வெடுத்து மறுநாள் வேலைக்கு வரத் தேவையான வீட்டுப் பணிகள் போன்றவற்றிற்கும், அவனையும், குடும்பப் பராமரிப்பையும் இலவசமாக செய்கிறாளே பெண், அதை ஈடு செய்வதாக அமைவதே கிடையாது.

பெண்கள் மீதான ஒடுக்குமுறைக்கும், அடிமைத்தனத்துக்கும் எதிரான போராட்டம் வர்க்கப் போராட்டத்தின் ஓர் அத்தியாவசியமான பகுதி. கடந்த 2011 ஞ் 12ல் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி கிராமப்புறங்களில் 25% ஆக இருந்த பெண்களின் வேலை வாய்ப்பு தற்போது 18% ஆக குறைந்துள்ளது.

மேலும், நகர்ப்புறங்களில் பணிக்கு செல்லும் பெண்களின் விகிதம் 15%ல் இருந்து 14% ஆகவும் குறைந்துள்ளது. கிராமப்புற மற்றும் நகர்ப்புற இந்தியாவில் ஆண்கள் மற்றும் பெண்கள் இருவரும் வேலைவாய்ப்பின்றி உள்ளபோதிலும், அதில் பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை தொடர்ந்து குறைந்து வருகிறது. இதை சமீபத்தில் அரசாங்கத்தால் வெளிடப்பட்ட “குறிப்பான காலத்திற்கான தொழிலாளர் கணக்கெடுப்பு ஞ் 2017 ஞ் 2018” உறுதிபடுத்துகிறது.

கடந்த சில ஆண்டுகளாக துப்புரவு பணியாளர் பணியிடத்திற்கு விண்ணப்பித்தவர்களுள் கணிசமானோர் இன்ஜினியர்கள், எம்.டெக், பி.டெக், எம்.பி.ஏ போன்ற முதுகலை பட்டதாரிகள். அதிலும், எதையெல்லாம் உயர் படிப்பு என இந்த சமூகம் நம்புகிறதோ அந்த படிப்பை பயின்றவர்கள். இன்றைய பொருளாதார சூழலால் எந்த வேலையாக இருந்தாலும், தங்களை ஈடுபடுத்திக் கொள்ள இளைய சமுதாயம் தயாராக உள்ளது. ஆனால், வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு பதிலாக, அரசே பொதுத்துறை நிறுவனங்களை தனியாருக்கு தாரைவார்த்து கொடுத்துக் கொண்டிருக்கிறது.

சமூகம் தள்ளி வைத்துள்ள மாற்றுப்பாலினத்தவர்களும் இந்த நாட்டின் ஒரு அங்கம் என்பதை அரசு உணர வேண்டும். அவர்களுக்கு உரிய வேலை அளிக்க அரசு திட்டங்களை செயல்படுத்த வேண்டும்.

இளைஞர் பெருந்திரளாய் உழைப்பை செலுத்த கரங்கள் இங்கே? உழைக்க எங்கே எனது வேலை? என்கின்ற பெரு முழக்கத்துடன் மாவீரன் பகத்சிங் நினைவு தினமான மார்ச் 23 தொடங்குகிறது. தமிழ்நாடு முழுவதும் நான்கு முனைகளில் தொடர் பரப்புரை பயணத்தையும் நடத்துகிறது. தியாகச்செம்மல் பாலதண்டாயுதம் பிறந்த நாளான ஏப்ரல் 2 அன்று திருச்சியில் பல லட்சக்கணக்கான இளைஞர்கள் சங்கமிக்கும் இளைஞர் எழுச்சி மாநாட்டினையும் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் தமிழ்நாடு மாநிலக் குழு நடத்துகிறது.

இளைஞர்களின் லட்சியப் பயணத்தில் கைகோர்ப்போம்! வாரீர்!

தொடர்புக்கு: 75388 30251

## அறிவிப்பு

**ஜனசக்தி சமூக ஊடகங்களில் முகநூல், டுவிட்டர், இன்ஸ்டாகிராம், டெலகிராம், யூடியூப் ஆகியவற்றில் அமைப்புச் செய்திகள், போராட்டங்கள், தலைவர்களின் உரைகள் இடம்பெற காணொலிகள், படங்களுடன் செய்திகளை சுருக்கமாக பின்வரும் மின்னஞ்சல் அல்லது வாட்ஸ்அப் எண்ணுக்கு அனுப்பி வையுங்கள்.**

மின்னஞ்சல் :
janasakthidigital@gmail.com
வாட்ஸ் அப் : 8122521624

**ஆசிரியர் குழு**



ஜி.வெங்கடாசலம்

# தோள்சீலை போராட்

**இராமலிங்க வள்ளாலரின் 200வது ஆண்டு விழா, இலங்கை தமிழ் சைவப்புலவர் ஆறுமுக நாவலரின் 200வது ஆண்டு விழா, தோள் சீலை போராட்டத்தின் 200வது ஆண்டு விழா சம காலத்தில் கொண்டாடப்படுகிறது.**

இரு ஆளுமைகளும், ஒரு நிகழ்வும் இந்திய நிலப்பிரபுவத்தின் கொடூரத்திற்கு எதிராக ஆற்றிய எதிர்வினை என்பதை கவனம் கொளல் வேண்டும். 19 ஆம் நூற்றாண்டில் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி நடத்திய போரினாலும், இந்திய நிலப்பிரபுவத்தின் அரக்கத்தனத்தாலும் பஞ்சம், பட்டினி தலை விரித்தாடியது.

பல லட்சக்கணக்கான மக்கள் கொத்து, கொத்தாக மடிந்தார்கள். இதனை கண்டு மனம் வெதும்பிய இராமலிங்க வள்ளாலர் 'வாடிய பயிரை கண்ட போதெல்லம் மனம் வாடினேன்'' என பாடினார். 'கருணை இலா ஆட்சி கடுகி ஒழிக நான்மார்கள் ஆட்சி நல்கிபெருக'' என ஆட்சியாளர்களுக்கெதிராக கலகக் குரல் எழுப்பினார். மக்களின் பசிப்பிணி போக்கிட வடலூரில் அவர் மூட்டிய நெருப்பு இன்றும் எரிந்து கொண்டிருக்கிறது.

உழைக்கும் மக்களான சைவ வேளாளர்களை வருணாசிரம் சூத்திரப் பிரிவிலிருந்து வைசியப் பிரிவில் அடக்கியபோது, இந்து வர்ணாசிரமத்திற்கு எதிராக குரல் கொடுத்து போராடினார் ஆறுமுகநாவலர். மேலும் இந்து வர்ணாசிரம வாதிகளுக்கு ஆதரவாக செயல்பட்ட ஆங்கிலேயருக்கு எதிராகவும், ஐரோப்பியருக்கு எதிராகவும் போராட்டினார்.

இதனை அவதானித்த பேராசிரியர் க.கைலாசபதி இந்தியாவிலும் சரி, இலங்கையிலும் சரி ஐரோப்பியருக்கு எதிரான முதல் கலகக்குரல் சமயத்துறையில் எதிரொலித்தது என வரையறுத்தார்.

உலகந்தழுவியளவில் நிலப்பிரபுத்துவம் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவிற்கான கொடுமைகளை செய்திருக்கிறது.

வருணாசிரக் கொடுமை உலகில் எந்நிலப்பிரபுத்துவ சமூகத்தில் இல்லாத ஒன்று.

மக்களை நான்கு வர்ணங்களாக பிரித்து பிளவுப்படுத்தியது. பார்த்தால் தீட்டு, தொட்டால் தீட்டு, படித்தால் தீட்டு, படிப்பதை கேட்டால் தீட்டு, கலைகளை, வித்தைகளை கற்றால் தீட்டு, பொதுப்பாதையில் நடக்கத்தடை, பொதுக்கிணற்றில் நீர் எடுக்க தடை, ஆறு, ஏரிகளில் குளிக்கத்தடை, ஆலயங்களில் நுழையத்தடை, வைத்தியம் பார்க்க தடை...

கணவன் இறந்தால் மனைவி சிதையில் விழுந்து சாகும் சதி வழக்கம், குழந்தைத் திருமணம், பொருந்தாத் திருமணம் என மனிதகுலம் வெட்கித் தலை குனியும் இழிசெயல்களை செய்தது இந்திய நிலப்பிரபுத்துவமும், இந்திய சனாதனமும்.



வர்ணாசிரக் கொடுமைகள் நாடு முழுவதும் நடைபெற்று வந்த நிலையில் இன்றைய கேரள மாநிலத்தின் பாதிப்பகுதியும், தமிழகத்தின் கன்னியாகுமரி மாவட்டமும், அடங்கிய பகுதியாக திருவாங்கூர் சமஸ்தானம் விளங்கியது.

200 ஆண்டுகளுக்கு முன்பு இச்சமஸ்தானத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் மீது சொல்லொண்ணா கொடுமைகள் நிகழ்த்தப்பட்டன. உயர் சாதியினர்களுக்கு அப்பால் 36 எட்டுகள்

---



ஆர்.ராமானுஜம்

# வித்தைக்கார மோடி மீது குற்றப் பத்திரிக்கை!

**ஒட்டு மொத்த இந்தியாவின், இந்தியரின் குற்றப் பத்திரிக்கை இது.**

**குற்றம் சாட்டப்படுவர்: இந்தியாவின் பிரதமர், ஆர்.எஸ். எஸ்.ஸின் நரேந்திர மோடி.**

**குற்றச் செயல்களின் காலம்: 2001 முதல் இன்று, இப்போது வரை.**

குற்றச் செயல்களுக்குத் துணை நின்றவர்கள்:

1) ஆர்.எஸ்.எஸ்., சங்பரிவார் கும்பல், அமெரிக்கா மற்றும் அதன் பக்க வாத்திய அரசுகள்,

2) தங்களின் மத நம்பிக்கை, மதவெறியாக மாற்றப்படுவதை உணராது வெறுப்பு அரசியலுக்கு நீரூற்றிக் கொண்டிருக்கும் அப்பாவி இந்தியர்கள் (பெரும் எண்ணிக்கையிலான இந்துக்கள்)

3) பதவி எலும்புத் துண்டுகளுக்கு இரையான அரசியல் பிரதிநிதிகள், மத்திய புலனாய்வுத் துறை, அமலாக்கத் துறை யைக் காட்டி அச்சுறுத்தப் பட்டு, தன்மானம் பறிபோய்த் தாமரைப் பூவுக்கு முட்டுக் கொடுத்து நிற்கும் பல்வேறு அமைப்புக்களின் பெரும், குறும் தலைகள்.

நீதிமன்றம் விசாரிக்காத 1000+ சாட்சிகள், தொலைபேசிப் பதிவுகள், மிக உயர் பதவிக் காவல்துறை அதிகாரிகளின் குறிப்பிட்ட தரவுகள் இவையெல்லாம் பார்க்கப் படாமல் ஆட்சிக் கட்டிலில் அமர்த்தப் பட்டார் மோடி. அதனால்தான், இன்று பி.பி.சி. யின் ஆவணப் படங்கள் 1, 2 என வெளி வந்து குற்றங்களை அம்பலப்படுத்திக், கொடூரங்களின் பின்னிருந்த காவிக் கும்பல், கண்டும் காணாமல் விட்ட குஜராத் அரசின் அன்றைய முதல்வர் மோடி. இவரை வெளிச்சத்திற்குக் கொண்டு வருகிறது. உண்மைகளை நிரந்தரமாகப் புதைக்க முடியாது மோடி அவர்களே

முன்னாள் குடியரசுத்துணைத்தலைவர் வெங்கையா நாயுடு சொன்ன வெளிப்படைத் தகவல்: "குஜராத் கலவரம் மீது, முதல்வர் மோடி பதவி விலக வேண்டும் எனப் பிரதமர் வாஜ்பாயி விரும்பினார். ஆனால், கட்சியின் தலைவர்கள் கூடி அதற்கெதிரான நிலை எடுத்தனர் (இந்தியன் எக்ஸ்பிரஸ் 9 மார்ச் 2014) நீங்கள் உங்கள் கட்சியின் இந்துத்துவா வாதிகளால் மட்டுமே தப்பித்தீர்கள் மோடி அவர்களே!

"உங்களால் பெட்ரோல் விலையைக் கட்டுக்குள் கொண்டு வர இயலாதெனில் பதவியில் நீடிப்பானேன்?'' என மன்மோகன் சிங் கைப் பார்த்து கேட்ட உங்களைப் பார்த்து இந்தியர் அதிகக் கோபத்துடன் அதே கேள்வியைக் குற்றப் பத்திரிக்கை படிக்கின்றனர். நிதியமைச்சர் நிர்மலா அவர்களின் சிரிப்புத் துணுக்கு பதிலைக் கேட்க யாரும் தயாரில்லை

பல வருடங்களாக அரசுத் துறைகளில் வேலை வாய்ப்பு வழிகளை மூடி வைத்து விட்டுக் கூசாமல், வருடா வருடம் 2 கோடிப் பெருக்கு வேலை வாய்ப்பு என வானத்தில் வடை சுட்டதை அறிந்தவர்கள் நாங்கள். ஆனால், இப்போது 71,000 பேருக்கு வேலை உத்தரவு தரும் "பேரின்பப் பெருவிழா'' வை நடத்தி வருகிறீர்களே. இதை அடிக்கடி சுட்டிக் காட்டிய ராகுல் காந்தியை "பப்பு'' எனக் கேலி செய்து காட்டினார். அனைவரையும் முட்டாள் ஆக்க முயன்றீர்களே. எங்களின் குற்றப் பத்திரிக்கையின் வாயிலாக உங்களுக்கும் உங்கள் சித்தாந்த மூலம் ஆர்.எஸ். எஸ்.க்கும் சொல்கிறோம் "உண்மை சற்று மெதுவாய் ஊர்ந்து வரலாம். பொய் புல்லட் டிரெயினில் வரலாம்'' ஆனால் உண்மைகள் வெளிப்படும் போது, பொய்கள் வெடித்துச் சிதறும்

ஜவகர்லால் நேரு துவங்கி, அடல் பிகாரி வாஜ்பாயி வரை ஊடகங்களைச் சந்திப்பதில் யாருமே வெறுப்புக் காட்டியதில்லை; இதில் மோடிஜி! நீங்கள் தனிப் பிறவி. அகில இந்திய வானொலி அதிகாரிகளின் தொழில் நுட்ப உதவியுடன் நீங்கள் பேசுவதை நாடு கேட்க "மன் கீ பாத்'' என்ற ஒரு வழிப் பாதைத் தொடர்பில் உள்ளீர்கள்.

நீங்கள் அவ்வப்போது, திருக்குறளை மெச்சிப் பேசும் காட்சி காண முடிகிறது. அதில் வரும்

" இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்''

குறளின் பொருளைக் கேட்டு உணருங்கள் கட்டாயம். உங்களுக்கு மிகவும் பொருந்தும்.

மக்களவை, மாநிலங்களவையிலும், உங்களை நெருடும் கேள்விகள் கேட்டால், அவர்களை நையாண்டி, கேலி செய்பவராயிருக்கிறீர்கள். பாராளுமன்ற வரலாற்றிலேயே, ஒரு பிரதமரின் பேச்சு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் பட்ட கேவலம் உங்களையே சாரும்..

மிக மிகச் சமீபத்தில் கூட, பிப்ரவரி 23, ராகுல் காந்தி நாடாளுமன்றத்தில் சில ஆழமான செய்திகளை பதிவிடுகிறார். இஸ்ரேல், ஆஸ்திரேலியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளுக்கு நீங்கள் போய் வந்த சில நாட்களிலேயே, அதானிக்கு அந்தந்த நாடுகளில் சர்வதேசக் காண்டிராக்டுகள் வழங்கப் பட்டதைத் தேதி வாரியாகச் சொல்ல, உங்கள் பதில் கொஞ்சம் கூட அது பற்றி யில்லாமல்,

"காங்கிரஸ் தலைவர்கள், தங்கள் குடும்பப் பெயரை நேரு எனக் கொள்ளாது, ஏன் காந்தி பெயரைக்



# டம் 200வது ஆண்டு



தள்ளித்தான் கீழ்ச்சாதியினர் நிற்க வேண்டும். காலில் செருப்பு அணியும், குடைபிடிக்கும் உரிமை, ஆபரணங்கள் அணியும் உரிமை, குடியிருக்கும் வீடுகளுக்கு ஓடு வேயும் உரிமை, மாடிவீடு கட்டும் உரிமை, பசுவிடமிருந்து பால் கறக்கும் உரிமை, பெண்கள் இடுப்பில் தண்ணீர்க்குடம்வைத்துச்செல்லும்உரிமை உள்பட கீழ்ச்சாதியினருக்கு எவ்வுரிமையும் சமஸ்தானத்தால் மறுக்கப்பட்டது.

இது தவிர தலைவரி விதிக்கப்பட்டது. உயிரோடு இருப்பவர்களுக்கு மட்டுமல்லாது இறந்தவர்களுக்கும் இவ்வரி விதிக்கப்பட்டது. இவைகளை விட கொடுமையாக நிலப்பிரபுத்துவத்தின் வக்கிரப்புத்தியை வெளிப்படுத்தும் விதமாக கீழ்ச் சாதிப்பெண்கள் மேலாடை அணிவதற்கு தடை விதிக்கப்பட்டது.

மார்பகங்களை மறைக்கக் கூடாது, இடுப்புக்கு மேலே, முழங்காலுக்கு கீழே ஆடை அணிய மறுக்கப்பட்டது. பெண்களின் மார்பகங்களுக்கு வரி விதிக்கப்பட்டது. இதுதான் 'முலைவரி' என அழைக்கப்பட்டது.

சாலைகளில் சமஸ்தானத்து காவலர்கள் கையில் அரிவாள் பொருத்திய மூங்கில் குச்சியை வைத்துக் கொண்டு நிற்பார்கள். பெண்கள் யாராவது மேலாடை அணிந்து சென்றால் கையில் வைத்திருக்கும் மூங்கில் குச்சியால் கிழித்து எறிவார்கள்.

இக்கொடுமைகள் முறையாக அமுல்படுத்தப்படுகின்றனவா என்பதை கண்காணிக்க உயர் சாதியினர் 'பிடாக்கைக்காரர்கள்'' என்ற அமைப்பை ஏற்படுத்தி ஆண்டு தோறும் சுசீந்திரத்தில் ஒன்று கூடி ஆய்வு செய்வார்கள்.

திருவாங்கூர் சமஸ்தான மன்னர் மார்த்தாண்டவர்மன், திருவாங்கூர் சமஸ்தானம் திருவதாங்கூர் தர்ம ராஷ்ட்டிராமாக இருக்கும் என அறிவித்து சனாதன கொடுமைகளை அமுல் படுத்தினான்.

ஒடுக்கப்பட்ட சமூகத்தை சார்ந்த பெண்கள் தங்கள் மார்பகத்தை மறைக்க ஆடை அணிவது நியாயம் அற்றது. சட்டரீதியாக இது தடுக்கப்பட்ட பழக்கம் ஆகும். எனவே எதிர் காலத்தில் அவர்கள் மேலாடை அணியாமல் இருக்கும்படி 1821 பிப்ரவரி 3 அன்று சமஸ்தான மன்னர் உத்திரவிட்டான்.

மன்னரின் உத்திரவுக்குஎதிராக, குப்பாயம் என அழைக்கப்படும் மேலாடை அணியும் உரிமை கோரியும், முலைவரி கட்ட மறுத்தும் 1822ஆம் ஆண்டில் பெண்கள் போராட்டத்தை துவக்கினர். யாருடைய தலைமையும் இல்லாமல் ஏழை, எளிய, ஒடுக்கபட்ட சமூகத்தை சார்ந்த பெண்களே தன்னெழுச்சியாக போராட்டத்தை நடத்தினார்கள்.

இப்போராட்டமே 'தோள்சீலைப் போராட்டம்'' ஆகும். பெண்களின் எழுச்சி போராட்டம். திருவாங்கூர் சமஸ்தானம் முழுவதும் பரவி நடைபெற்றது. முலைவரி கட்டமறுத்து ஒரு பெண் தன் மார்பகத்தை அறுத்தெறிந்தால். அவ்விடம்தான் 'முலைச்சிப் பறம்பு'' வழிபாட்டுத் தலமாக இன்றும் உள்ளது.

தோள்சீலை போராட்டத்திற்கு அய்யா வைகுண்டசாமியும், கிறைத்தேவ கிருஸ்த்துவ சபைகளும் ஆதரவு அளித்தனர். அய்யா வைகுண்டசாமி திறந்த மார்போடு பெண்கள் இருக்கக் கூடாது, முலைவரி கட்டக் கூடாதென பிரச்சாரம் செய்தார். அடித்தட்டு மக்கள் அனைவருக்கும் தலைப்பாகைகட்டி விட்டார். பெண்கள் இடுப்பில் தண்ணீர் குடம் வைத்து வர கட்டளையிட்டார்.

சனாதன கொடுமைகளுக்கெதிராக ஒடுக்கப்பட்ட மக்கள் கிருஸ்துவ மதத்தில் சேர்ந்தனர். கிருஸ்துவ மதத்தில் சேர்ந்த பெண்களுக்கு மேலாடை அணியும் உரிமையை ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி வழங்கியது.

தோள்சீலை போராட்டத்தின் உச்சகட்ட போராட்டம் 1858 அக்டோபரில் துவங்கி 1859 பிப்ரவரி வரை நடைபெற்றது. சமஸ்தான அதிகாரிகளே பெண்கள் மேலாடைகளை பகிரங்கமாக கிழித்தெறிந்தனர். பெண்கள் மானபங்கப் படுத்தப்பட்டனர். குடிசைகள், சர்ச்கள் தீவைத்து கொளுத்தப்பட்டது. ஒடுக்கப்பட்ட சமூக மக்களுக்கும், உயர்சாதியினருக்கும் நேரடி மோதல் ஏற்பட்டது.

போராட்டத்தை திருவாங்கூர் சமஸ்தானம் சமாளிக்க முடியாமல் திணறியது. போராட்ட செய்தியறிந்து சென்னையிலிருந்த ஆங்கில கவர்னர் திருவாங்கூர் சமஸ்தானத்திற்கு எச்சரிக்கை விடுத்தார். சமஸ்தானம் பணிந்தது, ஒடுக்கப்பட்ட சமூக பெண்களுக்கெதிராக நடைமுறைப்படுத்தப்பட்ட சகல நடவடிக்கைகளையும் கைவிடுவதாக சமஸ்தான மன்னர் உத்திரம் திருநாள் அறிவித்தார்.

ஒடுக்கப்பட்ட பெண்களின் போராட்டம், மானம் காக்கும் போராட்டம் வெற்றி பெற்றது. சனாதனம் மக்களை அடிமையாக்கியது. போராட்டம் மக்களை விடுதலை செய்தது. இன்றும் சனாதனத்தெதிரான போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சனாதனம் வீழும், மக்களின் போராட்டம் வெற்றி பெறும். இதுவே 'தோள்சீலைப் போராட்டம்'' சொல்லும் செய்தி...

தொடர்புக்கு: 9442907585

---

கொண்டுள்ளார்கள்? நீங்கள் எத்தனை கேவலப் படுத்தினாலும் 'தாமரை' மலர்ந்தே தீரும் '' எனச் சம்பந்தமே இல்லாத பதில் தந்தீர்கள். எனினும் இதற்கும் உங்கள் கட்சி ரசிகர் கூட்டம் மேஜையைத் தட்டி மரியாதை செய்து உங்களை மகிழ்வித்தனர். அது உங்களுக்குத் தந்தது ஒரு மிதப்பு உணர்வுதான்.. இந்தியாவின் தலை நகரைக் கேட்டால், இடியாப்பம் வேண்டாம் என்று சொல்கிற பிரதமர் நீங்கள்.

மன்மோகன் சிங் ஆட்சியின் போது, தூர்தஷனைக் கேலி செய்து, பி.பி.சி.யைப் பாராட்டியவர்தானே நீங்கள்! இப்போது பி.பி.சி. ஆவணப் படம் வந்துள்ளது. வெறும் ரத்தக் காயங்களைப் பூசி மெழுக ஆர்.எஸ். எஸ். உங்களுக்குக் கற்றுத் தந்திருக்கலாம். ஆனால் வரலாற்றின் மீது வரையப் பட்ட ரத்த வரைவுகளை அவ்வளவு எளிதாய் மறைக்க முடியாது சாஹேப்! இது குறித்து மறைந்த வாஜ்பாயி அவர்களின் மருமகள் மிகச் சமீப காலத்தில் வெளிப்படையாகத் திடுக்கிடும் தகவலாக கோத்ரா ரயில் எரிப்பு தொடர் வன்முறைகளில் உங்களின் நேரடிப் பங்கைக் கூறுகிறார்.

ஒரு வேளை அவரும் உங்கள் மொழியில் ஒரு தேசத் துரோகி அல்லது பாகிஸ்தான் ஏஜென்ட் எனக் கைகாட்டப் படலாம். யார் என்ன சொன்னால் என்ன? ராமர் கோவில், முஸ்லிம் எதிர்ப்புக் கூச்சலிட்டு அப்பாவி இந்தியர்களை ஏமாற்றும் வித்தை உங்கள் விரல் நுனியில். இது இன்னும் கொஞ்ச காலம் ஓடும் மோடிஜி!

நீங்களும் ரசிப்பதற்காக ஒரு தகவல், குஜராத் பல்கலைக் கழகம் மட்டுமன்றி பல கல்வி வட்டங்களில் உங்களுக்கு வழங்கப் பட்டஇந்த முதுகலைப் படிப்பு M.A. ENTIRE POLITICAL SCIENCE எப்போது நடந்தது , அதில் என்னென்ன பாடத் திட்டம் இருந்தன என்பன குறித்து ஆராய்ச்சி செய்கிறார்கள். ஏன் தெரியுமா? ஒருவேளை இதில் வெற்றி கண்டால் அவர்களுக்கும் Ph.D., M.Phil கிடைக்கும் அல்லவா? அதனால்தான். அந்த படிப்பு தேசப் பாதுகாப்பு ரகசியம்? குறித்துத் தகவல் பெறத் தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் முடியாது என ஒன்றிய அரசின் விசுவாச அதிகாரிகள் கூறிவிட்டனர். வழக்கும் நடந்தது. வழக்குத் தொடுத்த ஆம் ஆத்மி தலைவர்கள் அர்விந்த் கெஜ்ரிவால், அஷுடோஷ் ஒய்ந்து விட்டனர். இந்தத் தகவல் இந்திய இளைஞர்கள் பல கோடிப் பேர் அறியாதது.

தேர்தல் வாக்குறுதிகளுக்கு மட்டுமல்ல, தனக்குப் பட்டதைச் சரி பார்க்காமல் கூட மக்களிடம் கட்டவிழ்த்து விடும் ஜாலக்காரர் நீங்கள் ஒரு கூட்டத்தில் ''பிஹாரிலுள்ள 'டாக்சிலா' எனக் குறிப்பிட்டுப் பேசினார் மோடி. அது, பிஹாரில் எப்போதும் இருந்ததில்லை. வடமேற்கு இந்தியாவில் உள்ள நகரம். தற்போது பாகிஸ்தானில் உள்ளது.

Huffington Post (8-.6.-2016) குறிப்பிடுவது போல வரலாற்று விஷயங்களைத் தன் போக்கில் தவறாகக் கூறுவது பலதடவை ஆகி விட்டது அவருக்கு. அட்ரிஜா போஸ் தரும் தகவலில், மோடி ஒரிஸாவிலுள்ள சூரியக் கோவில் கொனார்க் 2000 ஆண்டுகள் பழமை வாய்ந்ததென அள்ளி விட்டார். உண்மையில் கொனாரக் சூரியக் கோவில் 13 ஆம் நூற்றாண்டில் கட்டப் பட்டதாகும்.

உத்தரப் பிரதேசம், மகர் என்னும் ஊரில் நடைபெற்ற கூட்டத்தில் பங்கெடுத்த மோடிஜி, எதற்காகவோ , ''இங்கேதான் இந்தியாவின் மிகப் பெருமைவாய்ந்த ஆன்மீக ஆளுமைகளான கபீர் ஸ்வாமி, பாபா கோரகனாத், குரு நானக் கூடி ஆன்மீகம் பற்றி விவாதித்தனர்''. இவர்கள் மூவருமே இந்திய ஆன்மிக உலகின் தலைசிறந்த ஆளுமைகள் என்பது மிகமிகச் சரியே! ஆனால், மோடி அவர்கள் நமக்குச் சொல்ல வேண்டியது: பாபா கோரகனாத் 11ஆம் நூற்றாண்டிலும், கபீர் 14 ஆம் நூற்றாண்டு இறுதியிலும், குரு நானக் 15ஆம் நூற்றாண்டிலும் வாழ்ந்தவர்கள் மஹர் நகரில் ஒன்றாய்க் கூடியது எப்படி என்பதே!

உங்கள் பிம்பம் ஒரு மாய பலூன் போன்றது. உண்மைகள் உணரப் படும்போது, உணர்த்தப் படும் போது மக்கள் மீது வெளிச்சம் வரும். இது வரலாற்றுப் பாடம்தான். கற்பனை அல்ல.

தொடர்புக்கு: 9449826636

---

# வேளாண்மை நிதி ஒதுக்கீட்டில் ரூ.44 ஆயிரத்து 16 கோடி ஒன்றிய அரசு முடக்கம்

## தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கண்டனம்

தமிழ்நாடு விவசாயிகள் சங்க பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

நிகழ் நிதிஆண்டு வரை மூன்று ஆண்டுகள் ஒன்றிய அரசின் நிதி நிலை அறிக்கையில் வேளாண் துறைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் ரூ.44 ஆயிரத்து 16 கோடியை ஒன்றிய அரசு திருப்பி அளித்துள்ளது என்பது ஒன்றிய அரசுக்கு விவசாயிகள் மீது உள்ள அக்கறையின்மையையே காட்டுகிறது.

2020–21 ஆம் ஆண்டின் வேளாண் துறை பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்திருந்த தொகையில் ரூ.23824.54 கோடி, 2021–22 ஆம் ஆண்டில் ரூ.429.22 கோடி, நடப்பு 2022 – 21 ஆம் ஆண்டில் இதுவரை ரூ.19762.05 கோடி ஆக ரூ.44 ஆயிரத்து 16 கோடியை வேளாண்துறை அமைச்சகம் திருப்பி கொடுத்துள்ளது என்று விவசாயம், கால்நடை பராமரிப்பு மற்றும் உணவு பதப்படுத்துதல் துறைகளின் நாடாளுமன்ற நிலை குழுவின் அறிக்கை கடந்த 13 அன்று மக்களவையிலும், 14 அன்று மாநிலங்கள் அவையிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மை என்பது இந்தியாவின் அடிப்படை ஆதாரம்: கிராமங்களில் உள்ள மரம், செடி, கொடிகள் பயிர்கள் எல்லாம் வெறும் உயிரினங்கள் மட்டுமல்ல, இந்தியாவின் ஆன்மா என முன்னோர் பாதுகாத்து வந்தனர். அந்த வேளாண்மையை காத்து உயர்த்திடவே ஒவ்வொரு ஆண்டும் அதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. வேளாண்மைக்கு தேவைக்கான அளவில் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படுவது இல்லை என விவசாயிகள் ஒவ்வொரு ஆண்டும் போராடி வருகின்றனர்.

நீராதார மேம்பாடு, இடுப்பொருட்கள், மானியம், ஆதார விலை, கொள்முதல், பேரிடர் கால நிவாரணம் ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடு உயர்த்தப்பட வேண்டும் என்று ஒவ்வொரு ஆண்டும் விவசாயிகளின் கோரிக்கையாக முன்வைக்கப்படுகிறது. தமிழகத்திற்குரிய நதிநீர் இணைப்பு திட்டங்களுக்கு வேளாண்மை கட்டமைப்புகளை மேம்படுத்திட விவசாயிகள் சங்கங்கள் போராடி வரும் நிலையில் இதற்கு தேவையான உரிய அளவுநிதியை தமிழக அரசு ஒன்றிய அரசிடம் கேட்டு வலியுறுத்தியும் மௌனத்தை தான் பதிலாக அளிக்கிறது.

நிதி ஆதார பற்றாக்குறையால் தேவைக்குரியதிட்டங்களை செய்ய முடியவில்லைஎன சமாளித்துக் கொள்ளும் ஒன்றிய அரசு, ஒதுக்கீட்டு நிதிக்கான திட்டங்களையே ஏன் செயல்படுத்தவில்லை. ஒன்றிய அரசின் அக்கறையின்மை மற்றும் பொறுப்பின்மையே இதன் காரணமாகும்.

பட்ஜெட்டில் வேளாண் துறைக்கான நிதி ஒதுக்கீட்டை பெற்று உரிய சில திட்டங்களை நிறைவேற்றாதது என்பது விவசாயிகளை ஏமாற்றும் செயலாகும்.

எனவே திருப்பி அளிக்கப்படும் இந்த நிதியை வரும் நிதி ஆண்டு பட்ஜெட்டில் சேர்த்து விவசாயிகள் எதிர்பார்க்கும் பணிகளை திட்டமிட, நிறைவேற்றிட வேண்டும்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

திரிபுராவில்

# இடதுசாரி தலைவர்கள் மீது தாக்குதல்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய செயற்குழு வெளியிட்டுள்ள செய்தி அறிக்கை பின்வருமாறு:

திரிபுரா மாநில சட்டமன்ற தேர்தல் நடைபெற்று முடிந்த பிறகு, அம்மாநில இடதுசாரி தலைவர்கள், ஊழியர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மீது பா.ஜ.க கட்டவிழ்த்து விட்டுள்ள வன்முறை வெறியாட்டத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.

நிலைமையை மதிப்பீடு செய்திட, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பினாய் விஸ்வம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) பொலிட்பீரோ உறுப்பினரும் திரிபுரா மாநில முன்னாள் முதலமைச்சருமான மாணிக் சர்க்கார், சி.பி.ஐ(எம்) கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இ கரீம், பி.ஆர்.நடராஜன், பிகாஷ் ரஞ்சன் பட்டாச்சார்யா மற்றும் ஏ.ஏ.ரஹீம் ஆகியோர் கொண்ட குழு மார்ச் 10 அன்று திரிபுரா சென்றது. பா.ஜ.கவின் பாசிச வெறித் தாக்குதலால் சுமார் 1000 நபர்கள் தாக்கப்பட்டுள்ளனர், இடதுசாரி கட்சித் தலைவர்கள் மற்றும் ஊழியர்களின் கடைகள் 20 சூறையாடப்பட்டு, தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. 3 நபர்கள் கொல்லப்பட்டுள்ளனர். திரிபுராவில் உள்ள பிஷால்கரில் பா.ஜ.க. வன்முறையாளர்களால் தாக்கப்பட்டு, பாதிக்கப்பட்ட மக்களை இடதுசாரி மற்றும் காங்கிரஸ் கட்சிகளின் குழு மாணிக் சர்க்காருடன் சந்தித்த போது, பா.ஜ.கவின் பாசிச அரசியல் மேலும் அம்பலமானது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய செயற்குழு இது போன்ற தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதுடன், இந்திய அரசியலமைப்பிற்கு இணங்க அமித் ஷா செயல்பட வேண்டுமென்றும், இது போன்ற தாக்குதல்களைத் திரிபுரா முதலமைச்சர் தடுத்து நிறுத்திட வேண்டுமென்றும், இடதுசாரி கட்சி ஊழியர்கள் மீது பாசிச தாக்குதல் நடத்தியவர்களை உடனடியாக கைது செய்ய வேண்டுமென்றும் வலியுறுத்துகிறது.

# சென்னை கண்டோன்மென்ட் கழக தேர்தல்: 15 ஆயிரம் வாக்காளர்கள் நீக்கம்

## தேர்தல் ஆணையம் நேரடியாக தலையிட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை

சென்னை கண்டோன்மென்ட் போர்டு தேர்தல் வரும் 30.04.2023 ஆம் தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக வெளியிடப்பட்டுள்ள வாக்காளர் பட்டியலில் சுமார் 15 ஆயிரம் வாக்காளர்கள் நீக்கப்பட்டிருப்பது அதிர்ச்சியளிக்கிறது. கண்டோன்மெண்ட் கழக எல்லக்குள் குடியிருப்போர் அனைவரும் வாக்காளர்களாக இருந்த நிலை மாற்றப்பட்டு, வீட்டு வரி செலுத்துவோர்களுக்கு மட்டுமே வாக்குரிமை என்ற நிபந்தனை விதித்து, கண்டோன்மென்ட் எல்லைக்குள், நீண்ட பல ஆண்டுகளாக, குடியிருந்து வரும் பொதுமக்களுக்கு, ராணுவ நிலத்தில் குடியிருப்பதை காரணம் காட்டி வாக்குரிமை மறுக்கப்பட்டிருப்பது மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்திற்கும், அரசியல் அமைப்பு சட்டத்திற்கும் எதிரானது. குடிமக்கள் தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் ஜனநாயக உரிமையை நிராகரிக்கும் செயலாகும்.

கண்டோன்மென்ட் எல்லைக்குள் வசிக்கும் குடிமக்கள் அனைவரும் குடிதண்ணீர், சாலைவசதி, தெருவிளக்கு உள்ளிட்ட அடிப்படை வசதிகளுக்கு கண்டோன்மென்ட் கழகத்தை சார்ந்துள்ளனர். இங்கு வாழ்ந்து வரும் 18 வயது நிரம்பிய அனைவரும் தங்கள் பிரதிநிதிகளை தேர்வு செய்து வந்த அடிப்படை உரிமை மறுக்கப்பட்டிருக்கும் இந்த நேர்வில் ஒன்றிய அரசின் பாதுகாப்புத்துறை அமைச்சகம் நேரடியாக தலையிட்டு, நீக்கப்பட்ட வாக்காளர்களையும் உள்ளடக்கி கண்டோன்மென்ட் கழக தேர்தலை நடத்த வேண்டும். இது தொடர்பாக இந்தியத் தேர்தல் ஆணையம் நேரடியாக தலையிட்டு அரசுக்கு அறிவுரை வழங்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு, ஒன்றிய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்வதுடன், மாநில அரசு கண்டோன்மென்ட் கழக எல்லைக்குள் வாழ்ந்து வரும் குடிமக்களின் வாக்குரிமை பாதுகாக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# தமிழக மீனவர்கள் கைது

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

தமிழ்நாடு மீனவர்கள், இலங்கை கடற்படையால் துன்புறுத்தப்படுவதும் கைது செய்து, அங்கு சிறையில் அடைக்கப்படுவதும் கடும் கண்டனத்திற்குரியதாகும்.

மீன்பிடித் தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டு, வாழ்ந்து வரும் மீனவர்கள் உயிர், உடைமை உட்பட தொழில் பாதுகாப்பற்ற நிலை தொடர்ந்து நீடித்து வருகிறது.

நாகை மாவட்டம் அக்கரைப்பேட்டையை சேர்ந்த மீனவர்கள் 12 பேர் மற்றும் அவர்களது படகுகளையும், அதே போன்று புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினம் மீனவர்கள் 4 பேர் மற்றும் அவரது படகுகள் ஆகியவற்றை இலங்கை கடற்படையினர் பறிமுதல் செய்து, மீனவர்களை கைது செய்துள்ளனர்.

இலங்கை கடற்படையின் தாக்குதல் நடைபெறுவது முதன்முறையல்ல. தொடர்ந்து நடை பெற்று வருகின்றது. சம்பவங்கள் நடைபெறும் ஒவ்வொரு முறையும் தமிழ்நாடு முதலமைச்சர் ஒன்றிய அரசுக்கு கடிதம் எழுதுவதும், இதனைத் தொடர்ந்து சில மீனவர்கள் விடுதலை செய்யப்படுவதும் வழக்கமாகி வருகிறது.

தமிழ்நாடு மீனவர் வாழ்வுரிமைக்கு நிரந்தர தீர்வற்ற நிலையில், பாதுகாப்பற்ற நிலை தொடர்வது மிகுந்த கவலைக்குரியதாகும்.

இலங்கை அரசு தனது கடும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு, இந்திய நாட்டின் உதவியை நாடுகின்றது. இந்திய அரசு மட்டுமல்ல, தமிழ்நாடு அரசும் பெரும் உதவியை செய்தது, தொடர்ந்து செய்தும் வருகின்றன.

உதவிகளை பெற்றுக் கொள்கிற இலங்கை அரசு, இந்திய மீனவர்களை இரக்கமற்ற முறையில் கொடுமைபடுத்தி வருவதை நிறுத்தவில்லை என்பது நல்லெண்ணத்தை வலுப்படுத்த உதவாது.

பாஜக ஆட்சியில் தமிழ்நாட்டு மீனவர்கள் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காணப்படும் என நரேந்திர மோடி மக்களுக்கு வழங்கிய வாக்குறுதி இதுவரை நிறைவேற்றப்படவில்லை. இனியாகிலும் நிறைவேற்றப்படுமா? என மீனவர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களை உடனடியாக விடுதலை செய்யவும் அவர்களது படகுகளையும், உபகரணங்களையும் சேதாரமின்றி மீனவர்களிடம் ஒப்படைக்க ஒன்றிய அரசு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின், தமிழ்நாடு மாநில செயற்குழு வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளி யிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

நாடாளுமன்றம், சட்டமன்றங்களில்

# பெண்களுக்கு 33% இடஒதுக்கீடு கோரி உண்ணாவிரதம்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்கள் நேரில் வாழ்த்து




நாடாளுமன்றத்தில் நிலுவையில் உள்ள பெண்கள் இடஒதுக்கீடு சட்ட முன்வடிவை உடனடியாக நிறைவேற்றிட வேண்டும் என்பதை வலியுறுத்தி தெலங்கானா ராஷ்ட்ரிய சமிதி கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தற்போது பி.ஆர்.எஸ் கட்சித் தலைவராக உள்ள கல்வகுண்ட்ல கவிதா டெல்லியில் உள்ள ஜந்தர் மந்தரில் ஒரு நாள் உண்ணாவிரதம் மேற்கொண்டார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் கே.நாராயணா, கட்சியின் டெல்லி மாநில குழு செயலாளர் பேரா.தினேஷ் வார்ஷ்னே ஆகியோர் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கேற்றனர். பெண்களுக்கான 33% இடஒதுக்கீட்டை வலியுறுத்தி உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள கல்வகுண்ட்ல கவிதாவுக்கு கட்சியின் சார்பாக கே.நாராயணா வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

பெண்கள் இடஒதுக்கீடு தொடர்பான நாடாளுமன்ற குழுவின் தலைவராகப் பணியாற்றி, அந்தப் பிரச்னையை முன்னெடுத்துப் போராடிய கீதா முகர்ஜியின் படத்தை கல்வகுண்ட்ல கவிதாவுக்கு கே.நாராயணா பரிசளித்தார்.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தின் போது உரையாற்றிய கே.நாராயணா, பெண்கள் இடஒதுக்கீடு தொடர்பான நாடாளுமன்ற குழுவின் தலைவராகக் கீதா முகர்ஜி பணியாற்றி, தயாரித்த அறிக்கையை தான் அப்போது பிரதமராகப் பதவி வகித்த ஹெச்.டி. தேவேகவுடா நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார் என்று சுட்டிக் காட்டினார். ஆனால், பெண்களுக்கான 33% இடஒதுக்கீடு இன்றும் நிறைவேறாமல் உள்ளது. தற்போது, ஜி20 அமைப்புக்கு இந்தியா தலைமையேற்று உள்ளது. இந்திய பிரதமர் நரேந்திர மோடி அதற்கு தலைமை வகிப்பார்.

பெண்களுக்கு அதிகாரமளித்தல் என்பது ஜி20 அமைப்பின் செயல்திட்டத்தில் ஒரு பிரதானமான அம்சம் ஆகும். எனவே, இந்திய அரசாங்கம் பெண்களுக்கான 33% இடஒதுக்கீடு சட்ட முன்வடிவை உடனடியாக நிறைவேற்றியாக வேண்டும். பெண்கள் இடஒதுக்கீட்டுக்காகத் தொடர்ந்து போராடி வருகின்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, இனி வரும் காலங்களிலும் அதற்காகத் தொடர்ந்து போராடும் என்று கூறினார். பா.ஜ.கவினர் ஆட்சிக்கு வந்தால், பெண்கள் இடஒதுக்கீடு சட்ட முன்வடிவை உடனடியாக நிறைவேற்றுவோம் என்று கூறியிருந்தனர். எனவே, அதனை நிறைவேற்ற மோடிஜிக்கு இதுவே மிகச் சரியான சந்தர்ப்பம் ஆகும். இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, இடதுசாரி காட்சிகள் உள்ளிட்ட இதர எதிர்க்கட்சிகள் ஆதரவளிக்கும் என்று அவர் கூறினார்.

உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கேற்றவர்களிடையே உரையாற்றிய கல்வகுண்ட்ல கவிதா, இந்தப் போராட்டத்தில் பங்கேற்று ஆதரவு தெரிவித்த கே.நாராயணா, தினேஷ் வார்ஷ்னே ஆகியோருக்கு நன்றி தெரிவித்தார். கல்வகுண்ட்ல கவிதாவுக்கு கே.நாராயணா எலுமிச்சை சாறு அளித்து ஒரு நாள் உண்ணாவிரத போராட்டத்தை முடித்து வைத்தார்.

# பகுதிநேர ஆசிரியர்களை பணிநிரந்தரம் செய்க!

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வேண்டுகோள்

பள்ளிக் கல்வித்துறையில் தற்போது பகுதிநேர சிறப்பு ஆசிரியர்களாக பணியாற்றி வரும் ஓவிய ஆசிரியர்கள், தையல் ஆசிரியர்கள், இசை ஆசிரியர்கள், உடற்பயிற்சி ஆசிரியர்கள் என பலர் தங்களை பணிநிரந்தரம் செய்யக் கோரி போராடி வருகிறார்கள். கடந்த 12 ஆண்டுகளாக பணிபுரிந்து வரும் இவர்களின் கோரிக்கையை தமிழக அரசு ஏற்று பணிநிரந்தரம் செய்ய வேண்டுமென இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# LGBTQIA+ சமூகத்தவரின் உரிமைகளைப் பாதுகாத்திடுக!

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

LGBTQIA+ சமூகத்தவரின் உரிமைகளைப் பாதுகாத்திட வேண்டும் என்று வலியுறுத்தி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள செய்தி அறிக்கை பின்வருமாறு:

உச்ச நீதிமன்றமும், இந்திய அரசாங்கமும் LGBTQIA+ சமூகத்தவரின் உரிமைகளைப் பாதுகாத்திட வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு வலியுறுத்துகிறது. இந்த விஷயத்தை ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியலமைப்புச் சட்ட அமர்விற்கு அனுப்ப வேண்டும் என்ற உச்ச நீதிமன்றத்தின் முடிவை கட்சி கவனத்தில் எடுத்துக் கொள்கிறது.

இந்த வழக்கு தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் அரசாங்கம் மேல்முறையீடு செய்திட மேற்கொள்ளும் நடவடிக்கையைக் கட்சி கண்டிக்கிறது. உச்ச நீதிமன்றத்தில் அரசாங்கம் மேல்முறையீடு செய்வது என்பது ஆர்.எஸ்.எஸ் நிலைப்பாட்டை ஏற்றுக் செயல்படுவது ஆகும். அரசாங்கத்தின் இந்த அணுகுமுறை மனுவாத சிந்தனைப் போக்கின் பிரதிபலிப்பு ஆகும்.

LGBTQIA+ சமூகத்தவரின் கோரிக்கைகளை அங்கீகரிக்க மறுப்பது என்பது அனைவருக்கும் கண்ணியமான வாழ்க்கை எனும் உரிமையை உறுதிப்படுத்தும் அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரானது ஆகும். இந்தச் சமூகத்தவரின் உரிமைகள் மற்றும் வாழ்வை அங்கீகரிக்கும் முற்போக்கான நிலைப்பாட்டை உலகின் பல்வேறு அரசாங்கங்கள் மேற்கொண்டுவிட்டன. பா.ஜ.க அரசாங்கம் உண்மையில் ஜனநாயகத்தைச் சீர்குலைக்கிறது.

நமது நாட்டில் நிலவும் சூழலை மட்டுமின்றி, உலகம் முழுவதிலும் உள்ள சூழலையும் கருத்தில் கொண்டு, இந்தப் பிரச்சனை தொடர்பான அனைத்து அம்சங்களையும் உச்ச நீதிமன்றத்தின் அரசியலமைப்புச் சட்ட அமர்வு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் இந்தச் சமூகத்தவரின் உரிமைகள் மற்றும் கண்ணியத்தை உயர்த்திப் பிடிக்கும் வகையில் ஒரு முடிவினை மேற்கொள்ள வேண்டும் என்றும் கட்சி வலியுறுத்துகிறது.

# சங்கே முழங்கு!



## சென்னை மாநகரம் செல்போன் பறிக்கும் நகரமா?

வந்தாரை வாழவைக்கும் சென்னை என புகழப்படும் சென்னை மாநகரம் வந்தாரிடம் மட்டுமல்ல, உள்ளூர் வாசிகளிடமும் வழிப்பறி செய்யும் நகரம் என்ற அவப்பெயரை சமீப காலமாக பெற்று வருகிறது.

தருமமிகு சென்னை இப்படி தரங்கெட்ட சென்னையாக, மக்கள் அச்சமின்றி வாழ்வதற்கு தகுதியற்ற சென்னையாக மாறிவிடலாமா? என்ற கேள்வி நமக்கு எழுகிறது.

சென்னை பூக்கடையில் இருந்து அண்ணா சாலையில் பயணிப்போர் தங்கள் செல்போனை பாக்கெட்டில் வைப்பதற்கு பதில் லாக்கரில் தான் வைத்து எடுத்துக் கொண்டு போக வேண்டி இருக்கிறது.

சென்ட்ரல் ரயில் நிலையம், சென்ட்ரல் பேருந்து நிலையம், சிம்சன் பேருந்து நிலையம் உள்ளிட்ட பல பேருந்து நிறுத்தங்களில் எல்லாம் செல்போனோடு செல்பவர்கள், எப்போது தங்கள் செல்போன் பறிபோகும் என்று தெரியாத அச்ச நிலையில் பயணம் மேற்கொள்ள வேண்டி உள்ளது.

உள்ளூர்வாசிகள் தங்கள் செல்போனை பறி கொடுத்துவிட்டு செய்வதறியாது தவிப்பது ஒரு பக்கம் என்றால், மொழி அறியாது, ஊர் அறியாது, தாங்கள் செல்ல வேண்டிய முகவரி அறியாது செல்போனை மட்டுமே நம்பி சென்னைக்குள் காலடி எடுத்து வைக்கும் வெளி மாநில பயணிகளின் செல்போன் திருடப்பட்டால் அவர்களின் கதி என்னாவது?

இப்படித்தான் பலரும் தங்கள் செல்போனை பறிகொடுத்து விட்டு பரிதவித்து நிற்கின்றனர்.

சென்னையில் இருந்து இரயிலில் வெளியூர் செல்லும் பயணிகளிடம் செல்போன் பறிப்பது தொடர்கதையாகிவிட்டது.

சென்னை மாநகர குற்றப் பிரிவு காவல்துறை இந்த கொடும் குற்றத்தை கண்டும் காணாமல் கள்ள மவுனம் சாதிக்கிறது. இதுகாவல்துறையின் மீது பல்வேறு சந்தேகங்களை எழுப்புகிறது.

பொதுமக்களை இது போன்ற திருடர்களிடம் இருந்து பாதுகாக்கத்தான் தமிழக காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு உள்ளனர். அப்படி இருந்தும் காவல்துறை பூத் அருகில் இருக்கும் போதே மூன்றாவது கண் எனச் சொல்லப்படும் காமிராக்கள் கண்காணிக்கும்போதே இந்த செல்போன் திருட்டு நடைபெறுகிறது.

அங்கு பாதுகாப்பு பணியில் இருக்கும் காவலர்களிடம் அடுத்த நிமிடமே புகார் கொடுத்தாலும் பலன் இல்லை. பூக்கடை ஸ்டேசனுக்கு போய் புகார் கொடு என்கிறார்கள். பறிகொடுத்தவர்களிடமே பாதுகாப்பாக போனை வச்சிருக்கக் கூடாதா? மேல் பாக்கெட்டில் ஏன் வைத்தாய்? கையில் ஏன் எடுத்துக்கிட்டு போன? என கேள்வி மேல் கேள்வி கேட்டு செல்போனை பறிகொடுத்தவரையே நொந்து நூடுல்ஸாக ஆக்கி விடுகிறது காவல்துறை.

செல்போனை பாக்கெட்டில் வைக்காமல் வங்கி பாதுகாப்பு பெட்டகத்திலா வைத்து எடுத்துச் செல்ல முடியும்? கவனமாக செல்பவர்களின் கவனத்தை திசை திருப்பித்தான் திருடர்கள் களவாடுகிறார்கள்.

நாம் நமது செல்போனை பாதுகாக்க ஒவ்வொரு நொடியும் கவனமாக இருக்க வேண்டி உள்ளது. நாம் ஒரு நொடி கவனம் சிதறினாலே அது, திருடர்களுக்கு நல்வாய்ப்பாக அமைந்து விடுகிறது. எனவே கவனமாக இல்லை என்று கூறி செல்போனை பறிகொடுத்தவர்கள் மீது பழி போடுவது காவல்துறைக்கு அழகல்ல.

இப்படி திருடுபோனால் கண்டுபிடித்து தருவதற்குத்தானே காவல்துறை உள்ளது. அப்படி இருக்க இதுவரை காணாமல் போன செல்போன்கள் எவ்வளவு? இதில் கண்டுபிடிக்கப்பட்டவை எவ்வளவு? பல்வேறு பாதுகாப்பு அம்சங்கள் உள்ள நவீன செல்போன்களை திருடுபவர்களிடமிருந்து ஏன் கண்டுபிடிக்க முடியவில்லை?

சென்னை பூக்கடை, சென்ட்ரல், அண்ணா சாலையில் தொடர்ச்சியாக செல்போன் திருடப்படும்போது அந்த தொழில்முறை திருடர்களை ஏன் பிடிக்கவும், தண்டிக்கவும் முடியவில்லை?

அனைத்து இடங்களிலும் பொருத்தப்பட்டுள்ள கேமராக்களின் கண்கள் மறைக்கப்படுகிறதா? அல்லது திருடர்களுக்கு காவல்துறையில் உள்ள சில கருப்பு ஆடுகள் மறைமுக ஆதரவு தருகிறதா? என்ற கேள்வி மக்கள் மத்தியில் பரவலாக ஏற்பட்டுள்ளது. செல்போன் விலை குறைந்தது ரூ.10,000 எனவே திருடுவதில் நல்ல லாபம் இருக்கிறது போலும். தருமம் மிகு சென்னையை திருடர்மிகு சென்னையாக காவல்துறை மாறிவிட அனுமதிக்க கூடாது.

– என்.எஸ்.பிரதாப்சந்திரன்

# பெரும் குழப்பத்தின் திருப்பத்தில் திரிபுரா

திரிபுரா மீண்டும் குழப்பத்தின் மத்தியில் வீசப்பட்டுள்ளது. வடகிழக்கு மாநிலத்தின் அப்பாவி மக்கள், பாஜக மீண்டும் அதிகாரத்திற்கு வந்தால் அவர்களுக்காக அதன் வசம் என்ன வைத்திருக்குமோ அதை அனுபவித்து வருகிறார்கள். தேர்தல் பிரச்சாரம் நடைபெற்ற குறைந்த காலத்தின் பொழுது மக்கள் சற்று நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

தேர்தல் யுக்தியாகவேனும் வன்முறை அரசியலுக்குப் பாஜக தற்காலிக விடை கொடுக்கும் என மக்கள் எதிர்பார்த்தனர். அவர்களின் போலியான சாதனைகளுடன் திரிபுராவில் அமைதியை ஏற்படுத்துவதாகவும் பாஜக தலைவர்கள் உறுதியளித்தனர். அது மக்களை ஏமாற்றுவதற்காக. தொடர்ந்து தேர்தல் நிகழ்முறைகளுடன் வன்முறை வெறியாட்டம் என்பது பாஜகவின் முத்திரை. முடிவுகள் வெளியானதும், இதுவரை காணாத வன்முறையைப் பழிவாங்கும் வகையில் மக்கள் மீது ஆர்.எஸ்.எஸ். – பா.ஜ.க. கட்டவிழ்த்துவிடும்.

மோடி – ஷா இணையால் வழி நடத்தப்படும் அதன் பெருந்தலைகள் திணிக்கப்பட்ட பெரும்பான்மையுடன் மாநிலத்தில் இரண்டாவது முறை அதிகாரத்துக்கு வந்துள்ளது. அந்த இலக்கை மனதில் வைத்தே ஆள் படை, பண பலம் தண்ணீராய்ச் செலவிடப்பட்டது. மத்திய அமைச்சர்கள் மாநிலத்தின் குறுக்கும் நெடுக்குமாக அலைந்தனர். இத்தனை முயற்சிகளுக்குப் பிறகும் ஒரு குறுகிய வெற்றியை, மிகச் சிறிய பெரும்பான்மையை மட்டுமே அவர்களால் அடைய முடிந்தது.

பாஜக 10 சதவீத வாக்குகளின் பங்கை இழந்தது, அவர்களது சந்தர்ப்பவாதக் கூட்டணி, 60 உறுப்பினர்கள் சட்டமன்றத்தில், 11 இடங்களை இழந்தது. இத்தகைய தருணங்களில் மக்களைத் தண்டிக்க அவர்கள் மீது பாய்வதற்கு ஆர்.எஸ்.எஸ். தத்துவம் தங்கள் அணிகளுக்குப் பயிற்சி அளித்துள்ளது. எந்தெந்த தொகுதிகளை அவர்கள் தோல்வி அடைந்து இழந்தார்களோ அங்கெல்லாம் ஆர்எஸ்எஸ் – பாஜக கூட்டு, மக்களுக்குப் பாடம் புகட்ட, அவர்கள் மீது தாக்குதல் தொடுக்கும். வென்றியடைந்த தொகுதிகளின் மக்கள் சலுகை பெறும் இடத்தில் இருப்பர். பாசிசக் கருத்தியலில் பயிற்சி பெற்ற ஒரு கட்சிக்கு, ஜனநாயகம் மற்றும் பெருமிதத்துடன் வெளிப்படுத்தும் அதன் விழுமியங்கள் எப்போதும் தாக்குதலுக்குரிய இலக்குகளாகவே இருக்கும். திரிபுராவில் இன்று ஜனநாயக சக்திகள் அந்த அனுபவங்களைச் சந்தித்துக் கடந்து வருகின்றன.

தீர்மானகரமான போர்க் களமான 2024 பொதுத் தேர்தலுக்கான ஒரு பயிற்சியாகவே வடகிழக்கு தேர்தலைப் பாஜக அணுகியது. அவர்களது அனைத்து ஆயுதங்கள் மற்றும் வெடி பொருட்களைக் குவித்து, இரக்கமற்றக்



கொடூரங்கள் மற்றும் சதித்திட்டத் தந்திரங்கள் அத்தனையும் தாராளமாகப் பிரயோகித்தனர். எப்படியாவது அதிகாரத்தைக் கைப்பற்றுவதே அவர்களது ஒரே ஒற்றை இலக்கு.

மேகாலயா மாநிலத்தில் இரண்டு இடங்களை மட்டுமே வென்ற பாஜக கட்சியின் உண்மையான முகம் என்ன என்பதை மோடி காட்டி விட்டார். தேர்தலின்போது ஊழலின் ஒட்டுமொத்த வடிவம் என்று வர்ணிக்கப்பட்ட மனிதரான கான்ராட் கே சங்மா, ஒரே இரவில் அவர்கள் கூட்டணியின் தலைவராகி விட்டார். அது மட்டுமின்றி, சங்மாவின் பதவி ஏற்பு விழாவைக் கொண்டாட மோடியே ஷிலாங்கிற்குப் பறந்து வந்தார். நாகாலாந்து மாநிலத்தின் கதையிலும்கூட பெரிய வித்தியாசம் இல்லை.

ஒரு சிறு அதிகாரப் பகிர்வுக்கும் ஆலாய்ப் பறக்கும் பாஜகவின் பேராசை எல்லா இடங்களிலும் அம்பலப்பட்டு நிற்கிறது. அவர்களைப் பொருத்தவரை அதிகாரம் மக்கள் நலனுக்கானது இல்லை. அது அதானிகளின் கொள்ளையை ஆதரிக்கவே; அதற்காகவே அதட்டி மிரட்டியோ, அடிபணிந்தோ எப்படியாவது அதிகாரத்தைக் கைப்பற்றுவதில் குறியாய் இருக்கிறார்கள். அந்தப் பாதையைத் தடையற்றதாக்க ஆர்எஸ்எஸ் – பாஜக, அடக்கு முறையைக் கையாண்டு மக்களை ஒடுக்குகிறது, அமைதியாக வாழ்வதற்கான அவர்களின் ஜனநாயக உரிமைகளின் கழுத்தை நெரிக்கிறது. அப்பெரும் குழப்பதின் ஊடே திரிபுரா செல்கிறது. திரிபுராவின் சகோதார சகோதரிகளுக்கு ஆதரவாக நாட்டின் மதசார்பற்ற ஜனநாயக சக்திகள் ஒன்றுபட்டு நிற்க வேண்டிய தருணம் இது.

நன்றி: நியூ ஏஜ் (தலையங்கம்)

தமிழில் : நீலகண்டன்

## காரைக்குடியில் ஆளுநரை கண்டித்து ஆர்ப்பாட்டம்



காரைக்குடியில் ஆளுநர் ரவியை கண்டித்து கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இந்த ஆர்ப்பாட்டத்திற்கு ஏஐடியூசி மாவட்ட பொதுச் செயலாளர் ஏ.ஜி.ராஜா தலைமை வகித்தார். மாவட்ட துணைச் செயலாளர் கண்ணன் முன்னிலை வகித்தார். மாநில துணை பொதுச்செயலாளர் (உள்ளாட்சி) பி.எல்.ராமச்சந்திரன், மாநில துணைத்தலைவர் மீனா சேதுராமன், அரசு போக்குவரத்து கழக மாநில துணைத்தலைவர் மணவழகன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

## ஜனசக்தி விழிப்புணர்வு பிரச்சாரம்




மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஒன்றியம் ஒருங்கிணைந்த பாலமேடு ஏஐடியுசி ஆட்டோ நிலையம் முன்பு, ஒன்றியச் செயலாளர் குமரேசன், ஏஐடியுசி செயலாளர் பாலகிருஷ்ணன் ஆகியோர் தலைமையில் ஜனசக்தி விழிப்புணர்வு பிரச்சாரம் நடைபெற்றது. இதில் ஜனசக்தி வார இதழுக்கான ஸ்டிக்கர்கள் அச்சடித்து ஆட்டோவில் ஒட்டப்பட்டது. இந்நிகழ்வில் மதுரை ஜனசக்தி பொறுப்பாளர் நாகஜோதி, ஆட்டோ தொழிலாளர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## முக்கிய அறிவிப்பு

ஜனசக்திக்கு கட்டுரை எழுதுவோர் படம் உள்ளிட்டு முக்கால் பக்கத்திற்குள் எழுத வேண்டுகிறோம், டைப்பிங் செய்து word fileலில் unicode fontல் அனுப்பவும்.

வாட்ஸ் அப்பில் செய்திகள், படங்கள் அனுப்பக் கூடாது. புகைப்படங்கள் தெளிவாக இருக்க வேண்டும். ஜனசக்தி இ.மெயிலில் மட்டும் அனுப்ப வேண்டும். நோட்டீஸ், மனுக்களை அப்படியே அனுப்பக் கூடாது. சுருக்கி செய்தியாக்கி அனுப்ப வேண்டும்.

ஜனசக்தி உள்ளடக்கம் சம்பந்தமாகத் தொடர்பு கொள்ள வேண்டிய கைபேசி:

**டி.எம்.மூர்த்தி - 9444360869,**
**த.லெனின் - 94444 81703**

இயக்கச் செய்திகள் சம்பந்தமாகத் தொடர்பு கொள்ள வேண்டிய கைபேசி:

**ஜெ.முருகேசன் - 78456 93142**

ஜனசக்தி விநியோகம் சம்பந்தமாக தொடர்பு கொள்ள வேண்டிய கைபேசி:

**கே.கணேசன் - 9444331138**

ஜனசக்தி வரவு கணக்குச் சம்பந்தமாகத் தொடர்பு கொள்ள வேண்டிய கைபேசி:

**இளசை கணேசன்**
**82204688**16

ஆசிரியர் குழு,
ஜனசக்தி

இராஜபாளையம் ராம்கோ குழுமம் டெக்ஸ்டைல் பிரிவு

# தொழிற்சங்க தேர்தலில் ஏஐடியுசி வெற்றி

விருதுநகர் மாவட்டம் இராஜபாளையத்தில் ராம்கோ குழுமம் டெக்ஸ்டைல் பிரிவு ஆலைகளில் தொழிற்சங்க அங்கீகாரத்திற்கான தேர்தல் நடைபெற்றது. அதில் ஏஐடியுசி அமோக வெற்றி பெற்றது. அதன் விபரம் :

இராஜபாளையம் மில்ஸ் ஏஐடியுசி 52%, ஹெச்எம்எஸ் 29%, ஐஎன்டியுசி 10%, ராமராஜ் சர்ஜிகல் காட்டன் பெருமாள்பட்டி யூனிட் ஏஐடியுசி 65.76%, ஐஎன்டியுசி 34.24%, இராஜபாளையம் ஏ.ஐ.டி.யு.சி. பி.எம்.ஆர். மகாலில், மறைந்த முன்னாள் ஏ.ஐ.டி.யு.சி. தலைவர் பி.எம்.இராமசாமி படத்திற்கு மாலை அணிவித்து வெற்றியை கொண்டாடினர். ஏஐடியுசி தலைவர் வி.இரவி, பொதுச்செயலாளர் பி.கே.விஜயன் வெற்றிக்கு உழைத்த நிர்வாகிகளுக்கு சால்வை அணிவித்து பாராட்டினர்.

## விருதுநகரில் பிரச்சார பயணக்குழுவுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்க முடிவு

விருதுநகரில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம், அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் விருதுநகர் மாவட்ட விரிவடைந்த பேரவைக் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட தலைவர் செந்தில்குமார் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் கணேசமூர்த்தி மாநில குழு முடிவுகளை விளக்கிப் பேசினார். மாநில துணை செயலாளர் தமிழ் பெருமாள் பரப்புரை பயணம் குறித்து பேசினார். சிபிஐ தேசிய குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட பொருளாளர் எஸ்.பழனிக்குமார், மாநிலகுழு உறுப்பினர் பாலமுருகன் ஆகியோர் பேசினர். விருதுநகர் மாவட்டத்திற்கு மார்ச் 27 அன்று எங்கே எனது வேலை? என்று கேட்டு வருகைதரும் பரப்புரை பயணக்குழுவுக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது என முடிவு செய்யப்பட்டது.

# பெருந்துறையை நகராட்சியாக தரம் உயர்த்துக!

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்டக்குழுக் கூட்டம் மாவட்டத் துணைச் செயலாளர் எஸ்.சின்னசாமி தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கட்சியின் மாநிலத் துணைச் செயலாளர் நா.பெரியசாமி கலந்து கொண்டு கட்சியின் தேசியக்குழு முடிவுகளையும், மாநில நிர்வாகக்குழு, மாவட்ட செயலாளர்கள் கூட்ட முடிவுகளையும் விளக்கிப் பேசினார். கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.டி.பிரபாகரன் நடைபெற்ற வேலையறிக்கை மற்றும் மேற்கொள்ள வேண்டிய உடனடிப் பணிகள் பற்றி விளக்கிப் பேசினார்.

தமிழ்நாடு அரசு, விசைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கி வந்த 750 யூனிட் இலவச மின்சாரத்தை 1000 யூனிட்டுகளாகவும், கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கி வந்த 200 யூனிட் இலவச மின்சாரத்தை 300 யூனிட்டுகளாகவும் உயர்த்தி அறி வித்துள்ளதையும், மேலும் அதற்கு அதிகமாக பயன்படுத்தும் மின்சாரத்திற்கு கட்டணத்தை குறைத்தும் அறிவித்துள்ளதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்டக்குழு வரவேற்றுப் பாராட்டுகிறது. சமையல் காஸ் விலையை மத்திய அரசு சமீபத்தில் உயர்த்தியுள்ளது. இதன் காரணமாக அனைத்து அத்தியாவசிய பொருட்களின் விலைகளும் உயர்ந்து மக்களுக்கு பாதிப்பு ஏற்படும். ஆகவே, சமையல் கேஸ் விலைகளை கணிசமாகக் குறைக்க வேண்டுமென கேட்டுக் கொள்வது , பெருந்துறை சிறப்புநிலை பேரூராட்சி மற்றும் கருமாண்டிசெல்லிபாளையம் பேரூராட்சி ஆகியவற்றை இணைத்து பெருந்துறை நகராட்சியாக தரம் உயர்த்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# ஏஐடியுசி ஆட்டோ ஓட்டுநர்கள் சங்க கிளை தொடக்கம்

நெல்லை மாவட்டம் பாளை. ஒன்றியம். கே.டி.சி. நகர் வடபகுதியில் புதிதாக ஏஐடியுசி ஆட்டோ ஓட்டுநர்கள் சங்கம் துவங்கப்பட்டுள்ளது.

துவக்க விழாவிற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நெல்லை மாவட்ட செயலாளர் செ.லட்சுமணன் தலைமை தாங்கினார்.

ஏஐடியுசி மாநில தலைவர் எஸ்.காசி விஸ்வநாதன் கொடியேற்றி சிறப்புரையாற்றினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வழக்கறிஞரும் நமது ஆட்டோ சங்க சட்ட ஆலோசகருமான பி.கணபதி சுப்ரமணியன் சங்கப் பெயர் பலகையை திறந்து வைத்தார்.

ஏ.ஐ.டி.யு.சி. நெல்லை மாவட்ட பொதுச் செயலாளர் ஆர். சடையப்பன் முன்னிலை வகித்தார் மற்றும் சிபிஐ அலுவலக செயலாளர் ஏ.முத்துகிருஷ்ணன், ஏஐடியுசி மாவட்ட செயலாளர் நண்பா கே. முத்துகிருஷ்ணன், பாளை. ஒன்றிய துணை செயலாளர் எம்.நவராஜ் மோசஸ், ஏ.பாலு மற்றும் ஆட்டோ சங்க நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

திறப்பு விழாவில் ஆட்டோ சங்க தலைவராக எஸ்.சிவாஜி, செயலாளராக ஜி.பாலா, பொருளாளராக ஒய்.ராஜாமணி, துணைத தலைவராக எம்.ஆபிரகாம் துரைசிங், துணை செயலாளராக வி.அந்தோணி மற்றும் ஜி.சங்கர், டி.வீரமணிகண்டன் உட்பட ஏழு பேர் கொண்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

# வருவாய் துறையினர் செய்துள்ள பல்வேறு முறைகேடுகளைக் கண்டித்து உண்ணாவிரதம்




அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் அருகே உள்ள பெரிய கிருஷ்ணாபுரம் கிராமத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில், கிளைச் செயலாளர் ரவிச்சந்திரன் தலைமையில் உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அரியலூர் மாவட்ட செயலாளர் ராமநாதன் உண்ணாவிரதப் போராட்டத்தை தொடங்கி வைத்து கோரிக்கைகளை விளக்கி பேசினார். அப்போது பெரிய கிருஷ்ணாபுரம் பகுதியில் வசித்து வரும் பரமானந்தம் என்பவர் பெயரில் பத்திரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள படி ஆர் எஸ் அண்ட் நிலத்துக்கு பதிலாக இரண்டு சென்ட் நிலத்துக்கு மட்டும் பட்டா வழங்கிய கிராம நிர்வாக அலுவலர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுபோல் ஜேம்ஸ் என்பவர் பெயரில் உள்ள நிலத்திற்கு ஞானபிரகாசம் என்கிற இன்னொரு நபருக்கு பட்டா வழங்கி வருவாய்த்துறையினர் மோசடி செய்துள்ளனர். அரசு இலவசமாக அளித்த ஒரு வீட்டு மனைக்கு மூன்று பேருக்கு பட்டா கொடுத்து குளறுபடி செய்துள்ளனர். இத்தகைய வருவாய்த்துறை மோசடி வன்மையாக கண்டிக்கத்தக்கது. ஏழை எளிய மக்களின் போராட்டத்திற்கு செவி சாய்த்து அதிகாரிகள் உடனடியாக குளறுபடிகளை சரி செய்து தர வேண்டும். ஒரே வீட்டுமனையை மூன்று பேருக்கு பட்டா போட்டு கொடுத்த அவலம் வேறு எந்த மாவட்டத்திலும் நடந்திருக்க வாய்ப்பு இல்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கு சரியான நடவடிக்கை எடுத்து வீட்டுமனை பட்டா வெவ்வேறு இடங்களில் வழங்கி பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டும் என்று பேசினார். இந்தப் போராட்டத்தில் மாவட்ட குழு கொளஞ்சியம்மாள், கவர்னர், ஒன்றிய செயலாளர் ஐயப்பன், மற்றும் தோழர்கள் ராஜேந்திரன், பரமானந்தம், குருநாதன், தமயந்தி மஞ்சுளா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சுப்பலாபுரத்தில்

# மக்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்



தென்காசி மாவட்டம் சுப்பலாபுரத்தில் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் பிடித்தம் செய்யப்பட்ட பணத்தை திருவிழா காலங்களில் வழங்க வேண்டும், கைத்தறி, விசைத்தறி தொழிலாளர்களை பாதுகாத்திடவும், நெசவாளர்களுக்கு மருத்துவக் காப்பீடு திட்டத்தை செயல்படுத்திடவும், 100 நாள் வேலைத்திட்ட நிதியை அதிகப்படுத்திடவும், ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடுதல் மருத்துவர், செவிலியர்களை நியமித்திட கோரியும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், ஏஐடியுசி கைத்தறி விசைத்தறி தொழிலாளர் சங்கமும் இணைந்து ஆர்ப்பாட்டம் நடத்தியது.

மாவட்ட செயலாளர் டி.இசக்கிதுரை, ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் டி.சுப்பையா, துணைச் செயலாளர் எஸ்.வேலாயுதம், மாவட்ட விசைத்தறி சங்க செயலாளர் பி.வேலு, மாவட்ட தலைவர் கே.முருகன், துணைத் தலைவர் எஸ்.ஆறுமுகம் உள்ளிட்டோர் உரையாற்றினர்.

# கைநெசவு தொழிலாளர் சங்க பேரவை

அரியலூர் மாவட்டம் வாரியங்காவல் ஏ.ஐ.டி.யு.சி. கை நெசவு தொழிலாளர்கள் சங்க பேரவை கூட்டம் வாரியங்காவல் தனியார் திருமண மண்டபத்தில் சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. சிதம்பரம், பிச்சை பிள்ளை, செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழ்நாடு கைத்தறி நெசவு தொழிலாளர் சங்க பொதுச்செயலாளர் ராதா, மாநில கைத்தறி நெசவு சம்மேளனம் மூர்த்தி, மணி ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். சிபிஐ மாவட்ட செயலாளர் ராமநாதன், ஜெயங்கொண்டம் ஒன்றிய செயலாளர் ராஜா பெரியசாமி, ஆண்டிமடம் பொறுப்பாளர் கவர்னர் ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர். பேரவை கூட்டத்தில் புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். தலைவராக சண்முகசுந்தரம். செயலாளராக மணி. பொருளாளராக அன்பழகன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

நெசவாளருக்கு ஓய்வூதியமாக ரூ.3 ஆயிரம் ஆக அரசு உயர்த்தி தர வேண்டும். நல வாரியத்தில் முறைகேடு நடைபெறுவதை தடுக்க ஆன்லைன் பதிவை ரத்து செய்ய வேண்டும். பதிவுகளை நேரடியாக பதிவு செய்ய மீண்டும் ஆவண செய்ய வேண்டும். உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தோழர் செல்வராசு நன்றி தெரிவித்து பேசினார்.

# திருச்சியில் உள்ளாட்சி பணியாளர்கள் ஆர்ப்பாட்டம்




தமிழ்நாடு முழுவதும் உள்ள உள்ளாட்சி தொழிலாளர்கள், தூய்மை பணியாளர்களின் வேலையை பறிக்கக் கூடாது. ஊதியத்தை பறிக்கக்கூடாது. பணி நிரந்தரம் செய்வது குறித்து பரிசீலிக்கப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும். தூய்மை பணியாளர்களின் பணி ஊதியம், ஓய்வூதியம் போன்ற கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி திருச்சி மாவட்ட உள்ளாட்சி தொழிலாளர்கள் ஏ.ஐ.டி.யு.சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் திருச்சி கலெக்டர் அலுவலகம் முன்பு நடந்தது. உள்ளாட்சி ஏ.ஐ.டி.யு. சி மாவட்ட செயலாளர் சுப்பிரமணியன் தலைமை தாங்கினார்.

திருச்சி மாவட்ட உள்ளாட்சி ஏ.ஐ.டி.யு.சி தலைவர் இந்திரஜித், திருச்சி மாவட்ட ஏஐடியுசி பொதுச் செயலாளர் க.சுரேஷ், மாவட்ட தலைவர் நடராஜா, மாவட்ட பொருளாளர் ராமராஜ் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் சி.பி.ஐ மாவட்ட செயலாளர்கள் ராஜ்குமார், சிவா, மேற்கு பகுதி செயலாளர் சுரேஷ் முத்துச்சாமி உட்பட திரளானோர் கலந்து கொண்டனர்.

# நுகர்பொருள் வாணிபக் கழக தொழிற்சங்க கூட்டமைப்பு 1000 இடங்களில் ஆர்ப்பாட்டம்




நுகர் பொருள் வாணிப கழகத்தை தனியார் மயமாக்கும் நடவடிக்கைகளை கண்டித்தும், கொள்முதல் நிலையங்களில் தேங்கியுள்ள நெல் மூட்டைகளை உடனுக்குடன் இயக்கம் செய்யவும், எடை இழப்பை பணியாளர்கள் மீது சுமத்துவதை கைவிட கோரியும் , சுமை பணி, துப்புரவு பணிகளில் டெண்டர் முறைகளை கைவிடவும், நவீன அரிசி ஆலைகளை தனியாருக்கு தாரை வார்ப்பதை கண்டித்தும், ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு மாத கருணை ஓய்வூதியம் ரூ.4000 ம் வழங்கிட வலியுறுத்தியும், நுகர் பொருள் வாணிபக் கழகத்தில் காலி பணியிடங்களை நிரப்பிடவும் உள்ளிட்ட 12அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு முழுவதும் அனைத்து கொள்முதல் நிலையங்கள், கிடங்குகள், சேமிப்பு நிலையங்கள், நவீன ஆலைகள் முன்பு மார்ச் 9 அன்று தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் செயல்படும் ஏஐடியுசி, சிஐடியு, ஐஎன்டியுசி, ஏஐசிசிடியு, எஸ்சிஎஸ்டி அம்பேத்கர் சங்கம், பாட்டாளி தொழிற்சங்கம் உள்ளிட்ட அனைத்து தொழிற்சங்கங்கள் சார்பில் ஆயிரம் இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தஞ்சாவூரில் கரந்தை நெல் கொள்முதல் நிலையம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு நுகர் பொருள் வாணிப கழக ஏ.ஐ.டி.யு.சி. தொழிலாளர் சங்கத்தின் மாநில பொருளாளர் தி.கோவிந்தராஜன் தலைமை வகித்தார். மாநில பொதுச் செயலாளர் சி.சந்திரகுமார் கோரிக்கைகளை விளக்கி சிறப்புரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் ஏ.ஐ.டி.யு.சி மாநிலச் செயலாளர் ஆர்.தில்லைவனம், மாவட்ட செயலாளர் துரை. மதிவாணன், சங்க நிர்வாகிகள் எஸ்.தியாகராஜன், எஸ்.செல்வம், எஸ்.ஞானசேகரன், மேஸ்திரி ஆறுமுகம் ஆர்.சந்தான கிருஷ்ணன் மற்றும் சுமைத் தொழிலாளர்கள் பங்கேற்றனர்.

# கூட்டு பாலியல் பலாத்காரம்: பரமக்குடியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம்




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் இராமநாதபுரம் மாவட்டக் குழு சார்பில் மாவட்டச் செயலாளர் என்.எஸ். பெருமாள் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய கவுன்சில் உறுப்பினரும், இந்திய மாதர் தேசிய சம்மேளன மாநில துணைச் செயலாளருமான எம்.கண்ணகி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

பரமக்குடியில் பள்ளி மாணவியை கூட்டு பாலியல் பலாத்காரம் செய்ததை கண்டித்தும், இதில் தொடர்புடைய அனைவரையும் பாரபட்சமின்றி கைது செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தியும்,

காவல்துறை நேர்மையான முறையில் விசாரிக்க வழக்கை சிபிசிஐடி வசம் ஒப்படைக்க வேண்டும், மேலும் மாஜிஸ்திரேட் தலைமையில் நீதி விசாரணைக் குழு அமைக்க வேண்டும் எனவும்,

குற்றவாளிகள் ஜாமினில் வெளிவரமுடியாத அளவுக்கு குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டும். உள்ளிட்ட கோரிக்கைகள் முழக்கமிட்டு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மகிளா காங்கிரஸ் கட்சியின் மாவட்டத் தலைவர் ராம லெட்சுமி, வழக்கறிஞர் சி.பசுமலை, மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் ஆர். கருணாநிதி, கே.ஜீவா, இராமநாதபுரம் கே. களஞ்சியம், பி.நாகராஜன், பரமக்குடி நகர் மன்ற மேனாள் தலைவர் ராசி என்.போஸ் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

# விசைத்தறி தொழிலாளர்கள் சென்னிமலையில் ஆர்ப்பாட்டம்




சென்னிமலை வட்டார விசைத்தறி தொழிலாளர்களுக்கு, ஒப்பந்தப்படி வழங்கி வந்த கூலியை தன்னிச்சையாக குறைத்துள்ளதைக் கண்டித்தும், குறைத்த கூலியை நிலுவையுடன் சேர்த்து வழங்க வலியுறுத்தியும் ஏஐடியுசி விசைத்தறி தொழிலாளர்கள் சங்கம் சார்பில் சென்னிமலை பேருந்து நிலையம் முன்பு சங்கத் தலைவர் எம்.செங்கோட்டையன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஏஐடியுசி மாநிலச் செயலாளர் எஸ்.சின்னசாமி, சுமைதூக்கும் தொழிலாளர் சங்கத் தலைவர் எஸ்.பொன்னுசாமி, கட்டடத் தொழிலாளர் சங்க மாவட்டப் பொருளாளர் எஸ்.ராஜ்குமார், கைத்தறி நெசவாளர் சங்க ஒன்றிய செயலாளர் ஆர்.ரவி, விசைத்தறி தொழிலாளர் சங்க ஒன்றிய செயலாளர் பி.கிருஷ்ணமூர்த்தி, சங்க நிர்வாகக்குழு உறுப்பினர்கள் என்.பிரமுத்து, கே.லிங்கேஸ்வரன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

### தோழர் தா.பாண்டியன் நினைவு நாளில்

# மாணவர்களுக்கு பாட உபகரணங்கள்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மறைந்த தோழர் தா.பாண்டியன் அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு நாளை ஒட்டி ,அம்பத்தூர் ஐ.சி.எப். காலனி கக்கன்ஜி நகர் குடியிருப்பு வளாகத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அம்பத்தூர் பகுதி குழு சார்பில் அரசு பள்ளி மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் பென்சில் பேனா பேனா உள்ளிட்ட பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி மார்ச் 12 அன்று மாலை நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு அம்பத்தூர் பகுதி குழு செயலாளர் இரா. விஜயகுமார் தலைமை தாங்கினார். தமிழ்நாடு ஏஐடியூசி கட்டட தொழிலாளர் சங்க மாநிலச் செயலாளர் இரா.துரைசாமி வரவேற்புரை ஆற்றினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன் சிறப்பு விருந்தினராக பங்கேற்று மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் எழுது பொருட்கள் வழங்கி சிறப்புரையாற்றினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் நா.பெரியசாமி விளக்க உரையாற்றினார்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஏ. எஸ்.கண்ணன், மத்திய சென்னை மாவட்ட செயலாளர் பா.கருணாநிதி, மாவட்ட துணைச் செயலாளர் ப.மாரியப்பன், கக்கன்ஜி நகர் பொதுநல சங்கத் தலைவர் ஆர்.எஸ்.முருகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

# கன்னிவாடி தோழர் ராஜா மறைவு



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் கன்னிவாடி கிளை செயலாளர் ராஜா இயற்கை எய்தினார். அவரது உடலுக்கு சி.பி. ஐ. மாவட்ட செயலாளர் ஏ.பி .மணிகண்டன், மாவட்ட செயற்குழு உறுப்பினர் எம்.கணேசன், ஏ.எம்.மணி, எஸ்.ராஜாமணி, ஆர்.வினோத்குமார், எஸ். மீனாட்சிசுந்தரம், ஒன்றிய செயலாளர் ஒட்டன்சத்திரம் என்.சக்திவேல், தொப்பம்பட்டி ஒன்றியம் ஆர்.சிவராஜ், ஆத்தூர் ஒன்றியம் இலக்கியராஜ், நிலக்கோட்டை தாலுகா செயலாளர் ஏ.அல்லிமுத்து ஆகியோர் கலந்துகொண்டு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

### மயிலாடுதுறை மாவட்டம்

# தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் புதிய கிளை

தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம் மயிலாடுதுறை மாவட்ட குழு கூட்டம் மயிலாடுதுறையில் மாவட்ட தலைவர் தங்க சேகர் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் லோ.சுரேஷ் வேலை அறிக்கையை சமர்ப்பித்தார். இதில் மாநில குழு உறுப்பினர் எஸ்.சுந்தர் ஐயா தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்திற்கு ஆலோசனைகளை வழங்கினார். சீர்காழி வட்டத் தலைவர் செம்மலர் சி.வீரசேனன், வட்ட செயலாளர் டி. சேகர் மற்றும் புதிய தோழர்கள் கலந்து கொண்டு இலக்கிய ரீதியாக அவரவர் அனுபவத்தை எடுத்துரைத்தனர் மயிலாடுதுறை வட்டத்தில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் புதிய கிளை உருவாக்கப்பட்டு இதில் புதிய பொறுப்பாளர்களை நியமிக்கப்பட்டனர் .

# ஜனசக்தி வளர்ச்சி நிதி

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருச்செங்கோடு நகரக் குழு உறுப்பினர் பி.சாமிநாதன் ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூ.200 அளித்துள்ளார்.

## இந்த வார தம்பிக்குறள்

### 110. கற்றலும் காரணமும்

**கற்றலுக்குக் காரணம் வேண்டும்மற் றலது வெற்றிடத் தெய்யூஉம் அம்பு.**


நாம் எதற்காகப் படிக்கிறோம் என்பதைத் தெளிவாக அறிந்து படிக்க வேண்டும். குறிக்கோளின்றிப் படிப்பது, வெற்றிடத்தை நோக்கி பயனற்று அம்பு எறிதல் போலாகும். (உவமையணி)

**இட்டவித்து முட்டவே வேண்டும் இலையானால் பொட்டென்றே ஆகும் பொருள்.**

நாம் நிலத்தில் விதைக்கின்ற விதை நன்றாக முளைக்க வேண்டும். அப்படி முளைத்தால் நல்ல விதை. அப்படி முளைக்கவில்லையானால் விதைத்தது பொட்டு விதை என அறியலாம் (பயன்படாத சொற்களை, கருத்துக்களை மக்களிடம் விதைக்க வேண்டா. இது பிறிது மொழிதல் அணி.)

# நூல் நயம்

## நல்ல நூல்களே சிறந்த நண்பன்




வெவ்வேறு தோட்டங்களில் மலர்ந்த பல்வேறு மலர்களை ஒருங்கே திரட்டி அழகிய ஒரு மலர் மாலையை உருவாக்குவது போல், பல்வேறு எழுத்தாளர்கள் எழுதிய நூல்களை எல்லாம் படித்து அவை குறித்த விமர்சனங்களை எழுதி 'நல்ல நூல்களே சிறந்த நண்பன்' என்னும் புத்தகத்தை எழுதி வாசகர்களுக்கு அந்த நூலை அறிமுகப்படுத்தி உள்ளார் நூலாசிரியர் எம் .ஆர். ரகுநாதன்.

கலை இலக்கியத் துறையின் நோக்கம் மனித வாழ்க்கையின் பன்முகத்தான ஆழ, அகலங்களை வெளிப்படுத்த உதவுவதாகும். அதாவது மனித வாழ்க்கையின் சாராம்சத்தை கலை இலக்கியங்கள் வெளிப்படுத்த விமர்சனம் உதவி செய்கிறது. எவ்வாறு விதிமுறையான கலை இலக்கிய வளர்ச்சியில் விமர்சனம் தீர்க்கமான பங்கு வகிக்கிறதோ அதே அளவு முக்கியத்துவத்தை மானுடத்தின் விதிமுறையான வளர்ச்சியிலும் பெறுகிறது என்கிறார் தஸ்தயேவ்ஸ்கி. விமர்சனத்தின் மிக முக்கிய நோக்கங்களில் ஒன்று, கலை இலக்கிய படைப்புகளை மதிப்பிடுவதாகும். மதிப்பிடுதல் இன்றி விமர்சனம் பூரணமடையாது. இதனாலே தான் கலை இலக்கிய மதிப்பீடு விமர்சனத்தின் ஒரே நோக்கம் என்ற தவறான முடிவிற்கு பெரும்பாலான விமர்சகர்கள் வந்து விடுகின்றனர். விமர்சகன் தான் விமர்சிக்கும் கலை இலக்கியத்தை மதிப்பிடுவது மட்டுமல்ல , அதனை பரந்த அடிப்படையில் சமூகத்தின் கலை சுவை அனுபவங்களுடன் ஒருசேர இணைத்து நோக்குதல் வேண்டும். அது வாழ்க்கை பற்றியதும், கலை பற்றிய கண்ணோட்டங்களைத் தோற்றுவிக்கிறது என நூல் ஆசிரியர் விமர்சனத்தைப் பற்றி குறிப்பிடுகிறார்.

விமர்சனமானது கலைக்கும், வாழ்க்கைக்கும் இடையிலான தொடர்பை வெளிப்படுத்துதல் விமர்சனத்தின் இன்றியமையாத மையப் பண்பாகும். கலைஞனின் படைப்பாற்றலை ஆராய்வதும் விமர்சனத்தின் பிறிதொரு பணி ஆகும். நல்லதொரு விமர்சனம் ஒவ்வொரு கலைஞனையும் நல்ல படைப்புகளை எழுதுவதற்கு ஒரு உந்து சக்தியாகவும், நல்ல படைப்புகளை வாசகர்கள் தேடிப் படிப்பதற்கும் ஒரு சாளரமாகவும் அமையும். அந்த வகையில் பல்வேறு சிறந்த படைப்பாளர்களின் நூல்களை நூல் ஆசிரியர் எம். ஆர். ரகுநாதன் விமர்சனம் செய்து வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தி இருக்கிறார். இந்த நூலை வாசிப்பதன் மூலமாக பல்வேறு நூல்களை வாசிப்பதற்கு நமக்கு ஒரு அறிமுகம் கிடைக்கும். அந்த வகையில் இது ஒரு சிறந்த நூல்.

– இன்சுவை பாரதி

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | எம்.ஆர். ரகுநாதன் |
| பக்கம் | : | 150    விலை : 210 |
| வெளியீடு | : | நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை–50 |

## நான் இந்துவல்ல நீங்கள்...?




இந்து என்ற ஒரு சொல்லின் பெயரால் இன்றைக்கு இந்துத்துவா சக்திகள் பல்வேறு ஒடுக்கு முறைகளை சக மனிதர்கள் மீது ஏவிக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தாக்குதல்கள் பிற மதத்தவர்கள் மீது மட்டுமல்லாது, சக இந்து மனிதர்கள் மீதும், அது ஜாதியின் பேரால் நடத்தப்படுகிறது.

ஏன் இந்து, இந்துவை தாக்குகிறான் என்கிற கேள்வி நமக்கெல்லாம் எழுவது இயல்புதான். இந்து என்கிற கோட்பாட்டு வரையறைக்குள் ஒருவித மேல் தட்டு சாதியை மட்டுமே அவர்கள் இந்துக்களாகவும் . மற்றவர்களை அவர்களது அடிமைகள் அல்லது சேவகர்களாகவும் பார்க்கிற மனோவியாதியின் வெளிப்பாடு தான் இது. தங்கள் கருத்துக்கு வலு சேர்த்துக் கொள்வதற்காக மட்டுமே பலரையும் இந்துத்துவாவாதிகள் இந்துக்கள் என்று சொல்கிறார்கள்.

இதனால்தான் மிக எளிதாக சக இந்துக்களின் குடிநீரில் மலத்தை கலக்க முடிகிறது. ஆலயங்களில நுழையக்கூடாது என்று தடை விதிக்க முடிகிறது. சவுக்கால் அடித்து சாணி பால் புகட்ட முடிந்தது. இன்னும் பல்வேறு சாதிக் கொடுமைகள் நீள்கிறது. இதைக் கேள்விக்கு உட்படுத்தி தான், நான் இந்துவல்ல நீங்கள் என்கிற இந்த ஆய்வு நூலை பேராசிரியர் தொ. பரமசிவன் எழுதியுள்ளார்.

இந்து என்ற சொல், இந்தியாவில் எழுதப்பட்ட வேதங்களிலோ, உபநிஷதங்களிலோ, ஆரண்யகங்களிலோ, பிரமாணங்கள் என்று சொல்லக்கூடிய வேறு வகையான பழைய இலக்கியங்களிலோ இல்லை. இதிகாசங்களிலும் கிடையாது. இந்த சொல் பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஐரோப்பியஆய்வாளர்கள் கீழ் திசையை பற்றி ஆராய வந்தவர்கள் பயன்படுத்திய சொல் இது. இந்த சொல்லுக்கான மரியாதை என்ன என்று கேட்டால் இது வெள்ளைக்காரர்கள் கண்டுபிடித்து சொல் என்பதுதான். இந்திய மொழிகளில் எந்த மொழியிலும் இந்து என்ற சொல்லுக்கு வேர் சொல் கிடையாது. அப்படி இருக்க இந்த சொல் தான் இன்றைக்கு மதவாதிகளுக்கு ஆயுதமாக பயன்படுகிறது. அவர்கள் ஆட்சி அதிகாரத்திற்கு வருவதற்கும் ஏணிப்படியாக இருக்கிறது.

இந்த சமூகத்தை பின்னோக்கி இழுக்கும் மதவாதிகளிடமிருந்து நாட்டை மீட்டு, சமூகத்தை முன்னேற்றுவதற்கு ஒவ்வொருவரும் தங்களுடைய தொல் சமூகத்தை அறிந்து கொள்வது நல்லது. அந்த வகையில் இந்த ஆய்வு நூல் ஒரு புதிய வெளிச்சத்தை நமக்கு அளிக்கும். எனவே அனைவரும் இந்த நூலை வாங்கி படிக்க வேண்டுகிறோம்

–சமரன்

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | தொ. பரமசிவன் |
| பக்கம் | : | 20    விலை: 30 |
| வெளியீடு | : | நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை–50 |

சுழலும் உலகம்

# அமைதியை நிலைநாட்டிய மக்கள் சீனம்: அம்பலப்பட்டுப் புலம்பும் அமெரிக்கா!

சவுதி அரேபியாவுக்கும், ஈரானுக்கும் இடையேயான பகையுணர்வு பல நூற்றாண்டு கால பழமையான விஷயம் ஆகும். எனினும் நவீன கால வரலாற்றின்படி, 1979 ஆம் ஆண்டு ஈரானில் நடைபெற்ற புரட்சிக்குப்பின் ஏற்பட்ட பதற்றமான சூழல்கள் தான் பகையுணர்வாக அவ்வப்போது வெடித்துக் கிளம்பின.

1980 களின் பெரும்பகுதியான காலம், ஈரான் மற்றும் ஈராக் இடையே போர்கள் நடைபெற்று வந்தன. சவுதி அரேபியா ஈராக்கை ஆதரித்து வந்தது. அந்தக் காலகட்டத்தின் போது, ஈராக்கிற்கு ஆதரவாக அமெரிக்கா செயல்பட்டது; சட்டத்திற்கு புறம்பான வழிகளில் போர் நடவடிக்கைகளுக்காக நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்களைச் செலவிட்டது.

1979 ஆம் ஆண்டில், ஈரானில் இருந்த அமெரிக்க தூதரகத்தை ஆயுதமேந்திய போராட்டக் குழுவினர் கைப்பற்றினர்; 50க்கும் மேற்பட்ட தூதரகப் பணியாளர்கள் மற்றும் இராணுவ வீரர்களைப் பிணைக் கைதிகளாகச் சிறை பிடித்தனர். சுமார் ஓராண்டு காலம் அந்தப் பணியாளர்களைக் காவலில் வைத்திருந்தனர். இது போன்ற சூழலில், அமெரிக்க உளவாளிகள் இல்லை என்று கருதப்பட்டவர்களை ஈரான் நாட்டின் உயர்மட்ட தலைமைப் பொறுப்பில் இருந்த அயோடோல்லா கோமேய்னி விடுவித்திட உத்தரவிட்டார்.

அமெரிக்க தலையீட்டால் அந்தப் பிராந்தியத்தில் நிலவிய பதற்றம் தணியவில்லை; மாறாக, மேலும் பற்றி எரியத் தொடங்கியது. அமெரிக்காவைப் பொறுத்தவரையில், ஈரான் குறித்து நல்ல எண்ணங்களோ, அபிப்ராயங்களோ இருந்ததில்லை. அமெரிக்க உளவு நிறுவனத்தின் கூற்றுப்படி (CIA World Factbook), மனித உரிமைகள், மதச் சுதந்திரத்திற்கு எதிரான, அவற்றை அத்துமீறும் நாடு ஈரான்! ரஷ்யாவிற்கு ஆதரவாகச் செயல்படும் நாடு ஈரான்! ஒரு தேசத்தின் உளவு நிறுவனம் மற்றொரு தேசத்தின் மீது இது போன்ற குற்றச்சாட்டுகளை வெளியிடும் போது, இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது என்பது அவ்வளவு எளிதான காரியமாக இருப்பதில்லை. மேலும், ஒரு நாடு மற்றொரு நாட்டுடன் ராஜ்ஜிய உறவு கொண்டிராத பட்சத்தில், இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது என்பது மிகவும் கடினமான காரியமாக ஆகிவிடுகிறது. 1980 ல் இருந்து அமெரிக்காவிற்கு ஈரானில் தூதரகம் இல்லை. ஈரானிற்கும் அமெரிக்காவில் தூதரகம் இல்லை. எனவே, மத்திய கிழக்கு பிராந்தியத்தில் உள்ள அண்டை நாடுகளுக்கு இடையில் ஓர் அமைதி தீர்வை உருவாக்கும் உலக தலைமை ஒன்றை நாம் நாடும் பட்சத்தில், நிச்சயமாக அதில் அமெரிக்கா இடம்பெறுவதில்லை.

அமெரிக்க தலையீடு இன்றி, ஒரு ஸ்திரமான மத்திய கிழக்கு பிராந்தியத்தை உருவாக்கிடுவதற்கான ஒப்பந்தத்தை இரு நாடுகளும் ஏற்படுத்திக் கொண்டன. 1997 ல் சவுதி அரேபியாவின் பட்டத்து இளவரசர் அப்துல்லா ஈரானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டார். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, ஈரான் அதிபர் கடாமி சவுதி அரேபியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அப்போது பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றும் கையெழுத்தானது. அனைத்தும் சுமூகமாகவே இருந்தது. 2003 ல் அமெரிக்காவின் படையெடுப்பு அனைத்து நடவடிக்கைகளையும் சீர்குலைத்துவிட்டது.

ஆனால் கடந்த சில நாட்களுக்கு முன் மக்கள் சீனத்தில், நினைத்துப்பார்க்க முடியாத காரியம் ஒன்று நிகழ்ந்தது. ஈரான் மற்றும் சவுதி அரேபியா ஆகிய இரு மத்திய கிழக்கு நாடுகளின் தலைவர்களை பீஜிங் நகரில் ஒருங்கிணைத்து, 2001 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு ஒப்பந்தத்திற்கு மக்கள் சீனம் மீண்டும் உயிரூட்டி இருக்கிறது. நவீன கால வரலாற்றில் உருவான மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அமைதி ஒப்பந்தம் என்று இதனை வரலாற்றாளர்கள் பதிவு செய்வார்கள். கடந்த சில தசாப்தங்களாக மக்கள் சீனம் வெளிப்படுத்தாத வையத் தலைமையைத் தற்போது வெளிப்படுத்தி இருக்கிறது.

இந்த ஒப்பந்தம் குறித்து கருத்து வெளியிட்ட அமெரிக்க ஊடகங்கள், இந்த ஒப்பந்தத்தை ஒரு ஆச்சர்யம் என்று கூறுகின்றன. சீனாவின் நம்பகத்தன்மை குறித்து அமெரிக்க தரப்பில் இருந்து ஏராளமான பொய் பரப்புரைகள் செய்யப்படுகின்றன. ஆனால், இந்தப் பரப்புரைகளை ஈரான் மற்றும் சவுதி அரேபியா ஆகிய இரு நாடுகளும் நம்பத் தயாராக இல்லை என்பது மட்டும் மிகத் தெளிவு!

கடந்த 60 ஆண்டுகளாக, மத்திய கிழக்கு பிராந்தியத்தில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை நிறுவிட முயன்று வருவதாக அமெரிக்கா தம்பட்டம் அடித்து வந்தது. ஆனால், உண்மையில், அதன் ஆயுத விற்பனையைத்தான் அமெரிக்கா செழிக்கச் செய்ததேயொழிய, அமைதியையோ, ஸ்திரத்தன்மையையோ நிறுவிட எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை என்பது தற்போது அம்பலமாகியுள்ளது.

துருக்கி, சிரியா, ஈராக், லிபியா, ஏமென், இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனம் ஆகிய நாடுகளுக்கு இடையே மோதல் போக்கு நீடித்து வருகிறது. இந்த நாடுகள் அனைத்தும் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் உள்ள நாடுகள் ஆகும். இவற்றுக்கு இடையிலான பிரச்சனைகளுக்கு ராஜ்ஜிய முறையில் சுமூகமாகத் தீர்வு காண முடியும். ஆப்பிரிக்க கண்டத்தில் உள்ள பல நாடுகளும் கூட, அவற்றின் பிரச்சனைகளுக்கு அமைதியான முறையில் தீர்வு காணவே விரும்புகின்றன. அவை ராஜ்ஜியரீதியிலான முயற்சிகளை விரும்புகின்றனவே தவிர ஒரு போதும் இராணுவ நடவடிக்கைகளை விரும்புவதில்லை.

அமெரிக்க ஏகாதிபத்தியம் புதைத்துவிட நினைத்த ராஜ்ஜிய நடவடிக்கைகளுக்கு மக்கள் சீனம் உயிரூட்டி இருக்கிறது. சவுதி அரேபியா மற்றும் ஈரானில் மீண்டும் தூதரகங்கள் திறப்பு என்பது முதல் படியாகும். இந்த நடவடிக்கை ஏமென் நாட்டில் பதற்றத்தைத் தணிக்க அடிகோலும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய கிழக்கு பிராந்தியத்தில் இந்த அமைதி நடவடிக்கை வெற்றியடையும் பட்சத்தில் இதர பகுதிகளிலும் இந்த முன்னெடுப்பு விரிவடையும்; மக்கள் சீனத்தின் நல்ல நோக்கங்களுக்குச் சான்றாக அமைந்திடும். அதுவே உக்ரைன் பிரச்சனையில் ஆழமான கலந்தாலோசனைகளுக்கும் வித்திடும்!

ஆதாரம்: தி இண்டர்நேஷனல்
தமிழில்: அருண் அசோகன்

# தொழிற்சங்கங்களின் பிரம்மாண்ட பேரணி!

கிரீஸ் நாட்டின் ஏதென்ஸ் நகரில் கடந்த மார்ச் 12 அன்று தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புகள் இணைந்து மாபெரும் பேரணியை நடத்தின. கடந்த பிப்ரவரி 28 அன்று நடைபெற்ற இரயில் விபத்தில் 57 நபர்கள் இறந்துள்ளனர். கிரீஸ் நாட்டை உலுக்கிய இந்த இரயில் விபத்தில், குற்றம் மூடி மறைக்கப்படக் கூடாது என்பதை வலியுறுத்தியும், முதலாளித்துவ இலாபவெறி, அரசு மற்றும் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களை மேலும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்ற உறுதிப்பாட்டுடன் இந்தப் பேரணி நடைபெற்றது.

இந்தப் பேரணியில் உரையாற்றிய கிரீஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டிமிட்ரிஸ் கொத்ஸூம்பாஸ், குற்றச்செயலுக்கான தண்டனை வழங்கப்பட வேண்டும்; அவற்றை எளிதில் மறந்து போய்விடக் கூடாது; இறந்தவர்களின் உரத்த குரலாக நாங்கள் தொடர்ந்து முழங்குவோம் என்று கூறினார். இந்தப் பேரணியின் நீட்சியாக வரும் வியாழக்கிழமை 16.03.2023 அன்று தேசிய அளவிலான பொது வேலைநிறுத்தப் போராட்டம் மேற்கொள்ளப்படும் என்ற அறிவிப்பும் வெளியாகியுள்ளது.



# பெண்களுக்கு அரசியலில் 33% இடம் வழங்கப்பட வேண்டும்



## உலக மகளிர் தின கருத்தரங்கில் தீர்மானம்









**கோவை:** உலக மகளிர் தின கருத்தரங்கம் கோவை ஜீவா இல்லத்தில் இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் சார்பில் நடைபெற்றது. இந்தக் கருத்தரங்கத்திற்கு சம்மேளனத்தின் மாவட்ட தலைவர் எம்.நிர்மலா தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் கே.சுமதி முன்னிலை வகித்தார். சுஜாதா பாலதண்டாயுதம், கலை அஸ்வினி ஆகியோர் கருத்தரங்கில் பேசினர்.

இந்தக் கருத்தரங்கில் இந்தியாவில் சட்டமன்றம், நாடாளுமன்றம் இவற்றில் 33 சதவீத இட ஒதுக்கீடு நீண்ட கால கோரிக்கையாக மட்டுமே உள்ளது.

பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தல்கள் அதிகரித்த வண்ணம் உள்ளது. பணி செய்யும் இடங்களில் ஆண்களுக்கு நிகராக பெண்கள் அதே வேலையை செய்தாலும் கூட அவர்களுக்கு குறைவான ஊதியமே வழங்கப்படுகிறது. சம வேலைக்கு சம ஊதியம் என்ற நிலை இன்னும் எட்ட போடவில்லை என்பன உள்ளிட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

மறைந்த தலைவர் கீதா முகர்ஜி உருவப்படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. முன்னதாக இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் கொடியை மாவட்ட தலைவர் எம்.நிர்மலா ஏற்றி வைத்தார். இந்த நிகழ்ச்சிகளில் கோயமுத்தூர் மாநகராட்சியில் சிறப்பாக பணியாற்றிய மாமன்ற உறுப்பினர் பிரபா ரவீந்திரன், மாமன்ற உறுப்பினர் சாந்தி சந்திரன், மைலம்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் சாரதா மணி குமார் ஆகியோருக்கு சால்வை அணிவித்து கௌரவிக்கப்பட்டது. ஜே. கலா, மாவட்டத் துணைச் செயலாளர் ஜோதீஸ்வரி, சி.நந்தினி உள்ளிட்ட கலந்து கொண்டனர்.

**விருதுநகர்:** விருதுநகர் சிபிஐ அலுவலகத்தில், இந்திய மாதர் தேசிய சம்மேளனம் சார்பில் கொடியேற்றுவிழா மற்றும் இருசக்கர விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. மாவட்ட தலைவர் மாரீஸ்வரி தலைமை வகித்தார். ஒன்றிய செயலாளர் சிவசக்தி முன்னிலை வகித்தார். ஒன்றிய தலைவர் பழனியம்மாள் மாதர் சங்க கொடியை ஏற்றி வைத்தார். விருதை பெரியார் வி.வி.ஆர். சிலையிலிருந்து விஜயலட்சுமி தலைமையில் இருசக்கர வாகன பேரணி புறப்பட்டது. தி.க. பெண்கள் அணி மாவட்ட அமைப்பாளர் பொன்மேனி இராஜயோகம் தொடங்கி வைத்தார். முக்கிய சாலை வழியாக சென்று, தமிழ்நாடு பெயர் வைக்க உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த தியாகி சங்கரலிங்கனார் மணி மண்டபத்தில் அவரது சிலைக்கு மாலை அணிவித்து பின், பேரணியாக சென்று பாரதியார் சிலைக்கு மாலை அணிவித்து முடிவுற்றது. ஐப்சோ மாவட்ட தலைவர் எஸ்.பழனிக்குமார், சிபிஐ மாநில குழு உறுப்பினர் பாலமுருகன், ஒன்றிய செயலாளர் சக்கணன், நகர செயலாளர் முத்துக்குமார், தஓவாஇ முருகேசன், ஏஐடியுசி அலியார் ஆகியோர் வாழ்த்தி பேசினர். செய்யதலிபாத்திமா நன்றி கூறினார்

**மணப்பாறை:** இந்திய தேசிய மாதர் சம்மேளன மணப்பாறை நகரக்குழு சார்பில், சர்வதேச மகளிர் தினம் 19 வது வார்டில் நடைபெற்றது.மாவட்டத்தலைவர் கவிதா தலைமை வகித்தார். மாவட்ட துணைச் செயலாளர் ரஹமத்துன்னிசா, உமா, சுவேதா நித்யா, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் பெண்களுக்கு இடையிலே மியூசிக்கல் சேர், லெமன் ஸ்பூன் போன்ற பல போட்டிகள் நடந்தது. நகர்மன்ற உறுப்பினர் மனோன்மணி வாழ்த்துரை வழங்கினார்.

கிருஷ்ணவேணி, ராணி, ரஷ்யா ஆகியோர் பரிசுகள் வழங்கினர். இறுதியாக பெண்கள், சிறுமிகள் நடனமாடி வாழ்த்துக்களை பறிமாறிக் கொண்டனர். நகரத்துணைச் செயலாளர் காவேரி நன்றி கூறினார்.

**இலளிகம்:** சர்வதேச மகளிர் தின கருத்துரை கூட்டம் இலளிகம் தியாகி ஆர்.பச்சாகவுண்டர் நினைவுபடிப்பகத்தில் அலுமேலு எத்துராஜ் தலைமையில் நடைபெற்றது. இதில் மகளிர் குழு முன்னோடி தமிழ் செல்விமணி மகளிர் தினம் குறித்து பேசினார். இலளிகம் முன்னாள் ஊராட்சி தலைவர் ஜெ.பிரதாபன் மகளிர் தின கருத்துரை வழங்கினார். முன்னதாக காளியம்மாள் வரவேற்றார். வனஜா நன்றி உரையாற்றினார். திரளான மகளிர் கலந்து கொண்டார்.

**வேதாரண்யம்:** நாகை மாவட்டம், வேதாரண்யத்தில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் சார்பில் உலக மகளிர் தினத்தையொட்டி வாங்க பேசலாம் இலக்கிய அமர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. கவிஞர் வி.புவனேஸ்வரி தலைமை வகித்தார். தமிழ்த்துறை ஆய்வு மாணவி த.சுகன்யா, கவிஞர் ப.சௌமியா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நாள்தோறும் 120 கிலோ மீட்டர் தொலைவு இரு சக்கர மோட்டார் சைக்கிளில் பயணித்து மீன் வியபாரம் செய்யும் த.பஞ்சவர்ணம், பாரம்பரிய நெல் ரகங்கள் மீட்பு, சிறுதானிய உணவு தயாரிப்பில் முனைப்புக்காட்டும் கத்தரிப்புலம் ஆர்.எஸ்.சித்ரா ஆகியோர் தங்களின் அனுபவங்களை பகிர்ந்துக் கொண்டனர்.

இவர்களை,அரசுக் கல்லூரி பேராசிரியை அ.மாரிமுத்து, சமூக செயல்பாட்டாளர் ஆசிரியை மு.வசந்தா ஆகியோர் கௌரவித்து பேசினர்.

ஓவியத்தில் முனைப்புக்காட்டும் கல்லூரி மாணவி நித்யா உள்பட மாணவ,மாணவியர் உரையாற்றினர். கோவி. ராசேந்திரன்,ஆசிரியர் வீ.சதீஷ் உள்ளிட்டோர் பெண்ணியம் சார்ந்த பாடல்களை பாடினர்.

நிகழ்ச்சியில், பேராசிரியர் ப.பிராபாகரன், கலை இலக்கியப் பெருமன்ற மாநிலக் குழு உறுப்பினர் எம்.ஆர்.சுப்பிரமணியம், மாவட்டப் பொருளாளர் கா.கைலாசம், மாவட்டத் துணைத் தலைவர் ப.பார்த்தசாரதி, கவிஞர் வீ.கார்த்தி உள்ளிட்டோர் பேசினர்.

நிகழ்ச்சியினை, கலை இலக்கியப் பெருமன்றத்தின் நாகை மாவட்டச் செயலாளர் தென்னடார் அம்பிகாபதி ஒருங்கிணைத்தார்.

**தருமபுரி:** ஏஐடியூசி கட்டுமானம், ஆஷா பணியாளர்கள், உள்ளாட்சி பெண் தொழிலாளர்கள் சங்கம் சார்பில் உலக மகளிர் தினம் கருத்தரங்கம் தருமபுரியில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு ஆஷா பணியாளர்சங்க மாவட்ட தலைவர் மேனகா தலைமை வகித்தார். பெண் கட்டுமான தொழிலாளர் சங்க மாவட்ட தலைவர் முனியம்மாள், மாவட்ட செயலாளர் விஜயா,தூய்மை பணியாளர் லட்சுமி முன்னிலை வகித்தனர்.

மாதர் சம்மேளனத்தின் மாநிலக்குழு உறுப்பினர் விஜயா இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் எஸ்.கலைச்செல்வம், ஏஐடியூசி மாவட்ட பொது செய்லாளர் கே.மணி, மாவட்ட துணை செயலாளர் ஏ.சி.மணி, விசைத்தறி மாவட்ட செயலாளர் சாமிநாதன் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

**மதுரை:** மதுரை கிழக்கு ஒன்றியம் வெள்ளியன்குன்றம் புதூர் பகுதியில் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, ‘‘மதச்சார்பின்மையை பாதுகாப்போம்‘‘ மதவெறிச்செயல்களை முறியடிப்போம்‘‘ என்ற தலைப்பில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு விழிப்புணர்வு பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக்குழு உறுப்பினரும், இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் மாநில துணைச் செயலாளருமான கண்ணகி, என்.எஃப்.ஐ.டபுள்யு புறநகர் பொறுப்புச் செயலாளர் நாகஜோதி சிறப்புரை ஆற்றினர். மேலும் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் மதுரை மாவட்டப் பொறுப்பாளர் கலைவளர் ஜெயக்குமார் பறை இசையுடன் கூடிய ‘‘பெண் விடுதலை’’ என்ற தலைப்பில் விழிப்புணர்வு பாடல்களை பாடினார். என்.எஃப்.ஐ.டபுள்யு மாநிலக் குழு உறுப்பினர் சூரியகலா நன்றியுரை வழங்கினார்.

சர்வதேச மகளிர் தினத்தில், இந்திய மாதர் தேசிய சம்மேளனம் மதுரை புறநகர் மாவட்டம் கப்பலூர் சார்பில், ‘‘மதச்சார்பின்மையை பாதுகாப்போம்‘‘ மதவெறிச்செயல்களை முறியடிப்போம்‘‘ என்ற தலைப்பில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு என்.எஃப்.ஐ.டபுள்யு மாநிலக் குழு உறுப்பினர் சூரியகலா தலைமையில் விழிப்புணர்வு பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் என்.எஃப்.ஐ.டபுள்யு புறநகர் மாவட்டப் பொறுப்புச் செயலாளர் நாகஜோதி, சி.பி.ஐ மாவட்டக் குழு உறுப்பினர் செல்லவேலு மகளிர் தினத்தை வாழ்த்தி சிறப்புரையாற்றினர்.

## திருமண விழாவில் ஜனசக்தி வளர்ச்சி நிதி

வடசென்னை மாவட்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 46வது வட்ட கிளைச் செயலாளர் என்.மூர்த்தி – எம்.விஜயா ஆகியோரின் மகன் மூ.ஜீவபாரதிக்கும், திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம், திருவிழிமிழலை கலுங்குடி தெரு டி.எம்.சௌந்தர்ராஜன் – தேவி ஆகியோரின் மகள் சௌ. சௌந்தர்யாவுக்கும் மார்ச் 13 அன்று வடபழனி ஆண்டவர் திருக்கோவிலில் திருமணம் நடைபெற்றது.

மாலையில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், தி.மு.க. மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஆர்.டி.சேகர், சிபிஐ மாவட்டச் செயலாளர்கள் வடசென்னை த.கு.வெங்கடேசன், மத்திய சென்னை பா.கருணாநிதி, தென்சென்னை எஸ்.கே.சிவா உள்ளிட்டோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். இதில் மணமக்கள் சார்பில் ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூ.5000 இரா. முத்தரசனிடம் வழங்கினர்.



JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
**Posted on 18.03.2023 at Egmore RMS 1 / Patrika Channel.**
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

# மாமேதை காரல் மார்க்ஸ் நினைவு தினம்





**மாமேதை காரல் மார்க்சின் 140வது நினைவு தினம் மார்ச் 14 அன்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில தலைமை அலுவலகமான சென்னை பாலன் இல்லத்தில் நடைபெற்றது.**

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் காரல் மார்க்ஸ் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பேசினார். மாநில துணைச் செயலாளர் நா.பெரியசாமி, விருதுநகர் மாவட்டச் செயலாளர் பொ.லிங்கம் எக்ஸ்.எம்.பி. வடசென்னை மாவட்டச் செயலாளர் த.கு.வெங்கடேஷ்வேம்புலி, மத்திய சென்னை மாவட்டச் செயலாளர் பா.கருணாநிதி, தென் சென்னை மாவட்டச் செயலாளர் எஸ்.கே.சிவா உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு திருவுருவப்படத்திற்கு மரியாதை செலுத்தினர்.

**செங்கல்பட்டு:** சிங்கபெருமாள் கோயில் ரத்னா திருமண மண்டபத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் ஏ.ராஜ்குமார் தலைமையில் மார்க்சியத்தின் இன்றைய தேவை குறித்து கருத்தரங்கம் நடைபெற்றது. சிபிஎம் செங்கல்பட்டு மாவட்ட செயலாளர் பாசு.பாரதி அண்ணா, மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சியின் செங்கல்பட்டு மாவட்ட செயலாளர் சொ. இரணியப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிபிஎம் மாநில குழு உறுப்பினர் ஐ.ஆறுமுகநயனார், மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சியின் மாநில குழு உறுப்பினர் கிருஷ்ணவேணி, பாட்டாளி வர்க்க சமரங்கனின் சார்பாக எம்.மனோகரன் ஆகியோர் மார்க்சியத்தின் அவசியம் குறித்து உரையாற்றினர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணை செயலாளர் மு. வீரபாண்டியன் நிறைவுறையாற்றினார். சிபிஐ முன்னாள் மாவட்ட செயலாளர் எல்.மேகநாதன் மாவட்ட துணை செயலாளர் வி.வீராசாமி, மாவட்ட குழு உறுப்பினர் கேவி.சேகுவேராதாஸ், ஏஐடியூசி மாநில குழு உறுப்பினர் ரவிச்சந்திரன் கலை இலக்கிய பெருமன்றம் மாவட்ட செயலாளர் ராமலிங்கம் மற்றும் இடதுசாரி அமைப்பை சார்ந்த தோழர்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

**தஞ்சை:** தஞ்சாவூர் கீழ ராஜவீதி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற காரல் மார்க்ஸ் 140 வது நினைவு நாள் நிகழ்ச்சிக்கு மாவட்ட பொருளாளர் என். பாலசுப்பிரமணியன் தலைமை வகித்தார். மூத்த தலைவர் ஜி. கிருஷ்ணன், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் சி.சந்திரகுமார், மாநகரச் செயலாளர் ஆர்.பிரபாகர், மாவட்ட குழு உறுப்பினர்கள் ட.கோவிந்தராஜ், குணசேகரன் ,மாநகர குழு உறுப்பினர்கள் எஸ்.தியாகராஜன், கே.கல்யாணி, ஆசிரியர் ஒய்வு சுந்தரமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர். முடிவில் மார்க்சியத்தை மக்களிடம் கொண்டு செல்வோம், சுற்றுச்சூழலை பாதுகாப்போம், வர்க்க போராட்டத்தை மேலும் கூர்மையாக்குவோம் என்று உறுதிமொழி ஏற்கப்பட்டது.

தஞ்சாவூர் ரெயிலடி முன்பு எழுத்தாளர் சாம்பான் தலைமையில் நினைவு நாள் நிகழ்ச்சி நடைபெற்றது. இடதுசாரிகள் பொது மேடை ஒருங்கிணைப்பாளர் துரை .மதிவாணன் முன்னிலை வகித்தார். மக்கள் அதிகாரத்தின் மாநில பொருளாளர் காளியப்பன் நிகழ்வினை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநகர துணைச் செயலாளர் ஆர்.பி.முத்துக்குமரன், மாநகர குழு உறுப்பினர் இரா.செந்தில்நாதன் மற்றும் சிபிஐஎம், வி.சி.க. சி.பி.எம்.எல். மக்கள் விடுதலை உள்ளிட்ட கட்சிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**மதுரை:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மதுரை புறநகர் மாவட்டம் யா.ஒத்தக்கடை நகரக் கிளை சார்பாக, காரல் மார்க்ஸின் திருவுருவப் படத்திற்கு மாநில கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் காளிதாஸ் தலைமையில், நகர் கிளைச் செயலாளர் கார்த்திக் முன்னிலையில் மலர்கள் தூவி மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வில் மூத்த தோழர் கணேசன், துணைச் செயலாளர் கண்ணன், பொருளாளர் பாண்டியன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# புதுப்பிக்கப்பட்ட தோழர் ஜீவா பூங்கா, சிலை திறப்பு விழா

வடசென்னை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.92 லட்சத்தை ஒதுக்கீடு செய்து, தோழர் ஜீவா பூங்கா மற்றும் சிலை புதுப்பிக்கப்பட்டு, கலாநிதி வீராசாமி தலைமையில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு, ஜீவா பூங்கா மற்றும் சிலையை திறந்து வைத்தார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன், துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், திமுக வட சென்னை மாவட்ட செயலாளர் தா.இளைய அருணா, ஆர்.கே. நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தோழர் எம்.எஸ்.மூர்த்தி, வடசென்னை மாவட்ட செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி, மத்திய சென்னை மாவட்ட செயலாளர் பா.கருணாநிதி, தென் சென்னை மாவட்ட செயலாளர் எஸ்.கே.சிவா, நான்காவது மண்டல குழு தலைவர் நேதாஜி யு.கணேசன், ஆர்.கே.நகர் தொகுதி செயலாளர் எம். ஜெய்சங்கர், 42வது வட்ட மாமன்ற உறுப்பினர் மோ.ரேணுகா மற்றும் ஏராளமானோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.





## ஆன்லைன் ரம்மி தடை சட்டத்தை திருப்பி அனுப்பிய

# ஆளுநர் ரவியை கண்டித்து ஆர்ப்பாட்டம்



44 மனித உயிர்களை பலி வாங்கிய ஆன்லைன் ரம்மி சூதாட்டத்திற்கு தடை விதிக்க தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றிய மசோதாவை நிலுவையில் வைத்து, ரம்மி சூதாட்ட முதலாளிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய பிறகு, ஆணவ போக்குடன் மசோதாவை திருப்பி அனுப்பியுள்ள அராஜக ஆளுநர் ஆர்.என்.ரவியை கண்டித்து மார்ச் 11 அன்று சென்னை தங்கசாலை மணிகூண்டு அருகில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

வடசென்னை மாவட்ட செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி தலைமை தாங்கினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் இரா.முத்தரசன் துவக்கவுரை ஆற்றினார்.

மத்திய சென்னை மாவட்ட செயலாளர் பா.கருணாநிதி, தென் சென்னை மாவட்ட செயலாளர் எஸ்.கே.சிவா, வடசென்ளை மாவட்ட துணை செயலாளர்கள் ஜீ.சுப்ரமணி, எம்.ஜெய்சங்கர், வடசென்னை மாவட்ட பொருளாளர் கீ.சு.குமார், மத்திய சென்னை மாவட்ட துணை செயலாளர்கள் இரா.ரஞ்சித், பி.மாரியப்பன், மத்திய சென்னை மாவட்ட பொருளாளர் மு.வரதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநில துணை செயலாளர் மு.வீரபாண்டியன் நிறைவுரை ஆற்றினார். இந்தப் போராட்டத்தில் பெண்கள் உள்பட நூற்றுக்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.